# விவேக வாஹினி

## இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலை

### பொன்விழா மலர்

50

1952 - 2002



30.6
ராம
L/PR

ராமகிருஷ்ண மிஷன், கொழும்பு

# VIVEKA VAHINI

## GOLDEN JUBILEE COMMEMORATION VOLUME

*of*

## RAMAKRISHNA MISSION SUNDAY RELIGIOUS SCHOOL, COLOMBO

# 1952 - 2002

"Education is the manifestation of the perfection already in man"

*- Swami Vivekananda*

# விவேக வாஹினி

## இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலையின்
## பொன்விழா மலர்

**RAMAKRISHNA MISSION**

40, Ramakrishna Road, Colombo - 00600

*Tel: +94-1-588253* *e-mail: rkmcey@eureka.lk*

**Published by:**
The Swami-in-Charge
Ramakrishna Mission,
40, Ramakrishna Road,
Colombo, Sri Lanka.

**Released on:** 15.09.2002

**Designed by:**
Ramakrishna Mission Sunday Religious School Teachers

**Printed by:**
Gowriy Printers
207, Sir Ratnajothi Saravanamuthu Mw.
Colombo - 13, Sri Lanka
Tele/Fax: +94-1-423433

## OUR COVER

**Front Cover:**

Up: *Sri Ramakrishna Temple at Belur, Kolkata (Head Quarters of Ramakrishna Mission & Ramakrishna Math), Holy Trio & Sri Ramakrishna Temple at Colombo, are in the background. Children of the Sunday Religious School are in the process of realising their full potential under the shade and guidance of Holy Trio. The foot steps represent the steady growth of the Sunday Religious School to accomplish its fifty years of meaningful existence.*

**Back Cover:**

*Main Buildings at Colombo Ramakrishna Mission, where the classes of the Sunday Religious School are held; Selected paintings by the children of Sunday Religious School; Golden Jubilee badge.*

# CONTENTS


**Page No.**

**01. Messages**

Message from Most Revered Srimat Swami Ranganathanandaji Maharaj ... 1

Message from Srimat Swami Gahananandaji Maharaj ... 2

Message from Srimat Swami Atmasthanandaji Maharaj ... 4

Message from Srimat Swami Smaranandaji Maharaj ... 5

**02.** முன்னுரை ... 6
- *சுவாமி ஆத்மகனானந்தஜி*

**03.** The Story of the Ramakrishna Mission Sunday Religious School ... 7
- *Swami Jivananandaji*

**04.** மகான்களின் உயர்வுக்கு அவர்களது பெற்றோரின் பங்களிப்பு ... 11
- *சுவாமி அஜராத்மானந்தஜி*

**05.** பண்பாட்டுக் கல்வியில் மனத்தைப் பண்படுத்துவதின் முக்கியத்துவம் ... 15
- *திருமிகு ந. கிருஷ்ணமூர்த்தி*

**06.** செவ்விய வாழ்வு நல்கும் சீரியதோர் கூடம் ... 20
- *செல்வி வ. கணபதிப்பிள்ளை*

**07.** அறநெறிப் பாடசாலையில் எனது அனுபவங்கள் ... 24
- *செல்வி காயத்திரி அ.*

**08.** கல்வி ... 25
- *சுவாமி விவேகானந்தர்*

**09.** பண்பு ... 31
- *சுவாமி விவேகானந்தர்*

**10.** Reminiscences of an old boy of the Sunday Religious School ... 34
- *Mr. N. Sivakurunathan*

**11.** அறநெறிப் பாடசாலைகள் நெறிப்படுத்தும் உயர் விழுமியங்கள் ... 37
- *செல்வி கஜவதனி கந்தசாமி*

**12.** மறக்கவொண்ணா நினைவலைகள் ... 39
- *பருத்தியூர் பாலவயிரவநாதன்*

13. யோகக் கலை ... 41

- *செல்வன் பிரசாத் சண்முகநாதன்*

14. மேலை நாகரீகத்தின் தாக்கம் ... 44

- *செல்வி சீரடி தயாநிதி சு., செல்வி நிவேதிதா மோ.*

15. சுவாமி விவேகானந்தர் காட்டிய சமுதாயக் கடமைகள் ... 47

- *செல்வி ரஜிலேகா அம்பிகாவதி*

16. அறநெறிப் பாடசாலை வாழ்க்கைக்கு வழிகாட்டும் ... 50

- *செல்வி கிருத்திகா சண்முகநாதன்*

17. ஒன்றே குலம் ... 52

- *செல்வி சத்தியா வாமதேவன்*

18. ஒருவனே தேவன் ... 54

- *செல்வி தர்ஷிகா தாமோதரம்*

19. மாணவர்கள் சேமித்து வழங்கிய பண விபரம் ... 55

20. பொன்விழா போட்டிகளின் முடிவுகள் ... 60

21. கண்காட்சி பற்றி பொதுமக்களின் கருத்துக்கள் சில..... ... 68

22. பொன்விழா ஆண்டு செயற்திட்ட அறிக்கை ... 70

********

**RAMAKRISHNA MATH**
**P.O. BELUR MATH, DIST. HOWRAH**
**WEST BENGAL - 711 202, INDIA**

# MESSAGE

**My dear Atmaghanananda,**

I received your e-mail of 30th May and am happy to learn that your Sunday Religious School is completing 50 years on the Sri Krishna Jayanti, 31st August 2002. You intend to celebrate the occassion with a special programme on 15th September 2002 and want me to send a message to mark the occassion. I gladly send it herewith-

If children get some higher ideas at a young age it will be good for them in their future lives. You all are doing this good work. Eight hundred children is a good number. I hope this good work will continue and more children will benefit from this school.

Accept my love and blessings and convey the same to all the children and staff involved in the school.

Affectionately Yours

*Swami Ranganathananda*
President,
Ramakrishna Math & Ramakrishna Mission

**RAMAKRISHNA MATH**
P.O. BELUR MATH, DIST. HOWRAH
WEST BENGAL - 711 202, INDIA

## MESSAGE

I am glad to know that Ramakrishna Mission, Colombo will be publishing a commemorative Souvenir highlighting the message and legacy of Ramakrishna-Vivekananda on the occasion of the completion 50 years of its Sunday Religious School. On this occasion let us recall the Mantra-like inspiring and invigorating messages of Swami Vivekananda.

About Bhagawan Sri Ramakrishna Swami Vivekananda has asserted, "From the very date that he was born, has sprung the **Satya-Yuga** (Golden Age). Henceforth there is an end to all sorts of distinctions, and everyone down to the Chandala will be a sharer in the Divine Love. The distinction between man and woman, the rich and the poor, the literate and the illiterate, Brahmins and Chandalals - he lived to root out all. And he was the harbinger of Peace - the separation between Hindus and Mohammedans, between Hindus and Christians, all are now things of the past. That fight about distinctions that there was, belonged to another era. In this Satya-Yuga the tidal wave of Shri Ramakrishna's Love has unified all."

Swamiji writes, "My whole ambition in life is set in motion a machinery which will bring noble ideas to the door of everybody, and then let men and women settle their own fate." and further he writes, "...I must see my machine in strong working order, and then knowing sure that I have put in a lever for the good of humanity, in India at least, which no power can drive back, I will sleep, without caring what will be next,...." With this in mind Swami founded the Ramakrishna Mission in 1897 'for the good of many, for the welfare of all', and he declares, "My ideal indeed can be put into a few words and that is: to preach unto mankind their divinity, and how to make it manifest in every movement of life.... Who will give the world light? Sacrifice in the past has been the Law, it will be, alas, for ages to come. The earth's bravest and best will have to sacrifice themselves for the good of many, for the welfare of all. Buddhas by the hundred are

necessary with eternal love and pity." Ramakrishna Mission Centres all over the world are serving the humanity Swamiji's vision in mind.

Swamiji has expanded the concept of Seva to such a huge gamut - to one of his disciples he would say, just sit with a pitcher full of water and a glass by the side of the road during the summer and serve water to the thirsty passer by; to the other erudite scholar Sarat Chandra Chakravorty, writer of *Swami Shishya Samvada* (published as conversations and Dialogues - 'From the Diary of a Disciple' in the complete works of Swami Vivekananda), who was vacillating regarding his ability and means for serving others, he would say - what do you mean? Does it always require to have lots of money to serve others? It is heart, it is feeling that is required. Can't you even tell a few words of solace to the suffering and grieving ones? Isn't that a worthy service? The feeling for all, the all embracing love, and the spontaneous attitude of service that flows forth there from is most important.

Swamiji has asserted, "It may be that I shall find it good to get outside of my body - to cast it off like a disused garment. But I shall not cease to work! I shall inspire men everywhere, until the world shall know that it is one with God." I pray that the publication of the souvenir succeed in kindling and nurturing such flame of spirituality, of service, of work and worship and of 'Harmony and Peace', Love and Universal brotherhood - amongst all the 'Children of Immortality'.

*Swami Gahanananda*
Vice-President,
Ramakrishna Math & Ramakrishna Mission

**RAMAKRISHNA MATH**
**P.O. BELUR MATH, DIST. HOWRAH**
**WEST BENGAL - 711 202, INDIA**

**Sri Sri Ramakrishna Sharanam!**

# MESSAGE

It is matter of great joy to know that the Sunday Religious School at our Colombo centre, which is one of the biggest and oldest Sunday Religious Schools in Sri Lanka, has completed fifty years of its meaningful existence.

I am glad to know that a Souvenir, containing learned articles will be published on this occassion.

I wish the Golden Jubilee Celebration a grand success.

*Swami Atmasthananda*
Vice-President,
Ramakrishna Math & Ramakrishna Mission

**RAMAKRISHNA MATH**
P.O. BELUR MATH, DIST. HOWRAH
WEST BENGAL - 711 202, INDIA

## MESSAGE

Dear Atmaghanananda,

I am very glad to learn that the Sunday Religious School for children is completing its 50 years of useful service on 31st August 2002. Indeed, it is a boon to the new generation who get an opportunity to know about our hoary culture and spiritual heritage. It is really gratifying to learn that the Sunday Religious School there is serving 800 children.

It is also nice that you will be bringing out a special souvenir on the occasion. I am sure that it will contain useful articles.

May the golden jubilee celebrations of the Sunday Religious School be a grand success by the grace of Bhagawan Sri Ramakrishna, is my prayer.

My love and best wishes to you and other brothers there and especially to the children studying at the Sunday Religious School.

Yours affectionately,

*Swami Smaranananda*
General Secretary,
Ramakrishna Math & Ramakrishna Mission

**RAMAKRISHNA MISSION**
*(Ceylon Branch)*
**40, RAMAKRISHNA ROAD,**
**COLOMBO - 6, SRI LANKA.**

# முன்னுரை

எமது ஞாயிறு சமய பாடசாலையின் ஆண்டு மலராகிய 'விவேகவாஹினி' இவ்வாண்டின் பொன் விழாவையொட்டி, பொன் விழா சிறப்பு மலராக வெளிவருகிறது.

மாணவர்களிடையே நற்சிந்தனையையும், நல்லொழுக்கத்தையும் வளர்ப்பதுவே இப்பாடசாலையின் நோக்கம். ஞாயிறுதோறும் இப்பாடசாலைக்கு வருகை தந்து, இங்கு பயிற்றுவிக்கப்படும் பூஜை, பஜனை, பிரார்த்தனை, தியானப் பயிற்சிகளிலும், சேவைப் பணிகளிலும், ஏனைய சமய நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பதன் மூலம், மாணவர்களது மனம் படிப்படியாக பண்பட்டு ஒழுக்கத்தில் நிலை பெறுகிறது.

இன்று உலகம் மிகவும் முக்கியமாக வேண்டி நிற்பது ஒழுக்கத்தையே என்பதை இன்றைய உலகப் போர்ச்சூழல் உணர்த்தும் நிலையில், சமய பாடசாலைகளின் செயற்பாடு அதிக முன்னுரிமை பெறுகிறது எனக் கூறத்தேவையில்லை.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் எமது பாடசாலை இந்நாட்டின் சிறந்த சமய பாடசாலைகளுள் ஒன்றாக வளர்ந்து, இன்று பொன் விழாவைக் கொண்டாடுவதற்கு பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவருள் துணை நின்றதையெண்ணி உவகை கொள்கிறோம்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்குத் தங்களது சேவையை, இறைவழிபாடாக நல்கிய முன்னாள் ஆசிரியர்களுக்கும், தற்போது சேவை நல்கி வரும் ஆசிரியர்களுக்கும் ஸ்ரீகுருதேவரது திருவருள் பூரணமாக அமையப் பிரார்த்திக்கிறோம்.

இப் பொன்விழாவையொட்டி கடந்த ஒரு ஆண்டு காலமாக இந்நாட்டின் பல பின்தங்கிய பகுதிகளில் நடைபெற்றப் பல்வேறு சேவைப் பணிகளுக்கென எமது மாணவர்கள் உண்டியல் பணம் சேமித்து அளித்ததையும், அச்சேவைகளில் ஆர்வத்துடன் பங்கேற்றதையும் பெருமையுடன் நினைக்கிறோம்.

இப் பாடசாலைக்குத் தமது குழந்தைகளை வாரந்தோறும் தவறாது அனுப்பியும், இங்கு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஆர்வத்துடன் பங்கேற்க அவர்களை ஊக்கப்படுத்தியும், தங்களாலான உதவிகளையும், ஒத்துழைப்பையும் நல்கி வரும் பெற்றோர்களை-யும் இத்தருணத்தில் மனதார வாழ்த்துகிறோம்.

எமது அன்புச் செல்வங்களின் தூய உள்ளங்களின் படைப்பாகிய இச்சிறப்பு மலரை ஸ்ரீகுருதேவரது திருப்பாதங்களில் சமர்ப்பித்து அவரது திருவருளை இறைஞ்சுகிறோம்!

*சுவாமி ஆத்மகனானந்தா*
தலைவர், ராமகிருஷ்ண மிஷன்

# THE STORY OF THE RAMAKRISHNA MISSION SUNDAY RELIGIOUS SCHOOL, COLOMBO.

*by Swami Jivananda*

On this historic occasion, when we are celebrating the golden jubilee of the Sunday Religious School in Colombo, it will be worthwhile reflecting as to what induced Srimat Swami Asanganandaji Maharaj – the founder, to embark on this venture. The Swami had served the Mission in Ceylon as its Vice President from 1933-1941 and again in 1952. Serving in Ceylon for more than eight years he realized the need for Hindu children attending the prestigious schools in the metropolis, to be instructed in their own religious faith. There was also an earnest request from the devotees of the Mission for the starting of the religious classes in Hinduism.

With the blessings of Bhagavan Ramakrishna Deva, the Sunday Religious School was inaugurated by Swami Asanganandaji Maharaj, on Sunday the 17th August 1952, on the sacred Sri Krishna Jayanthi Day, with 15 children on roll and in the presence of a few devotees. The curriculum comprised the study of the tenets of Hinduism, rendition of Thevarams, Thiruvasagams, Gita chanting, the study of the lives of saints, and directing the children towards character building. This lamp for religious instruction, lit in 1952, was soon to shed its beam freely to all school going Hindu children who came under its benign influence. The classes were conducted between 9.15 and 10.15 a.m. every Sunday. By the end of the first year the number on roll was 250 with 12 honorary teachers giving their dedicated services.

In December 1952, the Government of Ceylon made an earnest request to the Mission to consider the possibility of starting Hindu religious classes at the training school for the youthful offenders (delinquents) at Watupitiwela. Swami Asanganandaji, in charge of the Colombo Ashrama, kindly acceded to the request and the Hindu religious classes were inaugurated on 13th December 1952. These classes worked as an extension to the Sunday religious school activities. It is needless to say that these classes proved useful to the inmates. The participants showed remarkable improvement in their conduct and in their way of life. These classes were functioning till the end of July 1983.

The 1st anniversary of the Sunday religious school was celebrated on Sunday 6th September 1953 in which prizes were awarded to 62 meritorious students for religious knowledge, bhajan and attendance, and all other children in the classes were given portraits of deities as consolation prizes. The school, over the years, proved its usefulness to the children of the Hindu community. But unfortunately it had a set back due to civil disturbances in May 1958. Many families left Colombo and thereby the number of students attending the classes dwindled. Due to this the school did not celebrate its anniversary in 1958. Soon the situation changed, the school started working and in September 1959 it celebrated its 9th anniversary. Under the auspices of the Sunday school a selection of devotional songs in Tamil and Sanskrit was compiled and pub-

lished, under the title *"Bhajanavali"*. This book proved an asset not only to the Sunday school children but also to the public. The book received appreciation from those who made use of it.

In 1961, Swami Sriranganandaji Maharaj joined the Colombo Centre as its worker. He took a great interest in the activities of the Sunday school. The students were taught music in a systematic manner and were trained in singing devotional songs.

In January 1966, the Government declared *'poya'* days as holidays instead of Sundays. Hence classes were held on poya holidays. The activities of the school continued as usual and it progressed steadily. There were 358 students and 18 teachers on 14.11.1982, the 30th anniversary celebration took place.

Unfortunately in July 1983 there was an outbreak of ethnic violence. Many families were forced to leave Colombo and seek shelter elsewhere. This affected the running of the school to a great extent. The attendance dropped to 24 students and 3 teachers. However, over the years the attendance improved. Swami Ajaratmanandaji Maharaj joined the Colombo Ashrama in 1988 and he was in charge of the Sunday religious school. In 1989 there were 185 students and 10 honorary teachers. Subsequently the attendance picked up so much, that it prompted, the organising of the first procession for Sri Ramakrishna's birthday on 17.02.1991 with 300 students participating for the first time.


During this time the Colombo Municipal Council distributed buns to the students who were attending the Sunday religious classes.

Swami Atmaghananandaji Maharaj was posted on 06.06.1991 as Vice-President of the Ceylon Branch of the Ramakrishna Mission and was at the helm of the Sunday religious school. Under his able guidance the school had a phenomenal growth. Apart from the regular classes on religion, he introduced the observance of Sri Krishna Jayanthi, Saraswathy Pooja, Sri Sarada Devi Jayanthi, Swami Vivekananda Jayanthi and Sri Ramakrishna Jayanthi as a regular feature of the Sunday religious school. The practice of religion was emphasized in the religious classes.

In 1992, Swami Rajeswaranandaji Maharaj joined the Colombo Centre and he took a keen interest in the activities of the Sunday school. Marked improvement was made in music. Gradually attendance rose to 800. When leading personalities visited the Mission opportunities were created for the students to have darshan and listen to their speeches.


The students of the Sunday religious school, along with the teachers, occassionally went out to conduct welfare activities in rural areas. The number of children in 1996 was 815 and the volunteer teachers were 42. The forty fourth anniversary was celebrated on Sunday 29.09.1995 over which Srimath Swami Gokulanandaji Maharaj, Secretary, Ramakrishna Mission, New Delhi, India presided. Bhajans, Drama, Dance etc., were presented by the Sunday religious school students. Availing the opportunity of the visit of Srimath Swami Ranganathanandaji Maharaj, then Vice-President of the Ramakrishna Mission, the prize giving function of the Sun-

# நடந்து வந்த பாதை...






1955களில் மாணவர்களின் ஞாயிறு சமய பாடசாலைச் செயற்பாடுகள்





1960களில் மாணவர்களின் ஞாயிறு சமய பாடசாலைச் செயற்பாடுகள்





1960களில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

# நடந்து வந்த பாதை...



1960களில் பக்தை மீரா



1960களில் ராமநாம மகிமை




1964ல் ஆண்டாள்



1975ல் அன்னையின் வாழ்வில்



1976ல் தொண்டர் பெருமை



1977ல் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி



1978ல் குருவாயூரில்



1978ல் கோகுலத்தில்...



1978ல் சக்தி சொரூபம்

day religious school was held on 12th January 1997 in which he bestowed his blessings on the children. The children presented various cultural programmes to mark the occasion. Srimath Swami Gautamanandaji Maharaj, President of the Ramakrishna Math, Mylapore distributed the prizes to the meritorious children on that occasion. Srimath Swami Tanmayanandaji Maharaj, Secretary, Sri Ramakrishna Mission Vidyalaya, Coimbatore, India was the chief guest at the 45th anniversary of the Sunday school and Sri Krishna Jayanthi. The hand written magazine of "Viveka Vahini", brought out for the first time by the Sunday religious school children, was released by the Chief Guest. The prize giving function for that year was held in January 1998 in which Mrs. Rajaluxmy Kailasanathar, Secretary, Ministry of Hindu Religious affairs was the chief guest. The children presented various cultural programmes.

The 46th annual celebration and Sri Krishna Jayanthi was held on Sunday 23.08.1998. The chief guest was Swami Jitatmanandaji Maharaj, Rajkot, India. On that occasion the number on roll was 827 with 50 volunteer teachers. The annual Prize giving was held on 10.01.1999. The Director Dept. of Hindu Religious and Cultural Affairs was the chief guest.

The 47th anniversary and Sri Krishna Jayanthi were celebrated on Sunday 29.08.1999 presided over by Srimat Swami Jagadatmanandaji Maharaj. Cultural programmes were held. The prize giving function for the year was held on 09.01.2000.

The 48th anniversary and Sri Krishna Jayanthi were held on 27.08.2000. Swami Prakashamayanandaji Maharaj of the Divine Life Society was the chief guest. The children presented a cultural programme.The fourth volume of the hand written magazine "Viveka Vahini" was released by the Chief Guest. The prize giving function for the year 2000 was held on 07.01.2001. The chief guest was Mr.V.Regunathan, Secretary Ministry of Development, Rural Development, Rehabilitation, Reconstruction of the North and East and Tamil affairs. He also released the first issue of the "Aranery Amutham", a quarterly religious magazine, produced by the children. Swami Yuktatmanandaji Maharaj, correspondent, Ramakrishna Institute of Moral and Spiritual Education, Mysore addressed the devotees and the children of the Sunday religious school.

In this attempt to give a historical account of the Sunday religious school, we had to necessarily involve a number of dates and events and is bound to be somewhat sketchy and stereotype, for one who goes through this account. The Sunday religious school of the Mission was started in an unostentatious manner, to help the Hindu children to learn and practice their religion. The school had its ups and downs, but by the grace of Sri Ramakrishna in whose name the activities are carried on, all obstacles were overcome and it had grown from strength to strength in its usefulness.

By the grace of Bhagavan Sri Ramakrishna Deva and with the dedicated guidance of the Swamis in charge and the unstinted services of the teachers, the lamp that was lit on Sri Krishna Jayanthi Day in 1952 is shedding its bright beam of light on all those who come under its benign

influence. The classes steered the students to study and practise their religion and also respect other religious faiths as enunciated by Bhagavan Sri Ramakrishna. The students of the Mission Sunday Religious School, had a firm foundation in their faith that even though some of them happen to be in foreign climes, they are not carried off their feet by foreign cultures. By this they proclaim that they are true Hindus.

Hence in assessing the success of the Sunday Religious School, we should not forget that it has acted as a foster mother to our children in helping them to imbibe their religious and cultural values. This has helped them to develop their self confidence.

May this light that was lit fifty years ago continue to shed its radiance on all those who come under its influence for ever.

* எழுமின்! விழிமின்!! கருதிய காரியம் கைகூடும் வரை அயராது உழைமின்!!!
* தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை ஆகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.
* உண்மை பேசு, எல்லோரையும் நேசி, உன் காரியங்களிலெல்லாம் நேர்மையாக இரு, உனக்கு தெய்வ தரிசனம் கிடைக்கும்.
* பொறாமையையும், ஆணவத்தையும் விட்டுவிடு. பிறருக்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுவே.
* சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுவே ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக் கூடிய ஒரே இலக்கணமாகும்.
* மணிக்கணக்கில் நிறையப் பேசுவதைக் காட்டிலும் குறைந்தளவு காரியங்களைச் செய்வது மேலானது.
* பிறருக்காகச் செய்கின்ற சிறிய செயல் கூட நம்முள் ஆற்றலை வளர்க்கின்றது. நம்மை சிங்கத்தை ஒத்த வீரர்கள் ஆக்குகின்றது.
* அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மையான வீரன்.
* நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி செய்தலும், உலகிற்கு நன்மை செய்தலும் தான்.
* நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால், எதற்குமே அஞ்சி நின்றுவிட மாட்டீர்கள். நீங்கள் சிங்கக் குட்டிகளைப் போல் திகழ்வீர்கள்.
* இந்த உலகம் கோழைகளுக்கல்ல, ஓட முயலாதே, வெற்றியோ, தோல்வியோ எதிர்பார்க்காதே.

- சுவாமி விவேகானந்தர்


# ஞாயிறுதோறும் சமய பாடசாலையின் செயற்பாடுகள்



பாதணிகளை உரிய இடத்தில் வைத்து,
கை கழுவி, இறை வணக்கத்திற்குச் செல்லல்




நேர்த்தியாக வைக்கப்பட்ட பாதணிகள் –
பாடசாலையில் மாணவர்கள் கற்கும் முதற்பாடம்




ஆன்மிக சக்தி முதலாகத் திகழும் ஆலயம்



குருமகராஜின் ஆசிகளைப் பெறும் மாணவர்கள்




காலையில் கிடைத்த சொற்ப நேரத்தில்
விளையாடி, அளவளாவி மகிழும் மழலைகள்




அன்றைய தினப் பொன்மொழியை
பிழையின்றி எழுதி, மனனம் செய்யும் மாணவர்கள்

# சமய பாடசாலைச் செயற்பாடுகள் ...



கைங்கரியத்தில் மாணவர்கள்




கைங்கரியத்தில் மாணவிகள்




மலர் கொய்து மாலை தொடுக்கும் பணியில்...



காலைப் பிரார்த்தனைக்குச் செல்லத் தயாராக...





காலைப் பிரார்த்தனைக்கு அணிவகுத்துச் செல்லும் மாணவர்களை
ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தாஜி பார்வையிடுகிறார்


# சமய பாடசாலையின் செயற்பாடுகள்...



கூட்டுப் பிரார்த்தனைக்காக கோயில் மண்டபத்தில் ஒன்று கூடும் உயர்வகுப்பு மாணவர்கள்



சுவாமிஜியின் வழிநடத்தலில் வேதமந்திரங்கள் ஓதி, தேவாரம், பஜனை பாடும் மாணவர்கள்





கூட்டுப் பிரார்த்தனையின் ஓர் அங்கமாக இறைவனை நினைந்து தியானம் செய்து மன அமைதியையும், மன ஒருமைப்பாட்டையும், ஆசியையும் பெற முயற்சிக்கும் மாணவர்கள்






கூட்டுப் பிரார்த்தனையின் பின்னர், இருபத்தியொரு வகுப்புக்களாகப் பிரிந்து, சமய பாடங்களைக் கற்பதிலும், பாட்டுப் பயிற்சி பெறுவதிலும் ஈடுபட்டுள்ள மாணவர்கள்

# சமய பாடசாலைச் செயற்பாடுகள் ...





நூலக மண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனை செய்யும் ஆரம்ப வகுப்பு குழந்தைகள்




ஞாயிறு சமய பாடசாலைச் செயற்பாடுகளின் முடிவில் பிரசாதம் பெற்றுச் செல்லும் மாணவர்கள்



யோகாசனப் பயிற்சி மூலம் பூரணமான வளர்ச்சியைப் பெறமுயலும் மாணவர்கள்



சுவாமிஜியிடம் ஆசி பெறுகிறார்கள்



தொண்டராசிரியர்கள் செயற்பாடுகளை அலசுகின்றனர்

# மகான்களின் உயர்வுக்கு அவர்களது பெற்றோரின் பங்களிப்பு

**- சுவாமி அஜராத்மானந்தா**

"குழந்தாய்! தவமோ, பூஜையோ இப்போது முதலே தொடங்கு, பின்னால் இவைகளைப் பற்றல் முடியுமா? எதை அடைய வேண்டுமோ அதனை இப்போதே அடை, இதுவே சரியான சமயம்." என்று இளம் வயதிலேயே நாம் சமய அறிவைப் பெற்று ஆன்மிக வாழ்வை ஆரம்பிக்க வேண்டும் என தூய அன்னை சாரதாதேவியார் வலியுறுத்துகிறார். நமது சமயப் பெரியார்களின் சரித்திரத்தை நாம் படிக்கின்றபோது ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிக்கலாம். அவர்கள் தங்கள் பெற்றோரிடமிருந்தும், பெரியவர்களிடமிருந்தும் பெற்ற அறிவுரைகளும் வழிகாட்டலுமே அவர்களின் வாழ்வின் உயர்வுக்கு அடிப்படையாக விளங்கியது என்பதாகும்.

சாந்தோக்கிய உபநிடதத்தில் ஒரு கதை. சத்தியகாமன் என்ற ஜாபாலன் தன் தாயாகிய ஜாபாலாவை அணுகி "அம்மா, குருகுலம் சென்று பிரம்மச்சாரியாக வசிக்க விரும்புகிறேன். நான் என்ன கோத்திரத்தைச் சேர்ந்தவன் என்பதைக் கூறு என்றான். அதற்கு அவனுடைய தாய், மகனே! நீ என்ன கோத்திரம் என்று எனக்குத் தெரியாது. என் இளமையில் நான் பலவிதமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது உன்னைப் பெற்றேன். நீ என்ன கோத்திரம் என்பதை நான் தெரிந்து கொள்ள-வில்லை. என் பெயர் ஜபாலா, உன் பெயர் சத்தியகாமன். ஆகவே சத்தியகாமன் ஜபாலன் என்று குருவிடம் சொல்வாய்." என்றாள். சத்தியகாமன் குருகுலம் சென்று "பெருமை வாய்ந்த தங்களிடம் பிரமச்சாரியாக வசிக்க வந்துள்ளேன்" என்று குருவிடம் கூறினான். அதற்க்கு குருவானவர் 'நீ எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன்? என்று அவனைக் கேட்டார். அதற்கு சத்தியகாமன் ஐயனே! நான் என்ன கோத்திரம் என்பதை அறியேன். என் தாயை அது பற்றிக் கேட்டேன். என் அன்னை அதற்கு 'என் இளமையில் பல விதமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது உன்னைப் பெற்றேன். நீ என்ன கோத்திரம் என்பதை நான் அறியவில்லை. 'என் பெயர் ஜபாலா உன் பெயர் சத்தியகாமன்' என்று கூறினாள். ஆயைால் நான் சத்தியகாமன் ஜபாலன் இதுவே நான் அறிந்தவை.

அதற்கு குருவானவர் உண்மையை இவ்வாறு தெளிவுபட கூறுபவனை அந்தணன் அல்ல என்று சொல்வது முறையன்று. சத்தியகாம ஜபாலா! சமித்தைக் கொண்டுவா. உனக்கு உபநயனம் செய்விக்கிறேன். நீ சத்தியத்தினின்றம் விலகவில்லை என்று கூறி புகழ்ந்து பாராட்டினார். அவனுக்கு முறைப்படி உபநயனம் செய்து குருகுலத்தில் பிரமச்சாரியாகச் சேர்த்துக்கொண்டார்.

'சத்தியம் வத' - 'சத்திய பாதையில் நட', 'சத்தியமேவ ஜயதே' - 'சத்தியமே வெல்லும்' என்பன போன்ற வேத உபநிஷத வாக்குகள் நமது சமயத்தின் உயிர் நாடிகளாக விளங்குகின்றன. வாழ்க்கையில் எத்தகைய சோதனைகள் வந்த போதும் சத்தியத்தினின்றும் தவறாத மகான்களைக் கொண்டது நமது சமயப் பாரம்பரியம். இந்த உபநிடதக் கதையில் ஜபாலா தன் மகன் சத்தியகாமனை சத்தியப் பாதையில் இட்டுச் செல்வதைக் காண்கிறோம். குருகுலத்தில் இடம் கிடைக்கவேண்டும் என்பதற்காக ஜபாலா தன்மகனுக்கு உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கவில்லை. உண்மையே அவர்களை உயர்த்தியது.

---

ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தாஜி அவர்கள் 1988-1992 வரையிலும், நான்கு வருடங்கள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஞாயிறு சமய பாடசாலையின் பொறுப்பாளராக இருந்து வழிநடத்தியவர்.

பக்தப் பிரகலாதனுடைய சரித்திரம் இளம் உள்ளங்களுக்கு இறைநாம மகிமையையும், இறைவனைச் சரணடைந்தவர் காப்பாற்றப்படுவர் என்ற உண்மையையும் இளம் உள்ளங்களுக்கு அனாதி காலம் தொட்டு புகட்டிவருகிறது. "நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்று ஆழ்வார்கள் பாடி பரவசம் அடைந்ததுபோல் பக்த பிரகலாதன் இறை நாமத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தான். அவனுடைய தந்தை ஹிரண்யகசிபு பகவான் நாரயணனை நம்பாதவன். பகவானின் பரம எதிரியாக விளங்கினான். பக்தர்களை பகைவர்களாக எண்ணினான். தன் மகன் பிரகலாதன் நாராயண பக்தனாக இருப்பது ஹிரண்யகசிப்புக்குப் பிடிக்க- வில்லை. நாராயணனை மறக்கும் படி தன்மகனுக்குப் பல வழிகளில் புத்திமதி கூறினான். ஆனால் பிரஹலாதனை மாற்ற முடியவில்லை. மிக கொடூரமான முறையில் பிரகலாதனைத் துன்புறுத்தினான். ஹிரண்யகசிப்புவின் ஏவலாளர்கள் பக்த பிரகலாதனை மலையிலிருந்து கிழே தூக்கி வீசினார்கள். ஆழ்கடலினுள் அமிழ்த்தினார்கள். கொதிக்கும் எண்ணெய் கொப்பரையில் தூக்கிப் போட்டார்கள். ஆனால் பகவான் நாராயணனின் அருளால் பக்தப் பிரகலாதன் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் காப்பற்றப்பட்டான்.

அசுரனாகிய ஹிரண்யகசிப்புக்குப் பிறந்தவன் பக்தப் பிரகலாதன். ஆனால் அவன்தாய் கயாதுதேவி கருவுற்றிருந்த போது அவள் ஒரு ஆஸ்ரம சூழலில் வாழ்ந்து வந்தாள். அவளது புனிதமான வாழ்க்கைக்கேற்ப அவள் வயிற்றில் உருவாகி வந்த குழந்தையும் தெய்வத்தன்மையோடு வளர்ந்தது. நாரத முனிவரும் அங்கு வந்து கயாதுதேவியின் முழுமனதையும் பக்தி மார்க்கத்தில் திருப்பிவிட உதவினார். "கருவுற்றநாள் முதலாக உன்பாதமே காண்பதற்கு உருகிற்று என் உள்ளமும்" என்று நயன்மார்கள் பாடியதுபோல் பக்தப் பிரகலாதனின் கடவுள் பக்தி தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிணமிக்க ஆரம்பித்து விட்டது.

ஆன்மிக சூழலும், நாரதமுனிவரின் சத்சங்கமும், கயாதுதேவியின் பக்தி உள்ளமும் பிரகலாதன் முழுமையான பக்திப் பெருநிலையை அடைவதற்க்கு உதவியது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெற்றோரின் வாழ்க்கை முறையானது அவருக்கு ஆன்மிகப்-பாதையில் மாபெரும் வழிகாட்டியாக அமைந்திருந்தது. தியாகம், துறவு, சத்தியத்தில் அசைக்க முடியாத பற்று, பக்தி முதலிய உயர்பண்புகள் ஸ்ரீராமகிருஷ்ணர் தன் பெற்றோரிடமிருந்து பெற்றார் என்பதில் சந்தேகமில்லை. அதற்க்கு சான்றாக அவர் தன் பெற்றேர்களைப் பற்றி பின்னாளில் கூறிய- வற்றை சுவாமி சாரதானந்தர் 'குருதேவர் ராமகிருஷ்ணர் பகுதி-1' என்னும் நூலில் பின்வருமாறு கூறுகிறார். "பெற்றோரின் அன்றட வாழ்க்கைமுறை அவனுக்குக் களங்கமற்ற இயல்பையும், பக்தி-யையும் வளர்க்க உதவியது. இந்த விடயத்தில் பெற்றோருக்குத் தாம் மிகவும் கடமைப்பட்டிப்பதாக குருதேவர் பின்னாளில் நினைவு கூர்வதுண்டு. தட்சிணேஸ்வரத்தில் அவருடன் நாங்கள் வாழ்ந்த நாட்களில் அவர் எங்களிடம் கூறியது வாசகர்களுக்கு இதனைத் தெளிவாக விளக்கும். அவர் தனது பெற்றோரைப் பற்றிக் கூறினார்.

"எளிமையின் உறைவிடமாக இருந்தாள் என் அன்னை. உலகியல் விவகாரங்கள் எதுவும் அவருக்குத் தெரியாது. பணத்தை எப்படி எண்ணுவது என்பதைக் கூட அவள் அறிந்திருக்க-வில்லை. மனத்தில் தோன்றியதை அப்படியே எல்லோரிடமும் வெளிப்படையாக கூறிவிடுவாள். என் தந்தை நாளின் பெரும் பகுதியை பூஜை, ஜபம், தியானம் இவற்றிலேயே செலவிடுவார். தினமும் சந்தியாவந்தன வேளையில் 'ஆயா ஹி வரதே தேவி' என்ற மந்திரத்தை ஆழ்ந்த அன்புடன் கூறி காயத்ரீ தேவியை தியானிக்கும் போது உணர்ச்சிப் பெருக்கால் அவரது மார்பு

சிவந்து காட்சியளிக்கும். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகும். ஆன்மிக சாதனைகளில் ஈடுபடாத வேளைகளில் ஸ்ரீரகுவீரரை அலங்கரிப்பதற்காக பூமாலை புனைவார். பொய்சாட்சி சொல்ல மறுத்ததால் பூர்விக சொத்தையே இழந்தவர் என் தந்தை! முனிவர் ஒருவருக்கு அளிக்கத்தக்க நன்மதிப்பையும் பக்தியையும் கிராம மக்கள் அவருக்கு அளித்தனர்." ஸ்ரீராமகிருஷ்ணர் தன் பெற்றோர்களின் உயர்பண்புகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருந்தார். அவர் தன் பெற்றோர்களின் உயர் பண்புகளை பின்னாளில் நினைவு கூர்ந்ததி-லிருந்து அவர்களுடைய வாழ்வும் வாக்கும் அவருக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்திருந்தது. என்பது வெளிப்படை.

சுவாமி விவேகானந்தரின் ஆன்மீகக் கல்வியும், லௌகீக கல்வியும், தாய் புவனேஸ்வரி-தேவியின் மடியில் தான் ஆரம்பமாயிற்று. இராமாயண, மகாபாரத பாடல்களே குழந்தை நரேனுக்கு ஆரம்ப பாடல்களாகின

இன்பமெனச் சில கதைகள் – எனக்கேற்றமென்றும்
வெற்றியென்றும் – சில கதைகள் துன்பமெனச் சில கதைகள்
கெட்ட தோல்வியென்றம் வீழ்ச்சியென்றும் சில கதைகள்.
என்பருவம் என்தன் விருப்பம் – எனும்
இவற்றினுக் கிணங்கவென் னுளமறிந்தே
அன்போடவள் சொல்லி வருவாள், – அதில்
அற்புதமுண் டாய்ப் பரவசமடைவேன்.

என்று கண்ணனாகிய தாய் தனக்குக் கதைகள் பல கூறியதாகப் பாரதியார் பாடியிருக்கிறார். இதே போலத்தான் நரேனின் போக்கறிந்து கதைகள் சொல்லி அவற்றின் மூலம் அவனுக்கு கல்வி புகட்டினார் புவனேஸ்வரிதேவி. இந்தக் கல்வி நரேனின் இதயத்திலே கலந்து அவர் பண்போடு இரண்டறக் கலந்து விட்டது. இராமனின் புனிதக் கதையைக் கேட்டுக் கேட்டு காவிய நாயகனிடம் அபாரமான பக்தி ஏற்பட்டது நரேனுக்கு. சீதா பிராட்டியிடம் நரேனுக்கு உண்டான வெகுமதிப்பை பிற்காலத்தில் அவர் நிகழ்த்திய பல உரைகளில் காணலாம். சுவாமி விவேகானந்தரின் வீரதீரச் செயல்களுக்கெல்லாம் மூலவேர் இளமையில் தாயிடம் கற்றறிந்த இராமாயண மகாபரதக் கதை-களே என்பதில் சந்தேகமில்லை. தான் அடைந்த பல உயர்வுகளுக்குத் தன் தாயே காரணம் என்றும், தன்தாய்க்கு தான் பெரும் கடமைப்பட்டுள்ளதாவும் பின்னாளில் சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

"சலவை செய்து வந்த வெள்ளைத் துணி போன்றது மனது. வெள்ளைத் துணியை எந்தச் சாயத்தில் வேண்டுமானாலும் தோய்க்கலாம். ஆதே விதத்தில் நாம் கொடுக்கின்ற பாவனையை மனது எடுத்துக் கொள்கிறது." என்கிறார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். குழந்தைகளின் உள்ளமும் சலவை செய்து வந்த வெள்ளைத் துணியைப் போன்றது. இளமையில் எத்தகைய கருத்தை அவர்களுக்கு சதா ஊட்டுகிறோமோ அதற்கேற்ப அவர்களது பண்பும் உருவெடுக்கிறது. பல மகான்களுடைய வாழ்க்கை வரலாறுகள் இவ் உண்மைக்குச் சான்று பகர்கின்றன.

மதாலஸா என்ற தெய்வத் தாய் ஒருத்தி இருந்தாள். இவள் பிரமத்தை உணர்ந்தவள். தன் குழந்தைகளையெல்லாம் அவள் "நீ நிரஞ்ஜன் (**மாசு மறுவற்றவன்**) அழியாத ஆன்மாவே நீ! பரிசுத்தமே உனது சொரூபம்! என்பதைப் போன்ற வேதாந்தக் கருத்துக்களாலேயே பாடல்களாகப் பாடி குழந்தையை தொட்டிலிட்டு ஆட்டினாள். தன் சொல், செயல், சிந்தனைகளால் பிரம்ம மயமாகவே இருந்த மதாலஸா, அதையே குழந்தையின் உள்ளத்தில்

கோயில் கொள்ளச் செய்தாள். அக்குழந்தை வளர்ந்து இளைஞனான போது உயர் வாழ்வை நாடிச் சென்றான். விரைவில் பிரம்ம ஞானம் பெற்ற ஞானி ஆனான் தெய்வத்தாய் மதாலஸா தன் குழந்தைகள் அனைத்துக்கும் தொட்டில் பாடல்கள் மூலம் "நீ நிரஞ்ஜனன்" என்ற கருத்தை ஊட்டினாள். அத்தெய்வத் தாயின் குழந்தைகள் அனைத்தும் உயர் நிலைபெற்று விளங்கின.

இளமையில் கற்கின்ற கருத்துக்கள் நிலைத்து நிற்கின்றன என்பது ஆராச்சியாளர் முடிபு. நமது ஞாயிறு சமயப் பாடசாலையானது கடந்த ஐம்பது வருடங்களாக இளம் சிறார்களுக்கு உன்னதமான சமயக் கருத்துக்களையும், உயர் மனிதப் பண்புகளையும் ஊட்டுகின்ற ஒரு சிறந்த நிலையமாக விளங்கிவருகிறது.

*"Religion is not in books, nor in theories, nor in dogmas, nor in talking, not even in reasoning. It is being and becoming."*

*"Selfishness is the chief sin, thinking of ourselves first. He who thinks, 'I will eat first, I will have more money than others, and I will possess everything'; he who thinks, 'I will get to heaven before others, I will get Mukti before others', is the selfish man. The unselfish man says, 'I will be last, I do not care to go to heaven, I will go to hell, if by doing so I can help my brothers.' This unselfishness is the test of religion."*

*"I do not believe in a God or religion which cannot wipe the widow's tears or bring a piece of bread to the orphan's mouth."*

*"Doing good to others out of compassion is good, but the Seva (Service) of all beings in the spirit of the Lord is better."*

*"It is our privilege to be allowed to be charitable, for only so we can grow. The poor man suffers that we may be helped.; let the giver kneel down and give thanks, let the receiver stand up and permit. See the Lord back of every being and give to Him."*

*"Doing work is not religion, but work done rightly leads to Freedom. In reality all pity is darkness, because whom to pity? Can you pity God? And is there anything else? Thank God for giving you this world as a moral gymnasium to help your development, but never imagine you can help the world"*

*"This life is short, the vanities of the world are transient, but they alone live who live for others, the rest are more dead than alive."*

*- Swami Vivekananda*

# பண்பாட்டுக் கல்வியில் மனத்தைப் பண்படுத்துவதின் முக்கியத்துவம்

- ந.கிருஷ்ணமூர்த்தி, விவேகானந்த கேந்திரம், கன்னியாகுமரி.

1) **முன்னுரை:** இன்று உலகம் முழுவதும் கல்வியைப் பற்றிய அடிப்படைச் சிந்தனைகள், மாற்றங்கள் பெற்று வருகின்றன. மேலைநாட்டு விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் பாதிப்பினால் இன்று இளைஞர்களிடையே கல்வி என்றாலே மருத்துவம், பொறியியல், கணினி, தொழில்நுட்பம் பற்றிய கல்வி தான் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக மாண-வர்களிடையே தர்க்கப்பூர்வமான சிந்தனையும், விஞ்ஞானப் பண்பாடும் வளர்ந்திருப்பது என்னவோ உண்மை தான். ஆனால் தர்க்க அறிவு மட்டுமே மனிதனை முழுமையானவனாக ஆக்கிவிட முடியுமா? முடியாது என்பதே வரலாறு காட்டும் பதிலாக இருக்கிறது. அண்மையில் அமெரிக்காவின் பல்கலைக்கழகங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இவற்றில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின் முடிவு என்ன தெரியுமா? பல்கலைக்கழகங்களோ, பள்ளிகளோ மனிதனிடத்தில் ஒழுக்கம், இரக்கம், கருணை, படைப்பாற்றல், கலை உணர்வு இவற்றை உண்டாக்கித் தர முடியாது. பெரும் பொருள் செலவழித்து ஒரு மாணவன் அல்லது மாணவி கல்வி கற்றுக் கலாசாலையில் இருந்து வெளி வருவாரானால் அவர் நல்லொழுக்கமோ, கருணையோ, கலை உணர்வோ, ரசனையோ கொண்டிருப்பார் என்று உறுதி சொல்ல முடியாது. பெற்றோர்களும், தம் குழந்தைகள் மற்ற எல்லோரும் பின்பற்றும் பாடத் திட்டங்களிலேயே பின்பற்றவேண்டும். எல்லோரும் நுழையும் துறையிலேதான் தம் மக்களும் நுழைதல் வேண்டும் என்று கருதுகிறார்கள். ஒவ்வொரு மாணவரிடத்திலும், குழந்தையிடத்திலும் தனிச் சிறப்புக்கள் பற்பல உள்ளன. அவற்றை வளர்த்து அம்மாணவர் மனம் மகிழ்ச்சியும், பணிபுரிவதில் சுமையற்ற உணர்வும், பிறரோடு பழகுவதில் அன்பும், எளிமையும் கொண்டு வாழ உதவவேண்டும். இதுவே கல்வியில் பெற்றோர் கடன்.

2) **வகுப்பறைக்கும், இல்லத்துக்கும் உள்ள தொடர்பு:** ஒரு மாணவர் அல்லது மாணவி ஒருநாளில் ஏழு மணி நேரம் கல்விக்கூடத்தின் சூழலில் வாழ்கிறார். மற்ற பதினேழு மணி நேரமும் குடும்பம், சமுதாயம் ஆகிய சூழலில் தான் அவர் தங்கியிருக்கிறார். ஆகவே இங்கு கிடைக்கும் தாக்கங்கள், உதாரணங்கள், மனிதனை உருவாக்கும் மகத்தான சக்திகளாக ஆகிவிடுகின்றன. பெற்றோரைப் பின்பற்றி மாணவர் கற்றுக்கொள்வது மிக அதிகம். இந்துப் பண்பாட்டில் 'தாயே முதல் ஆசிரியை' என்று குறிப்பிடுகிறோம். தாயின் கருவில் மூன்றாவது மாதத்தில் இருந்து குழந்தையின் உள்ளுணர்வுகள் உருவாகின்றன. மூளையில் இருக்கும் திசுக்கள் ஒன்றோடொன்று எவ்விதத்தில் இணைகின்றன என்பதே எதிர்காலத்தில் அக்குழந்தை பெரியவராகும் பொழுது அவருடைய உள்ளத்து உணர்வுகளை, அன்பை, பிரக்ஞையை வளர்த்து எடுக்கின்றது. இரண்டாயிரமாவது ஆண்டு மருத்துவத் துறைக்காக நோபல் பரிசு பெற்ற மூன்று அறிஞர்கள் எத்துறையில் பணிபுரிந்தனர் தெரியுமா? ஒரு தாய் தன் வயிற்றில் குழந்தையைக் கருக்கொண்டிருக்கும் போது தன் குழந்தைக்கு அவள் செய்யவேண்டிய கடமைகளை செய்யத்தவறினால், குழந்தை பிறந்த பிறகு எத்தகைய பிரச்சினைகளுக்கு அது உள்ளாகும்?

அப்பிரச்சினைகளை தீர்ப்பது எப்படி? இதுவே அந்த நோபல் அறிஞர்கள் மேற்கொண்ட பணி ஆகும். இக்காரணத்தால் தான் இந்து சமயத்தில் அபிமன்யு, பிரகலாதன் போன்ற குழந்தைகள் தாய் வயிற்றில் இருக்கும் போதே பேரறிவும், இறை பக்தியும் கொண்டதாக நாம் அறிகிறோம். நவீன விஞ்ஞானமும், மனித மூளையில் திசுக்களிடையே ஏற்படும் உணர்ச்சித் தொடர்புகள் (இவற்றுக்கு சினாப்சிஸ் என்று பெயர்) எப்படி செம்மைப்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து பேசுகிறது. வேத கோஷங்களை செவிமடுத்தல், நல்ல இசை, உள்ளத்துக்கு இசைந்த பண்பாடு இவையெல்லாம் கொண்ட தாய்தான் நல்ல குழந்தையைப் பெற்று வளர்த்து எடுக்க முடியும்.

**3) கல்வியின் துவக்கம்:** ஆங்கிலேயர்களின் மெக்காலே கல்வி முறையில் ஆறு வயதுக்குப் பிறகே கல்வி அளிப்பது கூறப்பட்டுள்ளது. மாண்டிசோரி என்ற குழந்தைக் கல்வி நிபுணர் இரண்டரை வயதிலேயே குழந்தைக்கு விளையாட்டுக்களின் மூலம் கல்வி அளிக்கத் தொடங்கலாம் என்று கூறினார். நம் பண்பாட்டிலோ குழந்தையின் கல்வி தாய் வயிற்றி இருந்தே துவங்கும் என்பதைக் கண்டோம். சிறுகுழந்தை சொற்களையும், உணர்வுகளையும் பின்பற்றத்தக்க முன் உதாரணங்களையும் கேட்டும், பார்த்தும் பயிலும் வேகம் மிகவும் அதிகமாகும். அதிலும் ஒரு குழந்தை கண்ணால் பார்த்து 87 சதவிகிதமும், காதால் கேட்டு ஏழு சதவிகிதமும் அறிவு பெறுகிறது. ஆகவே சிறு குழந்தை தன் பெற்றோர், சகோதர, சகோதரிகள் ஆகியோர் எப்படி உடை உடுத்துகிறார்கள், தோற்றம் அளிக்கிறார்கள், அவர்களுடைய உடைகள், அங்க அசைவுகள் எப்படி உள்ளன, இதை எல்லாம் பார்த்துத் தெரிந்து கொள்கிறது. உலகில் உள்ள மற்ற உயிர்கள் எல்லாம் மூளை வளர்ச்சி முடிந்த நிலையில் பிறக்கின்றன. ஆனால் மனித உயிர்களோ குழந்தையாக பிறக்கும் போது 23 சதவிகிதம் மூளை வளர்ச்சியுடன் தான் பிறக்கின்றன. இக்குழந்தையின் மூளை வளர்ச்சியில் எழுபது சதவிகிதம் ஆறு வயதிற்குள் நடந்து விடுகிறது. பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் எல்லாம் ஒரு குழந்தையின் மீதம் உள்ள ஏழு சதவிகிதம் அறிவை வளர்க்க மட்டுமே உதவுகின்றன. இக்காரணத்தால் தாய், தந்தை குடும்பச் சூழல் இவற்றால் ஒருவருடைய உணர்ச்சிகள் மீதும் அறிவின் மீதும் ஏற்படும் பாதிப்புக்கள் மிக அதிகமாகும். வெளி உலகில் ஒரு மாணவர் முயற்சி செய்து தான் கல்வி கற்க வேண்டும். ஆனால் குடும்பத்திலோ ஒரு குழந்தை இயற்கையாக வளரும் வேகமே கல்வி கற்கும் வேகமாகவும் அமைந்து விடுகிறது. இக் காரணத்தால்தான் "மாதா, பிதா, குரு, தெய்வம்; அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற பழமொழிகள் எழுந்தன.

**4) பண்பாட்டுக் கல்வியில் உணர்வுப் பண்பாட்டின் பங்கு:** பண்பாட்டுக் கல்வியில் மிக அடிப்படையான விஷயங்கள் மன மென்மையைப் பொறுத்தவை ஆகும். ரவீந்திரநாத் தாகூர் அன்பை நான்கு விதங்களாக வகைப்படுத்திப் பேசுகிறார். அவை முறையே சினேகம், பிரேமை, தயை, பக்தி எனப்படும். சினேகம் என்றால் அறிவிலும், வயதிலும், சமுதாய அந்த-ஸ்திலும் நமக்கு சமமானவரிடம் நாம் காட்டும் அன்பு. பிரேமை என்றால் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் காட்டும் அன்பு. தயை என்றால் நம்மைக் காட்டிலும் வயதிலோ, பலத்திலோ, அறிவிலோ, செல்வத்திலோ, அந்தஸ்திலோ, தாழ்ந்தவரிடம் நாம் காட்டும் மனப்பூர்வமான அன்பு. பக்தி என்றால் நம்மைக் காட்டிலும் பெரியவர்களிடத்தில் நாம் காட்டும் பயமற்ற தூய்மையான அன்பு. இந்த நான்கு விதமான தொடர்புகள் தான்

மனித வாழ்க்கையை மென்மைப்படுத்துகின்றன. மிருகங்களிடம் இருந்து மனிதனை வேறுபடுத்தி முதலில் மனிதனாகவும் பிறகு தெய்வமாகவும் மனிதனை உயர்த்துகின்றன. இந்த அன்பு தான் அறப்பண்புகள் அனைத்துக்கும் நிறைநிலை ஆகும். நேர்மை, சத்தியம், புலனடக்கம் ஆகிய ஒழுக்கங்கள் அன்பில் சென்று நிறைநிலை அடைகின்றன. ஆகவே நற்குணங்கள் அனைத்தின் நிறைநிலை அன்பு என்று நாம் கூறி விடலாம். இதனை தம்மிடத்தில் கொள்ளாதவர்கள் எப்படி இருப்பார்கள்? சுயநலமிகளாய், பிறரோடு ஒத்துப் போகாதவர்கள், மனத்தில் எப்போதும் வெறுப்பும் துவேஷமும் குடி கொண்டவர்-களாய் வாழ்வார்கள். கண்ணன் பகவத்கீதையில் தலைசிறந்த பக்தனை வருணிக்கும் போது "அவன் எல்லா உயிர்களிடத்திலும் துவேஷம் இன்றி இருப்பான். நட்பும், கருணையும் கொண்டிருப்பான்" என்று பேசுகின்றான். வள்ளுவரும் "அன்புடையார் என்பும் உடையார் பிறர்க்கு" என்கிறார். சுயநலமின்மை என்னும் நல்லொழுக்கம், உலகளாவிய அன்பு, மனிதநேயம், இறைபக்தி ஆகிய குணங்களாக பரிணாமம் அடைகிறது. இத்தகைய அன்புக் கல்வியை நாம் புத்தகங்களில் படித்தோ, வாத விவாதங்கள் செய்தோ, சிந்தனை செய்தோ கற்க முடியாது. அன்பு என்னும் மென்மலர் தர்க்கப்புத்தி என்ற கத்தியால் கூறுபோட்டு அறிந்த கொள்ள முடியாதது. தாயின் கருணை, தந்தையின் பாசம், சகோதர சகோதரிகளின் அன்பு, ஆசிரியரின் கருணை, மாமனிதர்களின் அருள் இவற்றின் மூலம் தான் நாம் அன்பைப் புரிந்துகொள்ளவும், நம் வாழ்க்கையில் அதை கடைப்பிடிக்கவும் முடியும். இக்காரணம் பற்றியே சுவாமி விவேகானந்தர் ஸ்ரீராம-கிருஷ்ணரைப் பற்றிப் பேசும் போது "அவருடைய வாழ்கையைப் பார்த்து மதித்தவர்கள் தான் உபநிடதம், அறநூல் முதலிய சாத்திரங்களை மதிக்க முடியும்" என்று பேசியுள்ளார். அன்பும், கருணையும், பக்தியும் பாசமும் தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்கள். இவற்றைக் குடும்பம், ஆசிரியர், நல்லகுரு முதலிய உதாரணங்கில் இருந்து தான் நாம் கற்றறிய முடியும்.

**5)அறக்கல்வியில் பண்பாட்டின் கூறுகள்:** தாய் தந்தை, ஆசான், குரு, அருளாளர்கள் ஆகியோர் அறக்கல்வியை குழந்தைகளிடம் எப்படி ஊட்டுகிறார்கள்? இது சிந்திப்-பதற்குரிய விஷயம் ஆகும். மனித மூளை இரு பிரிவுகளாக அமைந்துள்ளது. மூளையின் வலது பகுதி தர்க்கம், கணித அறிவு, சட்ட அறிவு, விஞ்ஞான அறிவு இவற்றின் உறைவிடம் என்றும், மூளையின் இடது பகுதி மொழி அறிவு, இசை அறிவு, அன்புணர்வு, ஓவிய அறிவு இவற்றின் இருப்பிடம் என்றும் விஞ்ஞானிகளும் கருதுகின்றனர். உடலில் மூளையின் இரு பகுதிகளும் சமஅளவில் சக்தி பெற்று வளர்ந்தால்தான் ஒருவர் சமச்சீர் உள்ள மனிதராய் வளர முடியும். ஆனால் இன்றோ மொழி அறிவு, கவிதை அறிவு, அன்புணர்வு, இசை அறிவு, இயற்கையின் பால் நேசம், மனித நேயம், இறை பக்தி இவற்றைப் புறக்கணித்து, விஞ்ஞானம், தர்க்கம் இவற்றை சிறப்பிக்கும் கல்வியே பெருமை பெற்றுள்ளது. இதன் விளைவாக, பேரறிஞர் ஐன்ஸ்டீன் கூறியது போல் "அறிவில் பெரிய மனிதர்கள் ஆகவும், அன்பு இல்லாத சிறுவர்களாகவும்" மனிதர்கள் வளர்கிறார்கள். இத்தகைய மனிதர்கள் அணுகுண்டுகளையும், உயிரியல் குண்டு-களையும், போர்க் கருவிகளையும் கண்டுபிடித்து மனிதகுலத்திற்குப் பெரும் தீங்கு விளை-விக்கிறார்கள். ஆனால் அருளாளர்களோ, இசைப்பாடல்கள், கதைகள் விளையாட்டுக்கள், நல்ல உதாரணங்கள், அன்பு காட்டல் இவற்றின் மூலம் மனிதனின் இடது மூளையை வளரச் செய்ய உதவுகிறார்கள்.

ஆகவே அறநெறிப் பாடசாலைகளில் மனிதனை சமச்சீர் உள்ள ஒருவராக ஆக்க வேண்டுமானால் இசைப்பாடல்கள், ஓவியம், விளையாட்டுக்கள், கதை சொல்லுதல், கதை கேட்டல், சுதந்திரமான அன்பு, உரையாடல் இவற்றுக்குப் பெரும் முக்கியத்துவம் தரப்பட வேண்டும். இந்துக்களின் கல்வியில் இசைக்குப் பெரும் முக்கியத்துவம் உண்டு. வான சாத்திரம், வேதக் கல்வி, கணிதம், மாட்டு வைத்தியம், உடல் நலம், இலக்கணம் இப்படி எல்லா அறிவு நூல்களையும் தாளக்கட்டும் சந்தமும் ஒலிநயமும் கொண்ட இசைப்பாடல்களாலேயே நம் முன்னோர்கள் ஆக்கி வைத்தனர். மனத்திரையில் ஓவியங்களாக எழுதி வைக்கலாம். அவற்றிடையே தொடர்புபடுத்தி அறியலாம். தேவைப்படும் போது நினைவு கூரலாம். அறிவு வளர்ச்சியில் இசையின் பங்கை நவீன விஞ்ஞானமும் போற்றுகின்றது. சுந்தரரோ இறைவனையே 'இசையின் பயனே' என்று போற்றுகின்றார். குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தர் அவரைச் சந்திக்க வரும்போதெல்லாம் பாடச்சொல்லிக் கேட்பார். குருதேவரும் சுவாமிஜியும் இசை அறிவுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை இதன் மூலம் அறியலாம். அதுபோலவே கதை சொல்லுதலும், கதைகேட்டலும் மாமனிதர்களோடு நமக்குள்ள உறவை வலுப்படுத்துகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் தன் உபதேசங்களுக்கு முக்கியமான ஊடகமாக குட்டிக் கதைகளைத் தேர்ந்தெடுத்ததற்கு காரணம் உண்டு. மிகக் கடினமான வேதாந்த, தத்துவ அறக்கருத்துக்களை மகத்தான மனிதர்கள் கதைளின் மூலம் கூறுவார்.

விளையாட்டுக்களும் பண்பாட்டுக் கல்வியில் முக்கிய பங்கு வகிப்பவை. முன் எச்சரிக்கையுடன் இருத்தல், வாய்ப்புக்களைப் பயன்படுத்துதல், ஆபத்துக்களிலிருந்து தன்னை காத்துக்கொள்ளுதல், தோல்வியையும் வெற்றியையும் சமமாய்க் கருதுதல் ஆகிய ஆன்மீகக் குணங்களுக்கு விளையாட்டுத் திடல் தான் பயிற்சி மையம். சுவாமி விவேகானந்தரும் இவ்வுலகம் என்பது நம் தசைகளைப் பண்படுத்தும் ஒரு பயிற்சிக் கூடம் என்றும், கால்பந்து விளையாடுவதும் ஆன்மீகப் பயிற்சிதான் என்று கூறியதும் நோக்கத்தக்கது. எப்போதும் விழிப்புணர்வுடன் இருத்தல், சிறுசிறு தோல்விகளால் துவண்டு போகாமல் மீண்டு எழுதல் ஆகியவை விளையாட்டில் இருந்து நாம் பெறக்கூடிய அறக்கல்வி ஆகும்.

எல்லாவற்றையும் விட மனத்தில் மறைந்து கிடக்கும் காமம், குரோதம் (கோபம்) லோபம் (கஞ்சத்தனமும், பேராசையும்) மோகம் (அறிவுக்குழப்பம்), மதம் (திமிர்), மார்ச்சரியம் (பொறாமை), அச்சம் (தாம்பெற்ற செல்வத்தை இழந்து விடுவோமோ என்ற பயம்) ஆகியவை நம் மனத்தை விட்டு வெளியேற வேண்டும். இவற்றுக்கு வடிகாலாக விளங்குவது கலைக் கல்வி தான் என்பது மனோ தத்துவ அறிஞர்களின் நோக்கம் ஆகும். பொம்மை செய்யக் களிமண்ணைப் பிசையும் போதோ, பாடலைப் பாடக் குரலை உயர்த்தும் போதோ, தசரதனாக, கண்ணனாக நடிக்கும் போதோ, நம் அடிமனத்தில் தேங்கிக் கிடக்கும் வாசனைகள், வினை எச்சங்கள் மேலெழுந்து ஒருசீராக வடிந்து விடுகின்றன. கலை உணர்வு என்பதே நம் உணர்ச்சிகளை தட்டி எழச் செய்தும், அவற்றை ஆக்கப்பூர்வமான சக்திகளாக மாற்றி தனக்கு இன்பமும், பிறர்க்கு நல்லுணர்வும் தரும் வண்ணம் வெளிப்படுத்துவதும் தான் என்பது அறிஞர் கருத்து. இக்காரணத்தால் தான் இறைவனை அடைவதையே வாழ்க்கையின் நிறைநிலையாகக் கண்ட குருதேவரும் சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்தி உலகை உயர்த்த போதனைகள் தந்த சுவாமி

விவேகானந்தரும் பாடல் பாடுதல், உருவச்சிலைகள் அமைத்தல், உணவு சமைத்தல், ஓவிய ரசனை, நாடகம் நடித்தல், கவிதை எழுதுதல், மலர் தொடுத்தல் போன்ற கலைச்செயல்களின் ஈடுபாடு காட்டினர்.

**நிறைவுரை:** இன்று பெற்றோர்கள் தம் குழந்தைகள் விஞ்ஞானக் கல்வி கற்றால் போதும் என்று நினைக்கின்றனர். இதன் விளைவினால் இன்றைய இளைஞர்களும், குழந்தை-களும் தம் உணர்ச்சிகளைப் பயன்படுத்தத் தெரியாமல் சீர்கெடுகின்றனர். வக்கிரமான ருசிகளும், தவறான விருப்பங்களும், இளைஞர்களிடத்தில் காணப்படுகின்றன. உள்ளத்து அழகை உருவாக்கத் தெரியாமல் புற வாழ்க்கைக்கே முக்கியத்துவம் தருகின்றனர். இதனால் அன்பு, ரசனை, முதலிய அறம்சார் நற்குணங்கள் இன்சுவைகள் இவர்களுக்குக் கிட்டாமல் போய்விடுகின்றன. குடும்பம், பணியிடம் இவற்றில் பிணக்குகளும், பூசல்களும் அதைத் தொடர்ந்து நிம்மதியின்மை, உறக்கமின்மை இவையும் எழுகின்றன. தலைவலி மருந்து, போதை மருந்து என்பவை ஒரு பக்கம். போதைப் பானங்கள், சண்டை சச்சரவுகள், போர்கள், வன்முறை, பிறர்மீது தாக்கம், தற்கொலை இவை இன்னொரு பக்கம். மன நோய்கள், வாழ்வில் திருப்தி இன்மை இவை ஒரு பக்கம். ஒரு அறிஞர், இன்று நோய் மனிதனிடத்தில் இருவிமதமாய்க் காணப்படுகிறது. ஒருவிதம் அவன் உடலைப் பாதிப்பது, இன்னொரு விதம் அவனுடைய சமுதாய உறவுகளைச் சீர்கெடுப்பது. இவ்விரண்டும் இல்லாதவனே ஆரோக்கியமான மனிதன் என்கிறார். கண்ணனும் கீதையில் இத்தகையவரை அத்தியாயம் பன்னிரெண்டு, பாடல் பதினைந்தில்,

*"யார் இவ்வுலகுக்(கு) இடர் செய்யாரோ,*
*உலகால் யார் இடர் எய்தாரோ*
*களிப்பு சினமும் கொதிப்பு பயமும்*
*நீங்கப் பெற்றோர் எனக்கினியர்"*

என்கிறார். ஆகவே பெற்றோர்கள் தம் மக்கட் செல்வங்களிடம் விஞ்ஞான, தர்க்க அறிவுடன் கலை அறிவையும் சேர்த்து வளர்க்கவேண்டும். குடும்பத்தில் ஆக்கப்பூர்வமான அன்பு, பக்திப்பூர்வமான சூழலை உண்டாக்கித் தருவது பெற்றோர் கடமை.

* *The mind naturally tends towards evil deeds. It is lethargic in doing good works. Formerly I used to get up at 3 a.m. and sit up for meditation. One day I felt disinclined to do so on account of physical indisposition. That one day's irregularity resulted in the upsetting of my routine for a number of days. That is why I say perseverance and tenacity are necessary for success in all good work.*

* *It is the nature of water to flow downwards, but sun's rays lift it up towards the sky. Likewise it is the very nature of mind to go to lower things, to objects of enjoyment, but the grace of God can make the mind go towards higher objects.*

**- Holy Mother Sri Sarada Devi**

# செவ்விய வாழ்வு நல்கும் சீரியதோர் கூடம்

- செல்வி வ. கணபதிப்பிள்ளை, சாரதா சமித்தி

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தேழாம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு காலைப் பொழுது. திருமதி பூபதி இராசரத்தினம் என்ற அம்மையார் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனுக்கு அடியேனை அழைத்துச்சென்றார். அங்குள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருமானைத் தரிசித்து வெளியே வந்தபோது வராந்தாவில் அமர்ந்திருந்த ஆச்சிரமத் தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தஜீ மஹராஜ் அவர்களைச் சந்தித்தோம். பூபதி அம்மையார் சுவாமிஜீக்கு என்னை அறிமுகம் செய்துவைத்தார். ஆச்சிரமத்தில் நடைபெற்று வந்த சமய பாடசாலையைப் பற்றிய பேச்சு எழுந்தது.

"நல்வாழ்வுக்கு உதவுவனவும், தெய்வீக சிந்தனையைத் தூண்டுவனவுமான சீரிய கருத்துக்-களைப் பிஞ்சு உள்ளங்களில் விதைத்தால் அவை சமுதாயத்துக்கு நற்பயன் விளைப்பனவாக அமையும். இந்தவிதமான சிந்தனையின் வெளிப்பாடாகவே ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்திரண்டாம் ஆண்டு ஆவணித் திங்கள் கிருஷ்ண ஜயந்தி தினத்தன்று பதினைந்து மாணவர்களுடனும் மூன்று ஆசிரியர்களுடனும் ஸ்ரீமத் சுவாமி அஸங்கானந்தஜீ மஹராஜ் அவர்களால் இந்த சமய பாடவகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்-தேழாம் ஆண்டில் நூற்று அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர்களுடனும், ஏழு ஆசிரியர்களுடனும் பாடசாலை நடைபெற்று வந்தது" என்ற விபரங்களை அறிந்துகொண்டோம். ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டில் சுவாமி அஸங்கானந்தஜீ மாற்றலாகிச் சென்றுவிட சுவாமி பிரேமாத்மானந்தஜீ மஹராஜ் தலைவரானார். அவர் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழில் ஓய்வு பெறும் வரை அவரது மேற்பார்வையிலேயே இப்பாடசாலை நடைபெற்று வந்தது.

இந்தப் பாடசாலையில் கற்பிக்குமாறு சுவாமிஜீ அவர்கள் பணித்தார்கள். உள்ளூர அதில் விருப்பமிருந்தபோதும் கத்தோலிக்க மதத்தில் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் எனக்குப் போதிய சைவசமய அறிவு இருக்கவில்லை. அதனால் சிறிது தயங்கினேன். எனினும் சுவாமிஜீயும் பூபதி அம்மையாரும் கொடுத்த உற்சாக வார்த்தைகளால் உந்தப்பட்டு அதனை இறைவன் கட்டளை என்றே நம்பி கற்பித்தற் பணியை மேற்கொண்டேன். கற்பித்தலில் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்தினேன். கற்பிக்கும் விடயத்தை நன்றாகத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல், மாணவர் செய்யவேண்டுமென எதிர்பார்ப்பதை ஆசிரியராகிய நாமும் தவறாமல் கடைப்பிடித்தல் என்ற இரண்டுமே அவை.

அக்காலத்தில் மடத்தில் இருந்த ஸ்ரீமத் சுவாமி வரானந்தஜீ மஹராஜ் அவர்கள் தமிழில் பாண்டித்தியம் உடையவர். அவர் வளர்ந்தோருக்கான புராணபடன வகுப்புக்கள் நடத்தி வந்தார். இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த திரு. துரைசாமி சாஸ்திரி அவர்கள் பகவத்கீதை வகுப்பு நடத்தினார். இவ்வகுப்புக்களில் கலந்து கொண்டேன். எமது சமய நூல்கள் பலவற்றையும் படித்து சமய அறிவை வளர்த்துக் கொண்டேன்.

ஆரம்பத்தில் சமய வகுப்பு நடைபெறுவதற்குப் போதிய இடவசதி இருக்கவில்லை. ஆச்சிரமக் கட்டிடமும், பழைய வாசிகசாலைக் கட்டிடமுமே இருந்தன. ஆச்சிரமக் கட்டிடத்தின் பெரிய மண்டபம், கோவில் மண்டபம், சாப்பாட்டறை, நான்கு பக்கமும் இருந்த வராந்தாக்கள்,

வாசிக்சாலை மண்டபம், மரநிழல் என்பனவே வகுப்புக்கள் நடத்த உதவின. ஆனால் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டைத் தொடர்ந்த பத்து ஆண்டுகளுக்குள் இரு பெரிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டதும் வகுப்பறைகள் பற்றாக்குறை நீங்க வழி பிறந்தது. பாடசாலை வகுப்புக்களின் படி மாணவர்கள் தரப்படுத்தப்பட்டிருந்தனர். எமது பாடசாலைக்கென்றே பாடத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. பாடசாலைகளுக்கான அரசாங்கப் பாடத்திட்டத்துடன் பிற விஷயங்களும் அதாவது நீதி நூல்கள், வேதாந்தக் கருத்துக்கள் சம்பந்தப்பட்ட நூல்கள், சைவ, வைஷ்ணவ, சாக்த, கிறிஸ்தவ, பௌத்த மத வரலாறுகளும் சேர்ந்த பாடத்திட்டம் ஒன்று (சமய பாடத்துக்குரியது), பக்திப்பாடல்கள், திருமுறைப்பாடல்கள் முதலியவற்றிலிருந்து தெரிவுசெய்து வகுப்புகளுக்கு ஏற்றவாறு தரப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றொன்று (பாட்டு வகுப்புக்குரியது). இவ்விரண்டையும் சேர்த்து தயாரிக்கப் பட்டதே எமது பாடத்திட்டம். சமய வகுப்பு ஒன்றும் பாட்டு வகுப்பு ஒன்றுமாக இருபாட நேரங்களோடு காலைப் பிரார்த்தனை அரைமணிநேரமும் சேர்த்து, ஞாயிறு தோறும் இரண்டு மணித்தியாலம் பாடசாலை நடைபெற்று வந்தது. மிஷனுக்கு வருகை தருகின்ற சமயப் பெரியார்கள், சாதுக்கள் என்போருடைய அறிவுரைகளையும் மாணவர்கள் பெறும் வாய்ப்புடையவர்களாக இருந்தனர். வருடாவருடம் போட்டிப் பரீட்சைகள் வைத்துப் பரிசளிப்பு விழாவை கிருஷ்ண ஜயந்தியுடன் சேர்த்துக் கொண்டாடினர். சமய நாடகங்கள், பேச்சுக்கள், பக்திப்பாடல்கள் யாவும் சிறப்பாக நடைபெற்றன. காலப்போக்கில் பாடசாலைப் பரீட்சைகளுடன் சேர்ந்துபோக வேண்டியிருந்ததால் எமது பாடசாலைப் பரீட்சைகளையும் வருடக் கடைசியில் நடத்தி பரிசளிப்பு விழாவை டிசெம்பர் மாதத்திலும், கிருஷ்ணஜயந்தி விழாவை செப்ரெம்பர் மாதத்திலும் கொண்டாடும் வழக்கு ஏற்பட்டது.

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டில் கல்வியமைச்சு சமயபாடத்தைக் கட்டாய பாடமாக்கியதால் பரீட்சையில் சித்திபெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு கிறிஸ்தவ பாடசாலைகளிற் கற்ற சைவ மாணவர் பலர் எமது சமய பாடசாலைக்கு வரத்தொடங்கினர். இதனால் மாணவர் தொகை அதிகரித்து நானூற்று ஐம்பதுக்கு மேலாயிற்று. ஆசிரியர்களும் பதினான்கு பேர் வரை பணிபுரிந்தனர். கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்குத் தோற்றியவர்களுக்கு விசேடமான வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இப்பரீட்சைகளில் எமது மாணவர்கள் விசேடசித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபதாம் ஆண்டிலே மாணவர் உபயோகத்துக்கென பஜனாவளி ஒன்று வெளியிடப்பட்டது. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து மூன்றாம் ஆண்டில் சுவாமி ஸ்ரீரங்கானந்தாஜீயின் வருகையோடு பாடசாலையில் இசை, நாடகம் என்பன மேலும் சிறப்புற்றன. அதே ஆண்டில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எமது மாணவர்கள் பல கலைநிகழ்ச்சிகளைத் தயாரித்து மேடையேற்றினர். இந்நிகழ்ச்சிகள் பலரது பாராட்டையும் பெற்றமை மகிழ்ச்சியுடன் நினைவுகூர வேண்டியவை. ஏனைய சமயஸ்தாபனங்கள், கல்வியமைச்சு என்பன நடத்திய சமய சம்பந்தமான போட்டிகள் பரீட்சைகள் யாவற்றிலும் எமது மாணவர் பங்குபற்றிப் பல பரிசுகள் பெற்றுப் பாடசாலைக்கு நற்பெயர் தேடித்தந்தனர். ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டில் இராமகிருஷ்ண மிஷன் அதன் பொன்விழாவைக் கொண்டாடியபோது மாணவர்கள் பல கலைநிகழ்ச்சிகளைத் தயாரித்து மேடையேற்றினர்.

இவ்வாறு சிறப்பாக நடைபெற்று வந்த இப்பாடசாலை ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்றாவது ஆண்டு நாட்டில் இடம்பெற்ற குழப்பத்தினால் பெரிதும் பாதிப்படைந்தது. மாணவர் வரவின்மையால் பாடசாலை மூடப்பட்டது. அந்த ஆண்டில் பரீட்சைகளோ, விழாக்களோ எதுவுமே இடம்பெறவில்லை. அந்த வருடத்தின் இறுதிப்பகுதியிலேயே சிறிது சிறிதாக மாணவர்

வருகைதரத் தொடங்கினர். இரண்டேயிரண்டு ஆசிரியைகள் கடமை புரிந்தனர். அடுத்த ஆண்டில் ஏறக்குறைய அறுபது மாணவருடன் பரீட்சை நடைபெற்றுப் பரிசளிப்பு விழா இடம்பெற்றது.

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டில் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜீ பாடசாலைப் பொறுப்பை ஏற்றார். பாடசாலையும் மெல்ல மெல்ல பழைய பொலிவைப் பெறத் தொடங்கலாயிற்று. வீழ்ச்சி என்பது உயர்ச்சியின் ஏணிப்படிகள் என்ற கூற்றின்படி பாடசாலை வேகமாக முன்னேறியது.

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றோராம் ஆண்டில் மடத்துத் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜீ அவர்களுடைய வழிகாட்டலும், அறிவுரைகளும் அருளொழுகு உள்ளமும் வளர்ச்சியின் அச்சாணிகளாயின. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றியிரண்டாம் ஆண்டு கொழும்பு மடத்துக்குப் பணியாற்ற வந்த ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜீ அவர்களுடைய வழிநடத்தலும் பேச்சுச் சாதுரியமும், இசைஞானமும், நிர்வாகத் திறமையும் இப்பாடசாலையை யாவராலும் போற்றற்குரிய சிறப்புடையதாகத் திகழ வைத்துள்ளது. எந்தவிதமான வேதனமோ, பேரோ, புகழோ, பதவியோ எதிர்பாராது ஞாயிறு தோறும் வருகை தந்து சிறப்பான பணியாற்றும் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் பெருந்தகைமை என்றென்றும் பாராட்டப்பட வேண்டிய முக்கியத்துவம் உடையது.

மாணவர் முழுமையான சமய வாழ்க்கை வாழ வழிகாட்டும் மேலான நிறுவனமாக இப்பாடசாலை மதிக்கப்படுகிறது. இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கையும் செயல்முறையுடன் போதிக்கின்றது. முதலில் சரியைத் தொண்டை எடுத்துக் கொள்வோம். இது கர்மயோகம் என்றும் கொள்ளப்படலாம். இப் பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவர் தொண்டர் குழாமாகச் சேர்ந்து பல பணிகளைச் செய்கின்றனர். ஆச்சிரமத்தையும் சூழலையும் சுத்தம் செய்தல், சேரிப்புறங்களுக்குச் சென்று அங்கு வாழ்மக்களுக்கு வேண்டிய அறிவுரைகள் கூறுதல், மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தல், சமய அறிவு புகட்டுதல், மலையகங்களுக்குச் சென்று அங்கு வாழும் மக்களின் நலன்களைக் கவனித்தல் ஆகிய யாவற்றையும் எதுவித பிரதிபலனையும் கருதாது மனமகிழ்ச்சியுடன் சிறப்பாகச் செய்யும் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இந்த வகையில் அவர்கள் இறைவனை அடையும் வழிகளில் ஒன்றாகிய கர்மயோகத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.

அடுத்து கிரியைத் தொண்டு. அதாவது பக்தி மார்க்கம் அல்லது பக்தியோகம் – மாணவர் விசேட நாட்களில் தாமே இறைவனின் திருவுருவங்களுக்குத் தீபமேற்றி, மலர் கொண்டர்ச்சித்து, கற்பூராரத்தி காட்டிப் பூசை செய்யப் பயிற்றப்படுகின்றனர். தமது வீடுகளிலும் இப்படியான பயிற்சியை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப் படுகின்றனர். அத்துடன் பக்தியை வளர்க்கும் பாங்கில் பக்திப் பாடல்கள் பாடுதல், நாமசங்கீர்த்தனம் செய்தல், தேவார திருவாசகங்களைப் பண்ணுடன் பாடுதல் முதலிய பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றது.

தொடர்ந்து யோக மார்க்கத்தைப் பார்த்தால் அட்டாங்க யோகத்தில் கூறப்படும் இயம நியமாதிகளைக் கருத்துடன் கடைப்பிடித்தலும் ஆசனப் பயிற்சி செய்தலும் முக்கியமாகப் பயிற்றப்படுகின்றது. விசேடமாக யோகாப்பியாசத்தில் திறமையான பயிற்சி பெறுகின்றனர். கடைசியாக ஞானமார்க்கம் பற்றிக் கவனிப்போமேயானால் சமயதத்துவக் கருத்துக்கள் மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கப்படுகின்றன. நான் யார்? ஆன்மாவே நான் – அந்த நானே இறைமைத்துவம் அல்லது அமரத்துவம் போன்ற வேதாந்தக்கருத்துக்களும் சித்தாந்தக் கருத்துக்களும் (ஆரம்ப அறிவு) கொடுக்கப்படுகின்றன. மேற்கூறப்பட்ட நான்கு யோகங்களும்

ஆன்ம விடுதலைக்கு முக்கியமானவையாக இருப்பதனாலேயே சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண மிஷன் இலச்சினையை வடிவமைக்கும் போது இந்த நான்கு யோகங்களையும் தொடர்புபடுத்தி அமைத்தார்.

இராமகிருஷ்ண மிஷன் இலச்சினையில் காணப்படும் அன்னம் ஆன்மாவையும் சூரியன் ஞான யோகத்தையும், பாம்பு இராஜ யோகத்தையும், தாமரை பக்தி யோகத்தையும், அலையுடன் கூடிய தண்ணீர் கர்ம யோகத்தையும் குறிப்பன. இந்த நான்கு யோகங்களினாலுமோ அன்றி அவற்றிலொன்றினாலோ ஆன்மா தனது இறைமைத்துவத்தை எய்த வேண்டும் என்பதே இலச்சினையின் விளக்கம் ஆகும். எனவே எமது சமய பாடசாலை, உயிர்கள் அடைய வேண்டிய ஆன்ம விடுதலைக்கான ஆன்மீகக் கல்வியையும் மண்ணில் நல்ல் வண்ணம் வாழ்வதற்கேதுவாகிய நல்லொழுக்க நெறியையும் புகட்டுவதாக விளங்குதல் பெருமகிழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாகும்.

மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட விவேகவொளி என்னும் கையெழுத்துச் சஞ்சிகையொன்று ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருவது மாணவர்களை உற்சாகப்படுத்துவதாக அமைகிறது. கடந்த வருடம் தைமாதத்தில் இருந்து மாணவர்களின் ஆக்கங்களாகவே அமைந்த "அறநெறி அமுதம்" என்ற பெயர் தாங்கிய ஆன்மீகக் காலாண்டிதழ் ஒன்று சமய பாடசாலைத் தொண்டர் குழாத்தினாலேயே வெளியிடப்பட்டு வருகின்றது. இவற்றையெல்லாம் பார்க்குமிடத்து இப்பாடசாலையில் பயிலும் மாணவர் பூரணத்துவம் அடையக்கூடிய வாய்ப்புகளையும் வசதிகளையும் பெற்று முன்மாதிரியான நற்பிரசைகளாக வாழ்ந்து தாம் நற்கதி பெறுவதோடு அண்டினாரையும் நற்கதிபெற வழிகாட்டுபவராக விளங்குவர் என்பது தெளிவுபடுகிறது. எனவேதான் இப்பாடசாலை "செவ்விய வாழ்வு நல்கும் சீரியதோர் கூடம்" எனப்பட்டது.

இந்த மையம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று மாணவ சமுதாயத்துக்கு நல்வழி காட்டும் சிறந்த போதனா பீடமாக விளங்க மும்மூர்த்திகளின் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

* *தீய சொல் பேசுவதை விட மௌனம் சிறந்தது.*
* *எக் காரணத்தை முன்னிட்டும் மனிதன் பொய் பேசலாகாது. பொய் பேசிப் பழகுபவன் படிப்படியாகப் பாவம் செய்வதற்கு அஞ்சாத கீழான மனப்பான்மையைப் பெற்றுவிடுகிறான்.*
* *நம்பிக்கையும் உறுதியுமே அடிப்படை. இவை இரண்டும் இருந்தால் எல்லாம் இருந்த மாதிரித்தான்.*
* *நீ எந்த இடத்தில் இருந்தாலும், மகிழ்ச்சியுடன் இருக்கும் வகையில் உன் மனத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.*
* *குழந்தாய், நம்பிக்கை ஒன்றே முற்று முடிவான நிலையாகும். ஒருவனிடம் நம்பிக்கை இருக்குமானால் அவன் தன்னுடைய குறிக்கோளை அடைந்த மாதிரித்தான்.*
* *போதுமென்ற மன நிறைவுக்கு நிகரான செல்வம் எதுவுமில்லை. பொறுமைக்குச் சமமான பண்பு வேறில்லை.*

*தூய அன்னை சாரதா தேவி*

# அறநெறிப் பாடசாலையில் எனது அனுபவங்கள்

- செல்வி காயத்திரி அ., ஆண்டு - 12 (2002)

இயற்கையும் செயற்கையும் ஒன்றாய்ப் பின்னிப்பிணைந்து இன்னல் விளைவிக்கும் கொழும்பு நகரிலே அலையோசைகளின் நடுவே இயற்கையுடன் இணைந்து ஒரு பொக்கிஷமாக ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் இருப்பது யாவரும் அறிந்ததே. அவசர உலகில் தம் தேவைகளைத் தேடி ஓடோடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு அமைதி, தூய்மை, சேவை, ஆன்மிகம் ஆகியவற்றைப் போதித்தும், நடைமுறை வாழ்விலும் செயற்படுத்தும் இடமே ஸ்ரீராமகிருஷ்ண மிஷனாகும்.

இவ்வாறான இராமகிருஷ்ண மிஷன் நடாத்தும் ஞாயிறு சமய பாடசாலையில் 1992ஆம் ஆண்டு இரண்டாம் வகுப்பில் சிறுமியாக நான் இணைந்து கொண்டேன். அன்று முதல் அந்த அறநெறிப் பாடசாலையில் புதுப்புது அனுபவங்கள் எனக்குக் கிட்டியது. சிறுவயதில் எனது பெற்றோரின் கட்டளைக்கேற்ப ஞாயிறு சமய பாசாலைக்குச் செல்வதுண்டு. ஆனால் சமய பாடசாலைக்குச் சென்றதும் பஜனை வகுப்புக்கள் என்னை மகிழ்வித்தது. போட்டிகள், விழாக்களில் பங்குகொண்டு பாராட்டும் பரிசும் பெறவேண்டும் என்ற அவாவினால் நான் தொடர்ந்து சமய பாடசாலைக்குச் செல்லத்தொடங்கினேன். அப்போதே மிஷனில் எனக்குப் பிடித்த விடயம் என்னவெனில் சிறிய காரியத்தையும் அதிசிரத்தையுடன் செய்வதாகும். செருப்புக்களை வரிசையாக அடுக்கி வைப்பது முதல் கூட்டுப்பிரார்த்தனைக்காக வரிசையாகச் செல்வது வரை எதிலும் ஒரு ஒழுங்கு இருக்கும்.

காலம் செல்லச் செல்ல கூட்டுப்பிரார்த்தனைகளில் சுவாமிஜிக்கள் கூறும் சிறுசிறு உதாரணங்கள், கதைகள் என்னைக் கவர்ந்தது. ஆண்டு 6, 7 களில், சமய பாடசாலையின் உண்மையான நோக்கம், நான் செய்யக்கூடிய சேவைகள், என்னைத் திருத்திக்கொள்ள வேண்டிய சில இடங்கள் என்பன புரிந்தது. என்றுமில்லாதபடி ஆர்வம் வளர்ந்தது. சுவாமிஜிக்கள் கூறும் உதாரணங்களை வீட்டில் கூறி அதுபற்றி விவாதிக்க விவாதிக்க உண்மை தெளிந்தது. என்னுள் மாற்றமும் தெரிந்தது. அந்தக் காலகட்டத்தில் என்னிடம் மிகமிக அதிகமான கோபம், படபடப்பு, அவசரம் முதலிய சில குணங்கள் இருந்தன. அவற்றை என்னால் உணர முடிந்தது.


சிரமதானம் போன்ற ஞாயிறு பாடசாலைச் செயற்பாடுகளும், விழாக்கள், சுவாமிஜிக்களின் வழிகாட்டல்கள் என்னைச் சிறிது சிறிதாக மாற்றியது. பிறரை மதித்து ஒருவருக்கொருவர் வயது வேறுபாடின்றி தமிழ்ப் பண்பாட்டின்படி வணக்கம் சொல்வது இன்றுவரை தொடர்வது என்னால் மறக்க முடியாதவொன்று. சிலவேளைகளில் என்னிடமிருந்த அவசரத்தனம் காரணமாய் ஆசிரியர்கள், தொண்டர்களிடம் ஏச்சுக்கள் வாங்கிய பின்னர் என் அவசரம் குறைந்து தற்போது என்னுள் ஓரளவேனும் நிதானம் வந்திருப்பதை நானும் என்னைச் சூழ உள்ளோரும் உணர்கின்றோம்.

அன்று இருந்த எனக்கும் இன்று இருக்கும் எனக்கும் எத்தனையோ வித்தியாசங்கள். அவற்றை சுயமதிப்பீடு செய்யமுடியுமே தவிர பறைசாற்றி நிற்கமுடியாது. இப்போதெல்லாம் ஒரு ஞாயிற்றுக்கிழமை சமய பாடசாலைக்கு வராவிட்டால் அந்தக் கிழமையே வீணாகிப்போகிறது. என்னுள் படபடப்பு, எதிலும் நிதானமின்மையினால் பின்னடைவுகள் ஏற்படுவதை நான் உணர்வதோடன்றி என் நண்பர்கள்கூட என்னில் எற்படும் மாற்றத்தை உணர்கிறார்கள்.

இவை தவிர, அவ்வப்போது இந்தியாவிலிருந்து வருகைதரும் சுவாமிஜிக்களின் ஆசிகள், உரைகள் என்பவையும் பசுமரத்தாணி போல பதிந்துவிட்ட அனுபவங்கள் ஆகும். இவை எல்லாவற்றுக்கும் ஸ்ரீராமகிருஷ்ணரின் அருளே காரணம் என நான் நினைக்கிறேன். நான் வேண்டுவதெல்லாம் எப்போதும் நான் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்கு வரவேண்டும், ஸ்ரீராமகிருஷ்ணரின் தெய்வீக ஒளி என்னை வழிநடத்த வேண்டும் என்பதே!

# சமய பாடசாலையின் வருடாந்த விழாக்கள்

## ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜயந்தி விழா





குருமகராஜ் ஜயந்திதின விழாவின்போது, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஆரத்தி செய்து, சூழவுள்ள வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறது.





மேளங்கள் முழங்க, நாதஸவரங்கள் இசைக்க, மாணவர்கள் கொடிகள் சுலோக அட்டைகள் தாங்கி வர, நடைபெற்ற ஊர்வலத்தின் முடிவில், சர்வமத கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

## ஸ்ரீ கிருஷ்ணர் ஜயந்தி விழா






ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விழா, ஞாயிறு சமய பாடசாலையின் ஆண்டு விழாவாகவும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இது மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நிறைந்த விழாவாகும்.

# சமய பாடசாலையின் வருடாந்த விழாக்கள்

## ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விழா...







மாணவர்களில் புதைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டுவரும் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விழா

## ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்





வருட இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படும்





பரிசு பெற்ற மாணவர்களின் நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

# சமய பாடசாலையின் சிறப்புச் செயற்பாடுகள்


பின்தங்கிய பிரதேசங்களில் மிஷனால் நடாத்தப்படும் மருத்துவ முகாம்களில் உதவுதல்


வெளியிடத்தில் நடாத்தப்பட்ட மருத்துவ முகாமில்.. வைத்தியர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள்




கொழும்பில் மிஷனால் நடாத்தப்படும் மாதாந்த மருத்துவ முகாம்களில் கருமமாற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள்



மருந்து வழங்குவதில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள்



மருந்து வழங்குவதில் உதவும் மாணவர்கள்








# விழாக்களில் செய்யப்பட்ட அலங்காரங்கள்









# கல்வி

– சுவாமி விவேகானந்தர்

**கல்வியின் முக்கியத்துவம்**

கல்வி, கல்வி, கல்வி ஒன்றே இப்போது நமக்குத் தேவை. ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக்கூடக் கிடைத்திருக்கும் வாழ்க்கை வசதிகளையும் கல்வியையும் நான் கவனித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நமது நாட்டு ஏழை எளிய மக்களை நினைத்து நான் கண்ணீர்விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம்? கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் பொதுமக்களுக்கு கல்வி ஞானம் கிடைக்கும் அளவிலேதான் தங்கியுள்ளது. கைத்திறன் வாய்ந்த தொழிலாளர் நாளிற்கு நாள் ஐரோப்பிய போட்டியைத் தாங்காமல் மடியக் காரணம் கல்வியறிவின்மையே ஆகும். தாழ்ந்த நிலையிலுள்ள நம்முடைய மக்களுக்கு கல்வியைத் தந்து, இழந்துவிட்ட தங்களின் உயர்ந்த நிலையை வளர்த்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இதுதான் நாம் இப்போது செய்ய வேண்டிய ஒரே சேவையாகும். உயர்ந்த கருத்துக்களை அவர்களுக்குக் கொடுங்கள். அதன் விளைவாக மற்ற நன்மைகள் எல்லாம் தானே வந்து சேரும்.

**கல்வி என்றால்...**

கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? இல்லை! அல்லது அது பல்வேறு விடயங்கள் பற்றிய அறிவா? அதுவும் இல்லை!! எத்தகைய பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகமும், அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வி ஆகும்.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் உள்ளார்ந்த பரிபூரணம் நிறைந்தவன். அறிவு என்பது அனைத்து மனிதரிலும் இயல்பாக அமைந்துள்ள ஒன்று; அது வெளியேயிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதல்ல; அது அகத்தே அமைந்திருப்பது. ஆனால் இது ஒவ்வொரு மனிதரிலும், பல்வேறு காரணங்களால், பல்வேறு அளவுகளில் மறைக்கப்பட்டுள்ளது. மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்து இருக்கும் அந்தப் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்த உதவுவது கல்வியேயாகும்.

**உண்மையான கல்வி**

கல்வி என்பது மூளைக்குள் பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. வெறுமனே விடயங்களைச் சேகரிப்பது மட்டுமே கல்வியாயின், வாசிகசாலைகளன்றோ மகான்களாகவும், அகராதிகளன்றோ மகரிஷிகளாகவும் இருக்க வேண்டும். நூற்றுக்கணக்கான நூல்களை நாம் படிக்கலாம். குழந்தையின் மனதில் நொடிக்கு 50,000 வார்த்தைகளைத் திணிக்கலாம். கொள்கை, கோட்பாடு கற்பிக்கலாம். ஆனால் உண்மை கற்பிப்பது ஒரேயொரு விஞ்ஞானம் - அதுதான் மனஇயல். வெறும் புள்ளிவிவரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதல்ல, மனதை ஒருமுகப்படுத்-துவது தான் கல்வியின் அடிப்படையான இலட்சியமாகும். உண்மையில் கல்வி என்பது மூச்சை அடக்குவதில்தான் ஆரம்பிக்கிறது. மனஒருமைப்பாட்டைப் பெற்றபின்னர், அப்பரிபூரணமான கல்வி-

சுவாமி விவேகானந்தரின் ஞானதீபத்திலிருந்து தொகுத்தவர்கள்:
செல்வி ரெஷாந்தினி குகராஜன், செல்வி பவாணி விவேகானந்தராஜா. வகுப்பு ~ 13 (2001)

யின் உதவியால், வேண்டிய பொழுது தேவையான தகவல்களைச் சுலபமாக சேகரித்துக்கொள்ள முடியும்.

வெளியே ஓடும் மனத்தைத் தடுத்து நிறுத்திய, தலைமுறை தலைமுறையாக நிலவிய கல்வி-முறை இப்போது கிட்டத்தட்ட அழிக்கப்பட்டுவிட்டது. இதுவா கல்விமுறை? மனிதனை மெல்ல மெல்ல இயந்திரமாக்கிக் கொண்டு வருவதும் ஒரு கல்வியா? பல்கலைக்கழகங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளில் எதைச் சாதித்திருக்கின்றன? சுயமாகச் சிந்திக்கும் உண்மையான மனிதன் ஒருவ-னையும் அவை உருவாக்கியதாகத் தெரியவில்லை. அவை வெறும் தேர்வு நடாத்தும் நிறுவனங்-களாக மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொது நலத்திற்காக நம்மைத் தியாகம் செய்ய-வேண்டும் என்ற கருத்து நமது நாட்டில் இன்னமும் வளராமலேயே இருக்கிறது.

வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ளும் வலிமை பெற்றவர்களாக மக்களை மாற்ற உதவாத கல்வி, உறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவிசெய்யும் ஊக்கத்தையும், சிங்கம் போன்ற மனவுறுதியையும் வெளிப்படுத்த உதவாத கல்வி - அதைக் கல்வி என்று சொல்வது பொருத்தமா?

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்-யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வியாகும்.

**கற்றல்**

கல்லினுள் நெருப்பு இருப்பது போல, மனிதனுள் அறிவு மறைந்துள்ளது. கல்லை ஒன்றோ-டொன்று மோதும் போது தீ வெளிப்படுகிறது. புறத்தே தோன்றும் குறிப்பின் மூலம் அறிவு வெளிப்-படுகிறது. பழம் நிலத்தினை நோக்கி வீழ்ந்த குறிப்பினைக் கண்ட நீயூட்டனின் பண்பட்ட உள்ளத்தில் இருந்து வெளிப்பட்ட முடிவினை 'நியூட்டனின் ஈர்ப்பு விதி' என இன்று கற்கிறோம். ஆகவே எல்லா விதமான சக்திகள், இயற்கையின் இரகசியங்கள், ஆற்றல்கள், அறிவு, ஞானம் எனப் பலவாறாக நாம் கூறும் அனைத்தும் நம்முள்ளேதான் இருக்கின்றன. மனித ஆன்மாவே சகல ஞானத்திற்கும் பிறப்பிடமாக இருக்கிறது. இது வெளிப்படாத வண்ணம் மூடியிருக்கும் திரைகளை அகற்றுதலே (கல்வி) கற்றல் ஆகும். இவ்வாறு அறியாமையெனும் திரையை, படிப்படியாக அகற்றுவது அறிவின் வளர்ச்சியாகிறது.

ஒரு மனிதன் 'அறிகிறான்' அல்லது 'கற்கிறான்' என்று சொல்கிறோம். அதை மனோதத்துவ சாத்திரத்திற்கேற்ற மொழியில் சொல்வதானால் 'அதைக் கண்டுகொள்கிறான் அல்லது அறியா-மைத் திரையை நீக்குகிறான்' என்றுதான் சொல்லவேண்டும். நன்றாக ஆராய்ந்து பார்க்குமிடத்து, எல்லையற்ற அறிவுக்களஞ்சியமாகிய ஆன்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்கு-தலே 'கற்றல்' என்பதன் பொருளாகும்.

உண்மையில் எவரும் மற்றவரிடம் கற்பதில்லை. ஒவ்வொருவரும் தாமாகவே கற்றுக் கொள்ள வேண்டும். புறத்தேயுள்ள ஆசான் தூண்டுகிறார் - அகத்தேயுள்ள ஆசான் விழித்தெழுந்து அறிந்து கொள்ள நமக்கு உதவி செய்கிறார். நம்முடைய அனுபவத்தினாலும், எண்ணங்களினாலுமே எல்லாம் தெளிவாகின்றன.

**கற்றலுக்கு அவசியமானவை**

கல்வி மற்றும் அறிவு வளர்ச்சிக்கு மிக அவசியமானது ஒன்று உண்டு - அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்துதல் என்பது. மனதை ஒருமுகப்படுத்துகிற அளவுக்கு அறிவு வளர்ச்சியும் அதிகம் ஆகும். பேராசிரியர்களும், மாணவர்களும், இன்னும் அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபடுவோர் அனை-

வரும் மனத்தை ஒருமுகப்படுத்துவதன் மூலமே தங்கள் அறிவை அபிவிருத்தி செய்து கொள்ளுகின்றனர்.

கவனம் சிதறாது, ஏனைய சிந்தனைகள் இல்லாது, குறித்ததொரு விடயத்தில் தொடர்ச்சியாக மனத்தை ஈடுபட வைக்கும் ஆற்றலே மனஒருமைப்பாடு ஆகும். ஒரு புள்ளியில் மனதை ஒருமைப்படுத்த நாம் விரும்பினால் மனம் அங்கே செல்ல வேண்டும். நாம் விடுவிக்க விரும்பினும் மனம் விலக வேண்டும். கவர்ச்சியான பொருளில் நம்மையும் மீறி மனம் குவிக்கப்படுகின்றது. அதை எளிதில் பற்றுவது போன்று, அதிலிருந்து விலக முடிவதில்லை. பற்றல், விலக்கல் ஆகிய இரண்டு ஆற்றல்களையும் வளர்க்க வேண்டும். மனதில் இருந்து அர்த்தமற்றவற்றை விலக்கும் ஆற்றல் இல்லாதது தான் பெரும்பாலான துன்பங்களுக்குக் காரணம். *(பயனுள்ளவற்றை)* பற்றல், *(பயனற்றவற்றை)* விலக்கல் - இந்த இரண்டு ஆற்றல்களும் ஒருங்கே ஏற்படுவது தான் மனதின் ஒழுங்கான வளர்ச்சி.

செருப்புத் தைப்பவனுங்கூட தன் வேலையில் மனத்தை ஒருமுகப்படுத்தினால் நன்றாக செருப்புத் தைக்க முடியும்; சமையற்காரன் தன் வேலையில் மனத்தை ஒருமுகப்படுத்தினால் நன்றாகச் சமையல் செய்வான்; கல்வி கற்பதிலாகட்டும், பணம் சம்பாதிப்பதிலாகட்டும், கடவுளைத் தொழுவதிலாகட்டும் - எதைச் செய்வதிலாகட்டும் மன ஒருமைப்பாடு அதிகமாகயிருக்கும் வரை அது நன்றாக நடைபெறும். எத்துறையில் வெற்றி பெறுவதாக இருந்தாலும் அது மன ஒருமைப்பாட்டில் தான் பிரதானமாகத் தங்கியுள்ளது.

சாதாரண மனிதன் தன் மனோசக்தியில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்தை வீண் செய்துவிடுகிறான். இதனால்தான் அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவறும் செய்யமாட்டான். மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையிலுள்ள முக்கிய வித்தியாசம் மனதை ஒருமுகப்படுத்துவதில் தான் இருக்கிறது. ஏன் ஒரு மனிதனின் செயலாற்றலுக்கும் இன்னொரு மனிதனின் செயலாற்றலுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டிற்கான பிரதான காரணமும் இந்த மனதை ஒருமுகப்படுத்தும் சக்தியில் தான் தங்கியுள்ளது.

இந்த மன ஒருமைப்பாட்டை வளர்க்க முடியுமா? “முடியும்” என்கிறார்கள் எமது யோகிகள், மகான்கள். “மனதை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தலாம்” என்பது அவர்களின் கூற்று. நாம் தற்போது இருக்கும் நிலையில் எமது மனம் ஒருமுகப்படாது - பல நூறு விடயங்களைச் செய்வதால் நம் சக்தி வீணாகிறது. நம் மனத்தை ஒருமுகப்படுத்த முயன்றவுடன், நாம் விரும்பாத பல எண்ணங்களும் உணர்ச்சிகளும் தோன்றி மனத்தை ஒருமுகப்படுத்த முடியாமல் செய்கின்றன. இவற்றை அடக்கி மனத்தை நம் வசப்படுத்துவது எங்ஙனம் என்பதை இராஜ யோகம் நமக்குக் கற்பிக்கிறது. கிரமமாகத் தியானம் செய்து வருவது மனஒருமையைத் தரக்கூடிய சிறந்த சாதனமாகும்.

கற்றலுக்கு அவசியமான இன்னொன்று, பிரம்மச்சரியம். இதைச் சரிவரக் கடைப்பிடிக்கும் ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லாவிதமான கல்வியறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்று தேர்ச்சி பெற்றுவிட முடியும். பிரம்மச்சரியம் பேணுபவன், ஒரேயொருமுறை தான் கேட்கும் விடயங்களைத் தெளிவாக கிரகித்துக் கொள்ளும் சக்தியையும், சிறந்த ஞாபக சக்தியையும் பெறுகின்றான்.

பிரம்மச்சரியம் என்பது காமத்தை அடக்கி, மனம், வாக்கு, காயம் என்ற மூன்றிலும், எல்லா இடங்களிலும், சகல சந்தர்ப்பங்களிலும். பரிசுத்தமாயிருப்பது ஆகும். பிரம்மச்சாரியாக இருக்க விரும்புகிறவர், புறத்தூய்மையில் மட்டுமன்றி, தான் எண்ணும் எண்ணங்களிலும், பேசும் வார்த்தைகளிலும், செய்யும் செயல்களிலும் தூய்மை உடையவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும், பிரம்மச்சரியத்தை அனுசரித்து பரிசுத்தமான வாழ்க்கையைப் பின்பற்றத்தக்க பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.

காம உணர்ச்சியை அடக்கி அதை மகத்தான ஆன்மிக சக்தியாக மாற்றிக் கொள்ளுங்கள். ஆன்மிக சக்தி அதிகரிக்கும் போதுதான் ஒருவனால் மாபெரும் காரியங்களைச் சாதிக்க முடியும், கடினமான காரியங்களைச் செய்துமுடிக்க முடியும். பிரம்மச்சரியத்தை சரிவர அனுஷ்டிக்காததால் தான் நம்நாடு இவ்வளவு சீர் குலைந்திருக்கிறது.

கற்றலுக்கு சிரத்தையும் தன்னம்பிக்கையும் அவசியம் ஆகும். வேதத்திலும், உயிர் போன்ற உட்பொருளாய் உரைக்கப்பட்டுள்ளது சிரத்தை, ஆர்வம் என்பவையே. இந்தச் சிரத்தையே, யமனை நேரிற்காணவும், யமனை எதிர்த்து வாதாடவும் தேவையான துணிவை நசிகேதனுக்கு அருளியது. ஒவ்வொரு மாணவனுக்கும் கல்வியில் அத்தகைய சிரத்தை இருக்க வேண்டும். சிரத்தையால் அடைய முடியாதது என்று எதுவுமே இல்லை. "அறிவற்றவன், சிரத்தை இழந்த மனிதன், ஐயுறுகின்ற மனிதன் கெட்டே போகிறான்." இதனால் தான் நாம் கேட்டின் அண்மையில் இருக்கிறோம்.

ஒருவனைப் பலவானாக்குவது அவனிடமிருக்கும் தன்னம்பிக்கை. மற்றொருவனைப் பலவீனன் ஆக்குவது, அவனிடம் அந்தத் தன்னம்பிக்கை இல்லாமையே. ஒருவன் "நான் சகல சக்தியும் பெற்றவன், எதையும் செய்யக் கூடியவன்" என்று நினைப்பானானால் அவன் அப்படியே ஆவான். அதைவிடுத்து ஒருவன் "நான் சக்தியற்றவன், ஒன்றுமில்லாதவன், தாழ்ந்தவன்" என்று நினைப்பானானால் அவன் சக்தியற்றவனாகவே ஆகிறான்.

### ஆசிரியரின் கடமை

ஒரு செடி தனது இயல்பிற்கேற்பவே வளரும்; வெளியிலிருப்பவரது விருப்பங்களுக்கமைய அது வளர்வதில்லை. ஆனால் அதன் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு நிலத்தைக் கிளறி விடலாம், வேலியிட்டு மற்றப் பிராணிகள் அதை அழிக்காமல் காப்பாற்றலாம்; அது வளருவதற்குத் தேவையான அளவு பசளை, தண்ணீர், ஒளி, காற்று முதலியவற்றை அவற்றுக்குக் கொடுக்கலாம் - இவ்வளவோடு நம் வேலை நின்றுவிடுகிறது. செடி, தனக்குத் தேவையானது அனைத்தையும், தானே உட்கொண்டு, தானே ஜீரணம் செய்யவேண்டும். இரசாயனப் பொருட்களை உரிய சூழலில், உரிய அளவுகளில் ஒன்றாகச் சேர்த்து வைப்பதுதான் நம் கடமை. இயற்கை விதிமூலம் படிகமாதல் நிகழும். அது போலத் தான் மாணவர்களுக்கு ஆசிரியர் செய்யும் உதவியும்.

எமது சமய ஞானிகளின் கூற்றுக்களின்படி ஒரு சிறுவனிடம் முழுஅறிவும் உள்ளது. அதனை வெளிப்படுத்துவதற்கு உதவி செய்வதே ஆசிரியரின் வேலை. ஆசிரியர் தான் கற்பிப்பதாக எண்ணு-வாரானால் எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறார்! சகல ஞானமும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது; அதைத் தூண்டி எழுப்புவதே ஒரு ஆசிரியரின் வேலை. மாணவர்கள் தங்கள் கை, கால், கண், செவி, உடல் ஆகியவற்றைச் சரியாகப் பயன்படுத்தவும், தங்கள் சொந்த அறிவை உபயோகப்-படுத்தவும் தெரிந்து கொள்ளும் அளவிற்கு ஆசிரியர்கள் அவர்களுக்கு உதவி செய்தால் போது-மானது. இதுவே ஒரு ஆசிரியரின் பிரதான கடமை ஆகும்.

### பெற்றோரின் பங்கு

கழுதையை நன்கு புடைத்தால் அது குதிரையாகும் என்று யாரோ சொல்லக் கேட்டு அவ்விதமே ஒருவன் செய்தான் என்று ஒரு கதையுண்டு. இத்தகைய முறையிலேயே நம் பிள்ளைகளுக்கு தற்போது கல்வி வழங்கப்படுகிறது. பிள்ளைகளின் விஷயத்தில் பெற்றோர் அதிகமாகப் பிரவேசித்துச் சிறு விஷயங்களிலும் தங்கள் விருப்பம் போல் செய்யும்படி வற்புறுத்துவதாலேயே அவர்கள் சுயமாகச் சிந்திக்கும் பழக்கத்தை இழந்து சரியான வளர்ச்சியடையாமல் போய்விடுகின்றனர். எதிர்மறை எண்ணங்கள் பிள்ளைகளைப் பலவீனப்படுத்துகின்றன. சில பெற்றோர்கள் "நீங்கள் உதவாக்கட்டைகள், மடச்சாம்பிராணிகள்" என்று தினமும் தமது பிள்ளைகளைத் திட்டு-

வதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அப்பிள்ளைகள் பல சமயங்களில் உதவாக்கட்டைகளாகவும் மடையர்களாகவும் ஆகிவிடுவதை நீங்கள் கண்டதில்லையா?

உடன்பாட்டு முறையில் அவர்களுக்கு உயர்ந்த எண்ணங்களையும் இலட்சியங்களையும் கருத்துக்களையும் கொடுத்தால், அவர்கள் சுயேட்சையாகத் தாங்களே தங்கள் காரியங்களை நிர்வாகம் செய்யக்கூடிய சக்தியைப் பெறுவார்கள். கல்வியிலாகட்டும் அல்லது இதர கலைகளிலாகட்டும், வேறு எந்தச் செயலிலாகட்டும் பிள்ளைகள் செய்யும் குறைகளைக் காட்டிக் கடிவதில் மட்டும் பயனில்லை. அவர்கள் குற்றங்களின்றி எவ்விதம் இன்னும் நன்றாய் தங்கள் பணிகளைச் செய்ய முடியும் என்பதையும் எடுத்துக் காட்டவேண்டும். சுதந்திரமே மனித வளர்ச்சிக்கு முதல் அவசியம். ஒருவனுக்குச் சுயேட்சையளித்தால் அவன் பலம் பெற்றுச் சிங்கம் போலாக வழியுண்டு.

நீங்கள் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய பெரிய உண்மை இது. "நாம் அனைவரும் சர்வசக்தியும் வாய்ந்த இறைவனின் குழந்தைகள்; அந்த எல்லையில்லாத தெய்விகச் சோதியினின்றும் தோன்றிய பொறிகள்; எப்படி நாம் சக்தியற்றவர்களாக முடியும்? நாம் சகல சக்தியும் பொருந்தியவர்கள்; எக்காரியத்தையும் செய்துமுடிக்க வல்லவர்கள்" என்ற தன்னம்பிக்கையை நீங்கள் அனைவரும் பெறுங்கள்! உயிர் கொடுக்கக்கூடிய இந்த உயர்ந்த சீரிய கொள்கையை உங்கள் குழந்தைகளுக்குப் பிறவியிலிருந்தே ஊட்டி வளர்ப்பீர்களாக!

## இன்றைய கல்வி முறை

இன்றைய கல்வியில் பலநல்ல அம்சங்கள் காணப்படினும் அவை மூலம் பெறப்படும் நன்மையை மறைக்கும்படி அதிக கெடுதலான அம்சங்களும் உள்ளன. கல்வி வாயிலாக நம்முள் உள்ள நம்பிக்கை, ஆர்வம், ஆற்றல், பக்தி பெருக வேண்டும்; இவற்றால் உள்ளுறையும் பேரான்மா விழித்தெழ வேண்டும்; மாறுதலற்ற அன்பு வடிவமான இறைவனிடம் நம்மைக் கொண்டுசேர்ப்பதே உண்மையறிவு. ஆனால் இன்றைய கல்வியோ மிக எதிர்மறையானதாகவே உள்ளது. மாணவர்கள் ஊக்கமின்மை, ஆர்வமின்மை காரணமாக தம்முள் இருக்கும் ஆற்றலை அறியாது உள்ளனர். இப்போது நிலவும் கல்விமுறை தவறானதே. சிந்திப்பது எப்படி? என்பதை அறியமுன் மனதில் பல உண்மைகளைத் திணிக்கிறோம். மன ஒருமைப்பாடே முதலில் கற்பிக்கப்பட வேண்டியதொன்றாக இருக்கின்றது. இன்றைய கல்வி முறை ஒரு குறுகிய நோக்காகவே உள்ளது - எதிர்காலத்தில் சிறந்த மனிதநேயத்தையோ, சிறந்த மனிதத்தன்மையையோ வித்திடக் கூடியதாக இல்லை.

இன்றைய கல்வி முறையானது மேலைநாட்டவரின் பழக்க வழக்கங்களையே பின்பற்றுகிறது. நமது நாட்டில் பெரிய மனிதர்கள் பிறந்தார்கள் என்பதறியாது ஆங்கிலேய முன்னோர்கள் பற்றி கற்கிறோம். இதனால் வறுமையை அகற்ற முடியவில்லை. உணவுக்காக எவ்வளவு பரிதாபக்குரல் எழுகிறது? சுதேச உடையையும், உணவையும், வாழ்க்கை முறையையும் கைவிடுவதால் ஒருவன் தேசியத்தை இழந்து விடுகின்றான். எல்லோரிடமிருந்தும் ஒருவன் கற்றுக்கொள்ளலாம். ஆனால் தேசியத்திற்கு எதிரான, உயர்நிலையை அடையத் துணைபுரியாத கல்வி தாழ்வையே தரும். ஆங்கிலேயர் நம்மை எளிதில் வெல்லக் காரணம் அவர்கள் ஒரு தேசிய சமுதாயமாய் இருப்பது ஆகும். அங்கு, உயர்ந்தவர் ஒருவர் இறப்பின் அதே வேகத்தில் வேறு பெரியவர் உருவாவர்.

அந்த நாடுகளில் கல்வி கற்ற ஆண், பெண்களின் எண்ணிக்கை அதிகமாய் உள்ளது. அதனால் அந்த நாடுகள் முன்நிலையில் உள்ளன. எனினும் வெறும் பௌதீகக் கல்விகளைக் கற்று நமது அன்றாடத் தேவைகள் அத்தனையையும் வெறும் இயந்திரங்களால் நிறைவேற்றிக் கொள்வது உயர்கல்வி அல்ல. உயர்கல்வி என்பது வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க சிறந்த வழியினை வழங்குவதே.

## அனைவர்க்கும் நலந்தரும் கல்வி

அறிவு உதித்து கல்வி பரவாவிடில் நாட்டில் எப்படி முன்னேற்றம் உண்டாகும்? சகல வகுப்பின-ரிடையேயும் கல்வியறிவு பரப்பப்படல் வேண்டும். ஏழை எளியவரிடமும் கல்வி பரப்பப்பட வேண்டும். அவர்களுடைய வறுமை அதன் மூலம் நிரந்தரமாக அகன்று போகும். ஆனால் அதில் பல கஷ்டங்கள் உள்ளன ஒவ்வொரு கிராமத்திலும் இலவசப் பள்ளிகளை ஏற்படுத்தினாலும் ஏழைச் சிறுவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வேலைகளுக்கே செல்வார்கள். ஏழைச் சிறுவர்கள் கல்வியை நாடி வரமுடியாமல் போனால், கல்விதான் அவர்களை நாடிப்போய் அடைய வேண்டும்.

நாட்டிலுள்ள சுயநலமற்ற, நற்குணம் படைத்த கல்வி கற்றுள்ள நூற்றுக் கணக்கானோரைத் திரட்டி கிராமம் கிராமமாகச் சென்று, ஒவ்வொருவருடைய வீட்டையும் நாடிச் சென்று சமயப் பண்பு மற்றும் கல்வியைக் கொண்டு சேர்க்க வேண்டும். வேலை முடித்து பேசிப் பொழுது போக்கும் நேரத்தில் அங்கு சென்று வாய்மூலம் கல்வி புகட்டவேண்டும். கண்மட்டுமன்றி காதுவாயிலாகவும் இது அமையலாம். நம் நாட்டின் ஏழை எளிய மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய ஒரே சேவை கல்வி அளிப்பதே. அவர்கள் இழந்துபோயுள்ள தனித்தன்மையை வளரவைத்து சீரான கருத்துக்-களை அளித்தாக வேண்டும். அது ஒன்றே அவர்களிற்குத் தேவையான உதவி; ஏனையவை எல்லாம் அதன் பயனாகக் கிடைத்துவிடும். கல்வி கற்று அறிவு மேம்பட்டதும் ஒருவர் தனது சுய-தொழிலைக் கைவிட்டுவிட வேண்டும் என்பதில்லை. அறிவு மேம்பாட்டுடன் சுயதொழிலைச் செய்பவர்களுள் ஞான வீரர்கள் பலர் தோன்றுவர்.

அதுமட்டுமல்லாது நாட்டின் கண்களாயுள்ள பெண்களிடையேயும் கல்வியறிவு ஏற்படுத்தப்படல் வேண்டும். எல்லாத்துறையிலும் பெண்கள் பிரகாசிக்கவேண்டும். நல்லொழுக்கம் மிக்க ஆன்மிக வாழ்க்கையில் பெண்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நல்ல தாய்-மாராக வளரமுடியும். கடவுள்பற்றிய கல்வியறிவுள்ள தாய்மார் வாழும் இல்லங்களில்தான் பெரிய மனிதர் பிறக்கின்றனர். பெண்கள் பிரச்சினையைத் தீர்க்க கல்வி மூலமே முடியும். பெண்களுக்கு கல்வியை வழங்குவதாயின் முதலில் கற்பு நெறியை அவர்களின் மனதில் பதியச்செய்ய வேண்டும். அத்துடன் விஞ்ஞானம் போன்றவற்றையும் புகட்டவேண்டும்.

விஞ்ஞானக் கல்வி அவசியம் தான். ஆனால் விஞ்ஞானக் கல்வியுடன் மட்டும் நின்றுவிடாதீர்-கள். வேதாந்த ஞானம், பிரமச்சரியம் எனும் இலட்சியம், சிரத்தை, தன்னம்பிக்கை இவையெல்-லாம் எமது கல்வியில் இணைக்கப்படல் வேண்டும். இந்த ஒரு வழியில்தான் ஒரு தேசிய சமுதாயம் உருவாக முடியும்.

எதிர்காலத்திற்கு நலன்புரிவதான கல்வி பரவினாலன்றி இப்பொழுது இருக்கின்ற நிலையை சீர்திருத்துவது கடினம். மிகுந்த நன்மை விளைவிக்கும் வேதங்களையும், கீதையையும், இதர சமய நூல்களையும் படிப்போம். அவ்வளவுதான் எங்கள் தேவை.

* *இதய பூர்வமான காரியங்களைச் செய்பவனுக்கு இறைவனும் உதவி புரிகின்றான். உன்னால் இயன்ற வரையில் நற்செயல்களைச் செய்.*
* *தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான் எல்லா வழிபாடுகளினதும் சாரமாகும்.*
* *உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை.*

**- சுவாமி விவேகானந்தர்**

# பண்பு

**– சுவாமி விவேகானந்தர்**

**பண்பு என்றால்...**

ஒரு மனிதன் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், செய்யும் ஒவ்வொரு செயலும் அவனது மனதில் ஒரு பதிவை உண்டாக்குகிறது. இன்பமும் துன்பமும் மனித ஆன்மாவைக் கடந்து செல்லும் போது ஆன்மாவின் மேல் பலவகையான அனுபவங்களை நுட்பமாகப் பதித்துச் செல்கின்றன. மனிதனிடம் அமையும் இந்த அனுபவங்களின் ஒட்டுமொத்தமான பதிவுகளே 'பண்பு' (குணம்) என்று அழைக்கப்படுகிறது. நாம் எந்தவொரு மனிதனின் பண்பை எடுத்துக் கொண்டாலும், உண்மையில் அது அவனுடைய உள்ளத்தின் உணர்வுகள் அத்தனையும் சேர்ந்து உருவானதொன்று என்பதையும், அவனுடைய எண்ணங்கள் அனைத்தினதும் திரண்ட வடிவம் என்பதையும் அறியலாம்.

'சமஸ்காரம்' எனும் பதத்திற்கு 'இயற்கையால் அமைந்த மனநிலை' என்று பொருள் கொள்ளலாம். மனம் என்னும் ஏரியில் எழும் சிற்றலைகள் முற்றிலும் மறைந்து போகாமல், தாம் திரும்பி வருவதற்கான அறிகுறிகளை விட்டுச் செல்கின்றன. இவற்றையே சமஸ்காரம் என்று கூறுகிறோம். எண்ணப்பட்ட எண்ணம் ஒவ்வொன்றும் தொடர்ந்து வாழ்கின்றது. அவை தம்மைச் செயல்களாக உருவாக்கிக் கொள்வதற்கு இடையறாது முயற்சி செய்துகொண்டிருக்கின்றன. சமயம் கிடைக்கும் போது, அவை புதிய உருவத்துடன் வெளிவருகின்றன. இத்தகைய ஒவ்வொரு எண்ணமும், எண்ணத்தின் விளைவான ஒவ்வொரு செயலும் மனத்தில் பதிவுகளை ஏற்படுத்துகின்றன. அவை வெளிப்படையாக தெரியாமல் இருந்தாலும், உள்மனதில் நம்மை அறியாமலே விளைவுகளை உண்டாக்கும் அளவிற்கு வலிமை படைத்தவையாகும். நாம் ஒவ்வொரு கணமும் எப்படி? என்ன மனநிலையில்? எத்திசையில்? இருக்கிறோம் என்பதை ஒட்டுமொத்தமான இந்த மனப்பதிவுகளே நிர்ணயிக்கின்றன. இந்த நிமிடத்தில் நான் என்னவாக இருக்கிறேனோ, அது என்னுடைய கடந்தகால சம்ஸ்காரத்தின் விளைவாக அமைந்ததேயாகும். இதுவே ஒருவனுடைய பண்பு என்று அழைக்கப்படுகிறது. நாம் இறக்கும் போது இந்தப் பதிவுகளின் கூட்டுமொத்தப் பலனே எஞ்சி நிற்கும்; இதுவே ஆன்மாவுக்கு வழிகாட்டுகிறது. முழு அனுபவம் பெறும்வரை ஆன்மா வெவ்வேறு உடல் எடுக்கிறது. அதன் பின்னர்தான் அதுதன் உண்மை இயல்பை அறிந்துகொள்கிறது; முழுமையடைகிறது; முக்தியடைகிறது.

**பண்பின் நிர்மாணம்**

ஒவ்வொரு மனிதனும், தன் பண்பைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். அவன் தன் வாழ்க்கையில் மனத்தாலும், உடலாலும் செய்த செயல்களின் பலனே அவனது பண்பாக உருப்பெறு-கிறது. பண்பை உருவாக்குவதில், இன்பமும் துன்பமும் சரிசமமான இடத்தைப் பெறுகின்றன. நமது எண்ணங்களுக்கு ஏற்பவே நாம் உருவாகிறோம். தொடர்ச்சியான எண்ணம் ஒருவரின் செயலாக உருப்பெறுகிறது; தொடர்ந்து செய்யும் செயல் ஒருவரின் பழக்கவழக்கமாக (நடத்தையாக) மாறுகின்றது; இத்தகைய பழக்கவழக்கங்கள் வலிமையான பதிவுகளை மனதில் ஏற்படுத்துகின்றன. இப்பதிவுகளின் (பழக்கவழக்கங்களின்) தொகுப்பே, ஒருவனது பண்பு எனப்படும் மாபெரும் சக்தியாகும்.

சுவாமி விவேகானந்தரின் ஞானதீபத்திலிருந்து தொகுத்தவர்கள்:
செல்வி அனுசூயை ஜீவரட்ணம், செல்வி மதுராந்தகி வடிவேலு. வகுப்பு – 13 (2001)

ஒரு மனிதன் தொடர்ந்தும் தீயவற்றைக் கேட்டு, தீயவற்றைப் பார்த்து, அவற்றையே சிந்தித்துக் கொண்டிருந்தால், அவன் தீய செயல்களையே செய்கிறான். அவனது மனம் முழுவதும் தீய சிந்தனைகளால் நிரப்பப்படுகிறது. உண்மையில் இத்தீய பதிவுகள் அவன் உள்மனத்தில் எப்பொழுதும் வேலை செய்தபடியே இருக்கின்றன. இத்தீய பதிவுகள் தீயனவற்றைச் செய்யத் தூண்டும் வலிமை வாய்ந்த மனநிலையை உருவாக்கும். இதன் விளைவாக அவன் தீயவனாக, கொடியவனாக இருக்கிறான். அவனே நல்லவனாக முயன்றாலும், அவனால் அத்தனை சுலபத்தில் அத்தீய பண்பில் இருந்து விடுபட்டுவிட முடியாது.

மறுபக்கம், ஒரு மனிதன் தொடர்ந்தும் நல்லவற்றைக் கேட்டு, நல்லவற்றைப் பார்த்து, நல்ல எண்ணங்களையே எண்ணிக் கொண்டிருந்தால், அவன் மனதில் நல்லவையே பதியப்பெறும். அவை நல்ல செயல்களைச் செய்ய அவனைத் தூண்டும். அவனது மனம் முழுவதும் நல்ல சிந்தனைகளால் நிரப்பப்படுகிறது. இதனால் அவன் உள்ளத்தில் நல்லதையே செய்யவேண்டும் என்ற தவிர்க்க முடியாத போக்கு உண்டாகிறது. அவனாகத் தீயவற்றைச் செய்ய விரும்பினாலும், நன்மையின் மொத்த வடிவமாகவுள்ள அவனது உள்ளம் அவனை அவ்வாறு செய்யவிடாது. அவன் பூரணமாக நற்சுபாவங்களின் வயப்பட்டுவிடுகிறான். இவ்வாறு அமையும் போதுதான் ஒரு மனிதனின் சிறந்த பண்பானது முழுமையாக நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**நல்ல எண்ணங்கள், செயல்களின் விளைவுகள்**

ஒரு மனிதனின் பண்பை உருவாக்குவதில் செயலின் பங்கு முக்கியமானதாகும். இன்று நாம் உலகில் காண்கின்ற எல்லாவிதமான செயல்கள், சமுதாயத்தில் நடக்கின்ற சகலவிதமான இயக்கங்கள், நம்மைச் சுற்றி நடக்கும் வேலைகள் அனைத்தும் எண்ணங்களின் வெளிப்பாடுகளே; மனவுறுதியின் வெளிப்பாடுகளே. அதனால் எண்ணுவது குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு எண்ணத்திலும் நமது இயல்பு படிந்திருக்கிறது. நாம் எண்ணும் ஒவ்வொன்றும், நமது உடல் என்னும் இரும்புத் துண்டின் மீது சுத்தியலைப் போன்று தாக்கி, நாம் விரும்பும்வண்ணம் அதை உருவாக்குகிறது. நாம் எண்ணும் ஒவ்வொன்றும், எமது செயல்களாக பரிணமிக்கின்றன.

ஒருவனின் செயல் எத்தன்மையதோ, அத்தன்மையதே அவனது மனவுறுதியின் வெளிப்பாடும். இந்த உலகம் இதுவரை தோற்றுவித்துள்ள மிகச்சிறந்த மனவுறுதியுடைய மனிதர்கள் எல்லோருமே, மற்றவர்கள் கனவிலும் நினைக்காத, உலகமே பார்த்து ஆச்சரியத்தால் வெலவெலத்துப் போகும் காரியங்களைச் செய்பவர்களாக, தங்களது ஈடிணையற்ற மனவுறுதியால் உலகங்களைத் தலைகீழாகக் கவிழ்ப்பவர்களாக இருந்திருக்கிறார்கள். இத்தகைய மனவுறுதியை அவர்கள் பிறவிதோறும் இடைவிடாது தொடர்ந்த கடினமான பயிற்சியினால் பெறுகின்றார்கள். அத்தகைய பிரமாண்டமான மன ஆற்றல்தான் பின்னர் ஒரு புத்தராகவும், ஒரு ஏசுவாகவும் உருவெடுக்கிறது. இத்தகைய ஆற்றல்கள் ஒரே பிறவியில் உருவாகிவிடுவதில்லை.

**பண்பறிதல்**

நீங்கள் ஒரு மனிதனின் உண்மையான பண்பை அறிய விரும்பினால், அவனுடைய மகத்தான செயல்களைப் பார்த்து முடிவுக்கு வராதீர்கள். ஒரு முட்டாள்கூட குறிப்பிட்ட ஒரு நேரத்தில் அல்லது சில நேரங்களில் அரும்பெருஞ் செயல்களைச் செய்து மகத்தான மனிதன் ஆகிவிடுவான். அந்த மனிதன் செய்கின்ற மிகமிகச் சாதாரணமான செயல்களைக் கவனியுங்கள். உண்மையில் அவைதாம் அந்த மனிதனின் உண்மையான பண்பை உங்களுக்குத் தெரிவிக்கவல்லவை. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்கள், மிகக்கீழான மனிதர்களைக்கூட ஒருவகையான மகத்தான நிலைக்கு உயர்த்திவிடும். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காலத்திலும் யாருடைய பண்பு உயர்ந்ததாக இருக்கிறதோ அவனே உண்மையில் சிறந்த மனிதன் ஆவான்.

### மனிதனின் உண்மையான சுபாவம்

உங்கள் இயல்பே தீமையானது, ஏதோ சில தவறுகள் செய்துவிட்டதால் நீங்கள் வீட்டிற்றுச் சென்றதும் அதையே எண்ணி அழுதுகொண்டிருக்க வேண்டும் என்று கூறினால் அது உங்களுக்கு உதவி புரிவதாகாது. மாறாக, அது உங்களை மேலும் பலவீனப்படுத்தவே செய்யும். அப்படிக் கூறினால் நான் உங்களுக்கு நன்மைக்கான வழியைவிடத் தீமைக்கான வழியையே காண்பிப்பதாக அமைந்துவிடும். இருண்ட அறையிலிருந்துகொண்டு, "ஐயோ இந்த அறை ஒரேஇருளாக இருக்கிறதே" என அழுவதால் அந்த இருள் மறைந்துவிடுமா? ஒரு தீக்குச்சியை உரசுங்கள், மறுகணத்தில் இருள் மறைந்து ஒளி வந்துவிடும். அது போலவே நல்ல பண்புகளை நிர்மாணித்துக் கொள்ளுங்கள்; தீயவை தானாகவே மறைந்துவிடும். எனவே செய்த தவறுகளுக்காக அழுதுகொண்டே இருக்க வேண்டாம். நீங்கள் பாவிகள் அல்லர். இக்கணத்திலிருந்து செய்ய உள்ளவற்றை நல்லதாகவே செய்யுங்கள். முடிவில் எல்லாம் சரியாகிவிடும் என்பதில் உறுதி கொள்ளுங்கள். ஏனெனில் நன்மையே எமது உண்மையான சுபாவம்; தூய்மையே நமது உண்மையான இயல்பு.

### மனித வாழ்வின் இலட்சியம்

மனித சமுதாயத்தின் இலட்சியம் ஞானத்தை அடைவதே. மனித வாழ்வின் இலட்சியம் இன்பமல்ல ஞானம் ஒன்றுதான். இந்த இன்பங்களும் மகிழ்ச்சியுமே வாழ்வின் இலட்சியங்கள் என்று நினைப்பது தவறாகும். இன்று உலகத்தில் காணப்படும் எல்லாவிதமான துன்பங்களுக்கும் காரணம் மனிதன் முட்டாள்தனமாக தன் வாழ்வின் இலட்சியம் இன்பம் என நினைத்து அதைத் தேடி அலைவதுதான். பலகாலம் இப்படித் தேடியலைந்த பிறகுதான் அவனுக்கு இறுதியில் இந்த வாழ்வின் இலட்சியம் இன்பமல்ல, அந்த ஞானத்தை நோக்கியதே என்பதும் புரிகிறது. இன்பமும் துன்பமும் பெரிய ஆசிரியர்கள்; நன்மையைப் போலவே தீமையிலிருந்தும் மனிதன் பெரும் பாடத்தை மனிதன் கற்றுக் கொள்கிறான். மனிதன் தன் இலட்சியத்தை (ஞானத்தை) அடைவதற்கு, அதாவது இயற்கை நம்மீது கொண்டிருக்கும் ஆதிக்கத்தை நீக்குவதற்காக, நம்மை பரம்பொருள் தத்துவமாக ஆக்கிக் கொள்வதற்கு நாம் செய்யும் முயற்சியே நல்லொழுக்கம் (நற்பண்பு நிர்மாணம்) ஆகும். அதனால் தான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் "முதலில் நல்ல பண்பைத் தேடிக்கொள், பிறகு ஞானத்தைத் தேடு, பலன் தானே கிடைக்கும்" என்று கூறியுள்ளார்.

மிகச்சிறிய அமீபாவிலிருந்து இந்த மனிதநிலைக்கு உங்களை உயர்த்தியது ஆற்றல்மிக்க நற்செயல்களின் பலனே. இவ்வளவு உயர்ந்த நிலைக்கு உங்களைக் கொண்டுவந்தது, மேலும் உயர்ந்த நிலைக்கு உங்களைக் கொண்டு போகும்; உங்களுக்கு வேண்டியது சிறந்த பண்புகளே.

எனவே, நீங்கள் நற்பண்பை முதலில் நிர்மாணித்துக்கொள்ளுங்கள்; அத்துடன் ஒளிமயமான, பிரகாசிக்கின்ற, என்றும் தூய்மையான உங்களது உண்மையான இயல்பை வெளிப்படுத்துங்கள். மேலும் நீங்கள் காணும் ஒவ்வொருவரையும் அக்கண்ணோட்டத்துடனேயே காண்பீர்களாக.

ஞாயிறு சமய பாடசாலையில் கற்று பல ஆண்டுகளின் பின்னர், 1985இல் அங்கு கற்ற சமயத்தை ஆதாரமாகக் கொண்டு நல்லூர் சனசமூக நிலையத்திலும், எனது கண்காணிப்பில் இருந்துவரும் கொழும்புத்துறை பழனி ஆண்டவர் கோயிலிலும் ஞாயிறு வகுப்பு நடாத்தும் வாய்ப்புக் கிடைத்தது.

- திரு. இராஜபுவனீஸ்வரன்

# REMINISCENCES OF AN OLD BOY OF THE SUNDAY RELIGIOUS SCHOOL

*- Mr. N. Sivakurunathan*

It was in the year 1952, sometime during school holidays when one Sunday morning I was playing cricket with my brother, that my father rather abruptly asked us to stop playing: we looked at him enquiringly. He told us "Go and do a bath and get ready. Ramakrishna Mission is starting a Sunday School at 9:15 a.m. today and I am enrolling both of you." Both of us grumbled but got ready, wondering whether this "school" too would have strict teachers who will give us the works, if we are mischievous.

We were in for a pleasant surprise. The first period was between 9:15 a.m. and 9:45 a.m. Swami Varanandaji regaled us with some delightful stories having a religious background; some of the stories were based on the Upanishads of Sri Ramakrishna. The second period was conducted by one or two "lay masters" who taught us the *Thevarams*, their meaning and how to sing them according to the *raghas*. Usually it was Mr. Maickavasagar who was our regular teacher. This period ended by about 10:30 a.m. From 10:30 a.m. to 11:15 a.m., there would be a talk, sometimes inviting questions and responses, by some eminent persons such as Mr. Sathasivam, who was Superintendent of Examinations at that time. At times, Swami-in-Charge Asanganandaji would deliver the talk. At 11:15 a.m., after two minutes of meditating silence, there will be a bhajan going on till 11:30 a.m. by one Mr. Kumarakulasingham. At 11:30 a.m., every one present including parents and well-wishers were given a fairly large piece of *Mysore Pahu*, which was very welcome.

As far as I was concerned, it was a great learning experience. For, I was going to a state school from Monday to Friday studying of books and men and learnt to play the game, but did not learn any religion, as it was not in the curriculum those days. I was only 12 years old when I joined the RKM Sunday School, and what I imbibed there, made a deep impression on me and my subsequent conduct in life. Since our parents were too busy with their day to day chores, they were not in a position to tell us any kind of moral fables on a regular basis, after we were five years of age. At school we did not permit our teachers to tell us any tales, because we were too mischievous and called them *'conners'*.

At the mission however, the serene atmosphere, with the ever smiling Swamis and teachers, it was a very different environment. There was a greater willingness to impart by the teachers, and a willingness to learn by the students.

The best period we had was when we were adolescents between the ages 15 and 19. Then we had an hour long period with Brahmacharis. We were very free with them and they used to encourage very lively discussions on current religious topics as well as on social issues. One Rajarajeswaran would provoke the *Brahmachari* with questions like "Have you seen God?", "How is that some apparently unprincipled people (quoting a few politicians) are doing very well in life and enjoying themselves enormously with the fat of the land?". "Also if Lord Krishna was

God incarnate, how did he not know that Duryothana had concealed a fitful of destructive mechanism to hurt him?". "He need not have taken the *Vishvaroopam!*".

For which, the Brahmachari would answer "Rajarajeswaran, to those who believe in God, no proof is necessary, and to those who do not believe in God, no proof is possible. You need not see God firstly; you can feel his presence, and if you do sufficient *Thapas* you may see him. God is truth, God is nature, God is love and God is life. He is within you; He is within me; and He is within all of us."

"I shall answer your second question. Lord Krishna knew of the trap, but he pretended to fall for it in order to assume the *Vishvaroopam* so that Duryothana and others would be made aware of Lord Krishna's omnipotence, omniscience and omnipresence. But Duryothana as he was destined to be was wicked and did not desire to reform himself."

The Brahmachari told us that the *Pandavas* had to go through their karmic life, so too had the *Kauravas*. All have to endure their Karma, said he. He taught us the glimpses of *Karma Yoga*, *Raja Yoga*, *Bakthi Yoga* and *Gnana Yoga*. He also recommended to us, to buy a good translation of the *Bhagavat Gita*.

Of special interest to all would be following dialogue between the students and the Brahmachari.

**Student:** Swami, why does the Hindu Religion lay an emphasis on vegetarianism?

**Brahmachari:** Because, Hinduism asks you to do the utmost good to others in one's life while at the same time doing least harm to others including oneself.

**Student:** How is that relevant and possible?

**Brahmachari:** If you have three meals a day, try to give one meal as alms to a beggar; similarly, if you have two meals a day, try to give one meal and still survive. But if you are capable of earning only one meal a day, then don't give away that one meal, since you may harm yourself & not survive to do good to others. Yet you may give all your meals and pay the supreme sacrifice; that is also meritorious. But as a *Samsari*, you must survive and do good.

**Student:** What has all this got to do with being a pure vegetarian?

**Brahmachari:** When you are a vegetarian you are doing least harm to others and doing good, in that you are not taking away a life in order to survive.

**Student:** Even vegetables have life!

**Brahmachari:** Yes, but when you lop off a branch or a leaf of a tree, plant, weed or creeper, boil and eat it, the tree does not die. In fact the branch or leaf may grow again. Most trees survive after giving us fruits and nuts year after year. But if you chop off the leg of a lamb, the lamb will surely die. So do not cause pain and get lambs killed.

**Student:** Don't vegetables feel anything?

**Brahmachari:** All life in this world has senses. The more senses you have, the more you will feel. For instance, we humans can hear, see, smell, taste, feel and even have a sixth sense. So when we are hit, abused and see a child killed, we suffer greater pain than others. Animals too hear, etc. and suffer killings, but if they survive, their mental capacities are such that they forget and are hardly emotional. They are said to have four senses only. Vegetables can hear and may feel, but suffer less because they are supposed to have three senses. (There have been recorded instances where big agriculturists had used music to get more produce. For example, a diary farmer had written of instances where good music blaring forth in his diary farm had helped him to obtain more milk. Similarly, other farmer had blared forth music in his grain farm and used to get more than the average harvest of wheat. Vegetables have thus only three senses. Therefore, please try to be vegetarian and do less harm.

**Student:** Then Swami, how does an Eskimo exist?

**Brahmachari:** There of course the Eskimos have to kill the seal and eat it, because otherwise he cannot live; he will be doing harm to himself; he has to survive to do good and be a good person. You cannot expect that Eskimo to leave his habitat in Iceland, go way to far away places to live in a place with vegetables; he may not have the wherewithal, and may fall ill in a different climate. Similarly, even if you fall sick and the doctor states that for your particular illness only chicken soup can save you, then take the chicken soup. Otherwise you may die and thereby not live to do good. However, when you recover from your illness, you should stop taking chicken.

**Student:** Therefore, Swami what is the principle?

**Brahmachari:** The principle, the concept is, do least harm to others, while doing least harm to yourself. Do good to others while doing good to yourself, in order that you can serve humanity better. Now take for example the bacteria in the air. When you breathe in, the bacteria may go in and die. Bacteria have only one sense. You cannot help killing that life. Because, if you stop breathing to save the life of bacteria, then you shall certainly die. You are not going to do good to others by dying.

Do good to yourself, do well in life, live usefully, earn and be generous and be large hearted both in thought and action.

Finally, I would for my part say that my above experiences at the Sunday School persuaded me to endeavour to live well and to be best of my ability to help others in need, by word and deed; in short, to be magnanimous. I am eternally grateful to the Ramakrishna Mission Sunday Religious School.

# அறநெறிப் பாடசாலைகள் நெறிப்படுத்தும் உயர் விழுமியங்கள்

- செல்வி கஜவதனி கந்தசாமி, ஆண்டு - 10 (2001)

"அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லாதவர்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்கப் பண்புடமை-யைக் குறிக்கோளாகக் கொண்டு, அறநெறிப் பாடசாலைகள் உயர் விழுமியங்களை மாணவர்கள் மத்தியில் நிலைநாட்டி வருகின்றமை, எமது சமுதாயம் பெற்ற வரப்பிரசாதம் ஆகும்.

விஞ்ஞானமும் அதன் பரிணாமமும் கொடி கட்டிப் பறக்கும் அவசர உலகில் வாழ்வியல் முறைகளை எதிர்கால நாட்டின் முதுகெலும்பான இளைஞர் சமுதாயத்திற்கு அறிவியல் ரீதியாகவும், செயல் ரீதியாகவும் சென்றடையச் செய்வதே அறநெறிப் பாடசாலைகளின் குறிக்கோளாகும். ஒருவன் தான் கற்ற கல்வியைக் கொண்டு மூளை சாலியாகவும் திகழ்ந்தாலும் "தன்னம்பிக்கையும், இறைநம்பிக்கையுமே அவனை வாழ்விக்கின்றது" என்பதை அறநெறிக் கல்வி வலியுறுத்துகின்றது.

அன்பு, பொறுமை, ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை போன்ற ஐந்து பண்புகளும் ஒருங்கே சேர்ந்துள்ள நிலையிலேயே ஒருவன் சான்றோன் ஆகின்றான் என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்கத் தன்னம்பிக்கையையும், இறைநம்பிக்கையையும் ஆழமாக மாணவர் மனதில் பதிந்து, ஆளுமையை அவர்கட்கு வளரவைத்து ஒரு குழந்தையைச் சான்றோன் ஆக்குவதில் அறநெறிப் பாடசாலைகள் பாரிய தொண்டாற்றி வருகின்றன.

பிள்ளைகள் பள்ளிப் பருவத்தில் அவரவர் இயல்பூக்கத்திற்கு ஏற்ப சில தன்மைகளை அடைவது இயல்பு. பொறாமை, வெறுப்பு, கோபம் முதலிய "கொடிய" உணர்வுகளையும், சிலர் உண்மை, கருணை, பணிவு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, மன்னிக்கும் பண்பு, தவறை ஒத்துக் கொள்ளும் தன்மை முதலிய "இனிய" உணர்வுகளையும் அடையக் கூடும். சிலர் நல்வழிக்கு திசை திருப்பப்படலாம். சிலர் தவறான வழியைத் தொடரலாம். இச்சந்தர்ப்பத்தில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எடுத்துரைத்து ஒருவனைத் தானே தன்னை ஒழுங்கமைத்துக் கொள்ளக் கூடிய வகையில் நல்வழியில் வளர வைப்பதில் முதன்மை வகிக்கின்றன இவ்வற நிலையங்கள்!

சமயப்பற்று, சமூகப்பற்று, தொண்டுபுரிவதில் ஆர்வம், சமயத்தில் போதிய அறிவுள்ள ஆசிரியர்களின் வழி நடத்தலில் மாணவர்கள் கல்வி கற்கும் போது "அறிவியல் ரீதியான" மாத்திரமன்றி மன உணர்வுடனும் அன்பான சூழலின் மகிமையையும் உணர்ந்து கல்வியைப் பெறுகின்றனர்.

வெறும் ஏட்டளவிலும், பரீட்சை மையமாகவும், சான்றிதழைப் பெறுவது, கொண்டாட்டங்களில் பங்கேற்றல் என்ற ரீதியில் மாத்திரமன்றி இவ்வாழ்வியல் முறைகள் ஏன்? எதற்காக? எப்படி? யாருக்காக? என்ற வினாக்களை மாணவர் மனதில் தொடுத்து, உண்மையிலேயே "சமயம்" என்றால் என்ன என்பதை மாணவர் மனதிற் பதிய வைக்கின்றன.

பக்தி முறையில் வாழ்ந்து முக்தி பெற்ற நாயன்மார்கள், தீர்க்கதரிசிகள், சித்தர்கள் போன்றோரின் வரலாறுகளின் மூலம் இவர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்? இவர்களின் இலட்சியம் என்ன? இவர்களை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் சென்றது என்ன? இவர்கள் கூறும் செய்தி யாது என்று மாணாக்கரின் இளமனதில் "பசுமரத்தாணி" போற் பதிய வைத்து உயர்வழிக்கு அழைத்துச் செல்வது அறநெறிப் பாடசாலைகளே என்றிடின் அது மிகையாகாது.

ஒரு விதைக்கு நீரூற்றி, அதற்குத் தேவையான போசணையைக் கொடுத்து, அதற்கு பசளையிட்டு, வேலியிட்டுப் பாதுகாத்தால் அத்தாவரம் அதனை உறிஞ்சி வளர்ந்து விதையிலிருந்து விருட்சமாகிப் பயன்தருவது போலவே, மாணவர் மனதைப் பண்படுத்தி, அதில் உயரிய நற்கருத்துக்களை விதைத்து, ஆலோசனைகளிலும் கருத்துக்களிலும் நீரூற்றி வளர்ப்பின் நாளை ஒரு யுகத்தின் முகத்தைப் பிரகாசமாக மாற்றக்கூடிய வகையில் அம்மாணவன் நவீன விவேகானந்தராவான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இன்றைய கலியுகத்தில் நவநாகரீக வளர்ச்சியாலும் போதைவஸ்துக்கள், சினிமா, கலாச்சாரத்தில் மேல்நாட்டு மோகம் என்பதாலும் மாணவரின் சிந்தை அதன்பால் ஈர்க்கப்படுகிறது. இத்தகையான இக்கட்டான சூழலில் ஒரு ஆன்மீகச் சூழலின் மூலம் உயரிய சிந்தனைகளை மாணவரிடம் செலுத்தி நாளைய தலைவர் ஆகும் உங்களுக்கு "இலட்சியம் என்ன?", "உண்மை வழி என்ன?", என்பதனை "உணர்வு பூர்வமாக" வலியுறுத்திச் செம்மையான பாதையை மாணாக்கருக்கு எடுத்துரைத்து ஒளிமயமான எதிர்காலத்தினை அவர்களுக்கு அளிப்பது அறநெறிப் பாடசாலைகளே! "வாழ்க்கை" எனும் விடுகதைக்கு விடைகாணுமுகமாக மாணவர்களுக்கு பள்ளிப்பருவத்திலே அவர்களுடன் கை கோர்த்து நிற்பது அறநெறிக் கல்வியே!

மின்சார வேகத்தில் சூழல்கின்ற "கணனி" யுகத்தினில் பண்பாடும் கலாச்சாரமும், சமயமும் முக்கியம் என்பதாலேயே பாடசாலையில் கட்டாயக் கல்வியாகச் "சமயம்" ஆக்கப்பட்டிருப்பினும் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் அதுவும் பரீட்சையில் புள்ளிகளைப் பெறும் நோக்கிலேயே சமயம் கற்பிக்கப்படுவதுண்டு. மாணாக்கரைச் செம்மைப்படுத்தும் நோக்கில் சமயப் புத்தகங்கள் அச்சிடப்படுவதும் நூற்றுக்கு இருபத்தைந்து வீதமே! இவ்வகையான கருத்துக்கள் மாணவர் மனதைச் செம்மைப்படுத்திட உதவாது. ஆகவே அறக்கருத்துகள் மாணவரைச் சென்றடையும் வகையில் கூறி அவர்களைச் சீர் செய்திட அறநெறிப்பாடசாலைகள் அரும்பணியாற்றி வருகின்றன.

"வாழ்க்கைக்கு வளமான கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் வகையில் புத்துணர்ச்சியோடு மாணாக்கருக்கும் புலப்படுத்துவதிந்த அறநெறிக் கல்வியே!"

'திருஞானசம்பந்தர் பாதமலர் தனைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்'

---

## *Few words from the Past Students of the Sunday Religious School, .......*

*.... Serving in the medical camp, attending Satsang on full moon days, participating in decoration works, visiting hospitals and prisons, collecting and distributing money and other necessary items for the needy, ... it was the golden time in my life......*

*- Selvi Poorani Gnanalingam, from Canada*

# மறக்கவொண்ணா நினைவலைகள்

- பருத்தியூர் பாலவயிரவநாதன்

இளவயது ஞாபகங்கள் பசுமையானதும் இனிமையானதும் கூட. சிறு வயதில் ஏற்படுகின்ற நல்ல அனுபவங்களே ஒருவனை வாழ்க்கையில் முழுமையானவனாக்க உதவுகின்றன. நல்ல நண்பர்கள் தொடர்புகள், ஆன்மீகத்தினை வளர்க்கின்ற சத்சங்கங்கள் உடனான ஈடுபாடுகள், ஆன்-மிகப் பெரியார்களை இளவயதிலேயே சந்திக்கும் வாய்ப்புக்கள் என்பன வாழ்வை நன்நெறிப்படுத்த வல்லனவாகும். இதற்கான சந்தர்ப்பங்களைப் பெரியோர் ஏற்படுத்துதல், அவர்களின் தலையாய கடனுமாகும்.

பயிர் விளையும் போதே விதைக்கேற்ப பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். உயி-ரோவியங்களான சிறார்களுக்கும், நற்பழக்க வழக்கங்கள், ஆன்மிக ஈடுபாடு போன்ற உன்னதமான ஊக்குவிப்புக்களை ஆரம்பம் முதலே ஊட்டவேண்டும். ஏனோதானோ என்கின்ற நிலையில் குழந்தை-களை வளர்ப்பதும், ஆரம்பகால நன்நெறி வழிமுறைகளை சொல்லிக் கொடுக்காமல் விடுவதும் மன்னிக்கமுடியாத குற்றமேயாகும்.

எனது மூன்றாவது வயதிலேயே, தகப்பனார் எனது அண்ணாவுடன் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் அறநெறிப் பாடசாலையில் சேர்ப்பித்துவிட்டார். நான் அண்ணாவுடன் போய் வருவேன். கூடப்போய் அங்கு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருப்பேன். அண்ணா என்னைவிட நான்கு வயது கூடியவர். ஆரம்பகால நினைவுகள் சிறுகச் சிறுக என்னைத் தொடும் போது, சில சம்பவங்கள் மறந்து போனாலும் தொடர்ந்து நான் 1952ம் ஆண்டிலிருந்து 1958ம் ஆண்டுவரை கல்வி கற்றமை-யினால் பல விஷயங்கள் இன்னமும் பசுமையாகவுள்ளன.

அப்போதெல்லாம் சமய வகுப்புக்கள் மிஷனின் வெளி விறாந்தையிலும் உள்மண்டபத்திலும் நடைபெற்றன. தற்போது உள்ளது போலவே உபந்யாசங்கள், பெரியவர்களுக்கான வகுப்புக்களும் நடைபெறும். வகுப்புகள் எல்லாமே சுவாமிகளாலேயே நடாத்தப்படும். எனக்கு அவர்களது பெயர்கள் ஞாபகத்தில் இல்லை. எனினும் எங்களுக்கான போதனைகளை மிஷனின் பெரிய சுவாமிகளே வந்து சொல்லிக் கொடுப்பார்கள். எனக்கு அப்போது மிஷன் எனது வீடு போலத்தான் இருக்கும். ஞாயிற்றுக்-கிழமை காலை முதல் நண்பகல் வரை பாட்சாலை நடக்கும். நான் வெள்ளவத்தையில் வசித்ததால் நடந்தே வந்து விடுவேன். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நான் படித்து வந்தேன். அங்கு உயர் வகுப்புக்கள் அப்போது இல்லை. அங்கு கல்வி பயின்ற அனேக இந்து மாணவர்கள் மிஷனுக்குக் கல்வி கற்க வருவார்கள்.

அடிக்கடி சமயப் போட்டிகள் நடப்பதானால், எமக்கு புத்தகங்கள் போன்ற அன்பளிப்புகளும் கிடைக்கும். அனேகமாக இந்தியாவிலிருந்து வருகை தரும் சகல இந்து சமயப் பெரியார்களும் இராமகிருஷ்ண மிஷனுக்கு வந்தே தீருவார்கள். எம்.எஸ்.சுப்புலட்சுமி போன்ற பிரபல வித்துவான்-களை நான் நேரில் பார்த்த அனுபவம் உண்டு. அத்துடன் இந்தியத் தலைவர்களும் வருகை தந்துள்ளார்கள். நாங்கள் சிறு குழந்தைகளாக இருக்கும் போதே இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்கள் எளிய முறையில் எமக்குச் சொல்லிக் கொடுத்ததும், சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவியார் கூறிய போதனைகள், வாழ்க்கை வரலாறுகளை எமக்கு அறிமுகம் செய்தமை, எமக்கு வாழ்க்கையில் கிடைக்கவொண்ணா அரிய பெரும் பேறே-யாகும். அங்குள்ள சுவாமிகள் தமது தெய்வீக வழிகாட்டலில் நாங்கள் நேரிடையாகவே கல்வி கற்றமையை அந்த சகானுபவங்களை வார்த்தைகளால் சொல்ல முடியுமா? அவர்களின் ஆசி எமக்கு

இளவயதிலேயே கிடைத்தமைக்கு நான் இப்பொழுதும் எனது பெற்றோரையே நன்றி-யறிதலுடன் நினைவு கூறுகிறேன். பெற்றோர்கள் தான் பிள்ளைகளுக்கு வழிகாடடி விடல்வேண்டும். விளையாடும் பருவத்திலேயே விளையாட்டுடன், நல்ல போதனைகளையும் ஊட்ட வேண்டும் அல்லவா? திருப்தி என்பது நாம் கண்ட இன்பகரமான நல்லுணர்வில் இருந்து பரிணமிப்பதேயாகும். அகம் விழிப்படைய ஆன்மீக நெறிகள் ஊட்டப்படல் வேண்டும்.

ஐம்பது வருடங்களுக்கு முன்னரேயே ஆரம்பிக்கப்பட்ட அறப்பணியின்போது எமக்கு அறிவுக்கு மட்டுமல்ல, எமக்கு சுவையூட்ட இனிப்புப் பண்டங்களான மைசூர்பாகு, லட்டு போன்றனவற்றைத் தந்து எம்மைப் போஷித்ததைக் கூட என்னால் மறக்க முடியாது. ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயங்கள் கூட என்னுள் அடிக்கடி தாலாட்டும். பேறு என்பது வெறும் செல்வம் ஈட்டுதல் மட்டுமா? இல்லை எம்மைப் பக்குவப்படுத்த முயன்றாலே களிப்பு எம்முடன் கூட வந்துவிடும். சாதாரண வாழ்க்கையில்கூட இன்பமான சூழலை நாம் உண்டுபண்ண முடியும். எல்லாமே நாம் இறைவன் கொடுத்த வரத்தால் அவன் காட்டிய வழியில், எம்மை ஆட்படுத்திய வழியில் செல்ல முனைவ-தாலேயே அருள்நெறி கிட்டும். ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் சேவைகள் அனைத்துமே ஆண்டவனால் எமக்கு அளிக்கப்பட்ட செல்வமேயாகும்.

* *There is no treasure equal to contentment and no virtue equal to fortitude.*
* *Don't be afraid. Human birth is full of suffering and one has to endure everything patiently, taking the name of God. None, not even God in human form, can escape the sufferings of the body and mind. Even Avataras, saints, and sages have to undergo the ordeal of suffering, for they take upon themselves the burden of sins of omission and commission of ordinary human beings and thereby sacrifice themselves for the good of humanity.*
* *One who makes a habit of prayer will easily overcome all difficulties and remain calm and unruffled in the midst of the trials of life.*
* *Certainly you will have doubts. There will be questionings and faith will return again. That is how faith is established.*
* *Is faith so cheap, my child? Faith is the last word. If one has faith, the goal is practically reached.*
* *God cannot be realised without love. Yes, sincere love.*
* *Even the impossible becomes possible through devotion.*
* *As long as a man has desires there is no end to his transmigration. It is the desires alone that make him take one body after another. Rebirth is inevitable so long as one has desires.*

- *Holy Mother Sri Sarada Devi*


# பொன்விழா ஆண்டு ஆரம்ப நிகழ்ச்சிகள்
## 12-08-2001



அதிகாலையில் கோயிலில் பிரார்த்தனை




பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஆரத்தி செய்து
ஆசி பெறப்படுகிறது



ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தாஜி மங்கள விளக்கு ஏற்றி
பொன்விழா நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்கிறார்




ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தாஜி
ஆரம்ப உரை நிகழ்த்துகிறார்



நிகழ்ச்சிகளை ஆசீர்வதிக்கும் இலங்கை
இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள்



ஆரம்பகால ஆசிரியர்கள் மத்தியில் அமர்ந்திருக்கும்
1952ல் சமயக்கல்வி பயின்ற மாணவர்கள்

# பொன்விழாச் செயற்திட்டங்கள்

## ஆளுமைவிருத்தி முகாம்கள்





13 – 16.08.2001 வரையில், மூன்று தினங்கள், உடனுறை ஆளுமைவிருத்தி முகாம்.
இரத்தினபுரி – இறக்குவானைப் பிரதேசத்திலிருந்து 33 மாணவ தலைவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.



குழுச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள முகாம் மாணவர்கள்



பஜனைப் பாடல்கள் பாடி பயிற்சிபெறும் மாணவர்கள்





19 – 21.08.2002 வரையில், மூன்று தினங்கள், 36 மாணவர்கள் கலந்து கொண்ட, உடனுறை ஆளுமைவிருத்தி முகாம். ஆற்றலைப் பெருக்கும் விளையாட்டுக்களில் ஆர்த்துடன் பங்கெடுக்கும் மாணவர்கள்

# பொன்விழாச் செயற்திட்டங்கள்

## மன்னார் பிரதேசத்தில் மேற்கொண்ட பணிகள்






ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி தலைமையில் 30.09.01 முதல் 02.10.01 வரை மன்னாருக்கு விஜயம் செய்த மாணவர்களும் ஆசிரியர்களும் அன்னை இல்லச் சிறுவர்களுக்கு அன்பளிப்புக்கள் பலவற்றை வழங்கினர்






அன்னை இல்லத்தில் வதியும் 30 சிறுவர்களுக்கும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் படுக்கைவிரிப்புக்கள், துவாய்கள், கொப்பிகள், புத்தகங்கள், பென்சில் – பேனைகளும், இல்லத்திற்கு மணிக்கூடும் வழங்கப்பட்டன.





30.09.01 மாலை
உப்புக்குளம் சித்திவிநாயகர் கோயிலில் சற்சங்கம்



01.10.01 மாலை
மன்னார் பைரவர் கோயிலில் சற்சங்கம்


# பொன்விழாச் செயற்திட்டங்கள்
## மன்னார் பிரதேசத்தில் மேற்கொண்ட பணிகள்...

சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் நடந்த பஜனை வகுப்பு, சமயப் பிரசங்கம், ஆன்மிக புத்தகக் கண்காட்சி ஆகியவற்றில் கல்லூரி மாணவர்கள், மன்னார் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.




01.10.01 அன்று மாலை பின்தங்கிய பகுதிகளில் உள்ள ஐந்து அறநெறிப்பாடசாலைகளுக்கு விஜயம் செய்து சிறுசொற்பொழிவு, பஜனை, கலந்துரையாடல் போன்றன இடம்பெற்றன.




திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தில் 250க்கு மேற்பட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்கள், பக்தர்கள் திரண்டு, சற்சங்கத்தில் கலந்து கொண்டனர். ஆன்மிக புத்தகக் கண்காட்சியும் இடம்பெற்றது.

# பொன்விழாச் செயற்திட்டங்கள்

## கொட்டகலை, ஹற்றன்-வெலிஓயாவில் மேற்கொண்ட பணிகள்





13, 14.10.01, இரு தினங்கள், கொட்டகலையில் இலவச மருத்துவ முகாம் நடாத்தப்பட்டது. தேயிலைத் தோட்டங்களில் வாழும் 973 நோயாளர்கள் சிகிச்சையும் உரிய மருந்துக்களும் பெற்றுப் பயனடைந்தனர்.







65பேர் பற்சிகிச்சை பெற்றனர்.
ஏறத்தாழ 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துக்கள் இலவசமாக வழங்கப்பட்டன.





வெலிஓயாவில் தீயினால் வீடிழந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேருக்கு உலர் உணவுப் பொருட்களும் பாடசாலைக்குச் செல்லும் 16 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# பொன்விழாச் செயற்திட்டங்கள்
## புத்தளம் பிரதேசத்தில் மேற்கொண்ட பணிகள்...

16.02.2002 அன்று புத்தளத்தில் நடாத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில்
363 நோயாளர்கள் சிகிச்சையும் உரிய மருந்துக்களும் பெற்றுப் பயனடைந்தார்கள்.




16.02.2002 புத்தளம் பகுதியில் இயங்கும் எட்டு அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த 151 மாணவர்கள்
பஜனைப் பாடல்கள், கதைகள், இந்து சமய விளக்கங்கள் போன்றவற்றைக் கற்றுக் கொண்டார்கள்.





ஆளுமைவிருத்தி விளையாட்டுக்களிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர். அவர்களுக்கு
கொப்பிகள், பேனைகள், சவர்க்காரங்கள், பஜனைப் பிரசுரங்கள் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன.

# யோகக் கலை

- செல்வன் பிரசாத் சண்முகநாதன், வகுப்பு - 13 (2002)

யோகப் பயிற்சி இன்று பலரும் விரும்பும் ஆடம்பர விடயமாக மாறிவருகிறது. உலகமெங்கும் இலட்சக்கணக்கானவர்கள் யோகப்பயிற்சிசெய்ய ஆரம்பித்துள்ளனர். காரணம் என்ன? புதுயுகத்தில் இயந்திர வாழ்க்கை நடத்தும் மனிதனின் இறுக்கங்களை, அழுத்தங்களைச் சரிசெய்ய யோகம் உதவுகிறது. நோய்களைத் தடுக்கவும், பக்க விளைவுகளின்றி சிகிச்சை செய்யவும், புனர்வாழ்வு அளிக்கவும், உடலாரோக்கியத்தை வளர்க்கவும், தொழில்வல்லுனர்கள் தேடும் திறமைகளை வளர்த்துக்கொள்ளவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் யோகப்பயிற்சி உதவுவதால் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரையும் இது கவர்ந்து இழுக்கிறது. அவர்கள் இந்த மேலோட்டமான நன்மைகளை மட்டுமே கருத்திற் கொண்டு யோகாசனத்தைச் செய்யத் தலைப்படுகின்றனர்.

இவர்களிற் பலர் அதன் உயர்ந்த நோக்கத்தையும், ஆழமான நன்மைகளையும் விளங்கிக் கொள்வதில்லை என்றுதான் கூறவேண்டும். எனினும் சிலர் யோகப் பயிற்சியின் ஆழமான நன்மைகளை உணரத் தொடங்கியுள்ளனர். அமைதி, ஆனந்தம், ஆற்றல், ஆரோக்கியம், சக்திச் சிக்கனம், நளினம் முதலியன அடங்கிய பூரண வாழ்க்கை விஞ்ஞானமாக யோகம் மக்கள்முன் மலர்ந்து வருகிறது. யோகம் என்பது சித்திகளை அடையவோ, கயிற்று வித்தை செய்யவோ, முன்பு குறிப்பிட்ட மேலோட்டமான நன்மைகளை அடையவோ அல்ல என்று மக்களுக்குத் தெரிய வந்துள்ளது.

நோய்கள் வருவதற்கு காரணம் என்ன? சரியான தேக அப்பியாசமின்மையால் நாடிகள் கல்போல் இறுகிவிடுகின்றன. இதனால் இரத்த ஓட்டம், பிராணன்களின் இயக்கம் முதலியவை சரியாக நடைபெறாமல் தடைப்பட்டுவிடுகின்றன. இதனால் நோய்கள் உருவாகின்றன. யோகப் பயிற்சி மேற்கூறிய குறைபாடுகளைப் போக்குவதால், அதன் பயனாக நோய்கள் குணம் அடையலாம் என்பது புதுமையானதல்ல. அதனால் நோய் வந்தபின் யோகப்பயிற்சி செய்யலாம் என்று கருதுபவர்களும் உண்டு. யோகப்பயிற்சி வெறும் தேகப்பயிற்சி அல்லது நோய் தீர்க்கும் மருந்து என்று கருதுவது முற்றிலும் தவறானது.

யோகப் பயிற்சியானது மனிதனுடைய உடல் வளர்ச்சியோடு மட்டும் நின்றுவிடாமல், மனிதனது முழுமையான ஆளுமைவிருத்தியிலும், அதாவது உடல், மனம், அறிவு, ஆன்மிகம் ஆகிய பரிமாணங்களை விருத்தி செய்துகொள்ளவும் உதவுகிறது. யோக விஞ்ஞானத்தின் முக்கிய நோக்கம் தன்னை முழுமையாக உணர்தலும் தன்னை அறிதலும் ஆகும்.

"ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வீக சக்தி ஒளிந்து கிடக்கிறது. தனக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள இயற்கை சக்தியைக் கட்டுபடுத்துவதன் மூலம் அந்த தெய்வீக சக்தியை வெளிக்கொண்டு வருவதுதான் நம் வாழ்க்கையின் இலட்சியம். இதற்காகப் புறவாழ்க்கையிலும் அகவாழ்க்கையிலும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வோம். ராஜ யோகத்தினாலோ, கர்ம யோகத்தினாலோ, பக்தி யோகத்தினாலோ, ஞான யோகத்தினாலோ, ஒன்றாலோ, பலவற்றாலோ, அனைத்தின் உதவியாலோ இந்த இலட்சியத்தை எட்டிப்பிடியுங்கள். சுதந்திரம் அடையுங்கள். இதுதான் உண்மையான சமயம். இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்" என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

நம்முள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொண்டு வருவதற்கு, உடல், மனம், அறிவு, ஆன்மிகம் ஆகியவை ஒருங்கே வளர்ச்சியுற வேண்டும். தன்னம்பிக்கை, கடவுள்

நம்பிக்கை, வலிமை, ஆரோக்கியம், தூய்மை, மன ஒருமைப்பாடு, சுயகட்டுப்பாடு, விவேகம், பகுத்தறிவு, அன்பு, பொறுமை, சத்தியம், நல்லொழுக்கம் முதலிய பண்புகளை ஒருவன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இப்பண்புகளை வளர்த்துக்கொள்ள உதவும் ஒரு சாதனமே யோகப் பயிற்சியாகும். இக்கலை பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னர் வாழ்ந்த எமது ஞானியர்களால் இறையனுபூதியுடன் அனுபவபூர்வமாக பரீட்சிக்கப்பட்டு, வகுக்கப்பட்டு அருளப்பட்டவையாகும்.

பாரதத்தின் பழம்பெரும் விஞ்ஞானங்களில் ஒன்றான யோகக்கலையின் ஆரம்பநிலையில், மனிதன் தானே முயற்சித்து நல்லொழுக்கங்களை வளர்ப்பதும், ஆரோக்கியமான உறுதியான உடலைப் பெறுவதும், மனதைக் கட்டுப்படுத்துவதும் நடைபெறுகிறது. இதன் மூலம் மனிதன், மிருக இயல்புகள் நிறைந்த "பாமர மனிதன்" என்னும் நிலையில் இருந்து வேகமாக வளர்ந்து "பண்பட்ட மனிதன்" என்ற நிலையை அடைகிறான். மேலும் தொடர்ச்சியான யோகப் பயிற்சியானது, அவன் இன்னும் மேன்மைபெற்று, சகல ஆற்றல்களும் நிறைந்த "தெய்விக மனிதன்" என்ற மிகவுயர்ந்த நிலையை அடைவதற்கு உதவுகிறது.

யோகத்தில் வேறுபட்ட பல செயல்முறைகள் உள்ளன. ஆனாலும் இந்த வேறுபட்ட முறைகளுக்கு அடிப்படையாக ஒன்றுமட்டுமே உள்ளது. அது மனிதன் தனது பூரணத்துவத்தை அடைய வழிகாட்டுவதே. அதாவது மனிதன் தனது உடல், மனம், அறிவு, ஆன்மிகம் ஆகிய பரிமாணங்களை வளர்ப்பதே.

யோகக் கலையின் முக்கிய பிரிவுகள்:

- ☞ பிரார்த்தனை - மனதை ஒருநிலைப்படுத்துவதற்கான பயிற்சிகள்.
- ☞ சிதிலி கரண வியாயாமம் - உடலைத் தளர்த்துவதற்கான பயிற்சிகள்.
- ☞ இந்திரிய வியாயாமம் - செயல், அறிவுப் புலன்களுக்கான பயிற்சிகள்.
- ☞ மூச்சுப் பயிற்சிகள் - சுவாச மண்டலத்திற்கான பயிற்சிகள்.
- ☞ கிரியாக்கள் - உடலைத் தூய்மைப்படுத்தும் பயிற்சிகள்.
- ☞ சூரிய நமஸ்காரம் - ஆசனங்களையும் பிரணாயாமத்தையும் இணைக்கும் பயிற்சிகள்..
- ☞ ஆசனங்கள் - உடலை வலிமையாக்கும் பயிற்சிகள்.
- ☞ பிரணாயாமம் - மனம், அறிவு, ஆற்றல் வளர்ச்சிக்கு அடிப்படையான பயிற்சிகள்.
- ☞ பந்தங்கள், முத்திரைகள் - பிராணாயாமப் பயிற்சிகளின்போது பயன்படும் பாதுகாப்புப் பூட்டுகள், உயர்நிலை நுணுக்கப் பயிற்சிகள்.

யோகக் கலையைத் தொடர்ந்து செய்யும் பொழுது மனதில் ஒரு மாற்றம் ஏற்படுகின்றது. வெற்றி-தோல்விகட்கு அப்பாற்பட்ட சமநிலை ஏற்படுகின்றது. இதனால் உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் போய் வெடிக்கும்நிலை மாறி, அவை அனைத்தும் மனித ஆளுகைக்கு உட்படுகிறது. சிந்தனையில் தெளிவு ஏற்படுகின்றது. ஆழ்மனத்தில் உறங்கிக் கிடக்கும் பல்வேறு சக்திகள் புதுப்பொலிவோடு பரிமளிக்க, தைரியமும் தன்னம்பிக்கையும் கொண்ட படைப்பாற்றல் மிக்க மனிதர்களை உருவாக்குகிறது.

யோகத்தின் முக்கிய அங்கமும், அனைவரும் எப்போதும் செய்யக் கூடியதுமான சூரிய நமஸ்காரத்தை சற்று விரிவாக நோக்குவோம்.

சூரிய நமஸ்கார மகிமை:

சூரிய நமஸ்காரம் ஆசனங்களையும், பிரண்ாயாமத்தையும் இணைக்கிறது. இது சிதிலிகரண வியாயாமத்துக்கும் யோகாசனங்கட்கும் இடைப்பட்ட ஒரு பயிற்சியாகும். இதனால் உடலில் வளைந்து கொடுக்கும் தன்மை ஏற்படுகிறது. ஆசனமும் பிரணாயாமமும் செய்ய உதவுகிறது.

சூரிய வணக்கத்தின் மகிமையை அறிந்துதான் நம் முன்னோர்கள் தினமும் சூரிய உதயத்திற்கு முன்னர் எழுந்து, குளித்துவிட்டு முதலில் சூரியனுக்கு மந்திரங்களுடன் வணக்கம் செய்து வந்தனர். பிறகுதான் ஏனைய வேலைகளைக் கவனிக்கத் தொடங்குவார்கள். ஆதலால் தான் அவர்கள் நல்ல திடகாத்திரம் உடையவர்களாகவும், நீண்ட ஆயுள் உடையவர்களாகவும், ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தனர். தற்போதுகூட சிலவீடுகளில் முதியவர்கள் சூரியவணக்கம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளதை நாம் பார்க்கலாம். பொதுவாக அவர்களுக்குள்ள ஞாபகசக்தியும், தேகசக்தியும், வயதில் இளைஞனாக இருப்பவரிடம்கூட இருப்பதில்லை. ஆனால் பலர், வயதானவர்களின் ஆசார அனுஷ்டானங்களையும், பழக்கவழக்கங்களையும் பரிகாசம் செய்கின்றனர். சிந்தித்துப் பார்த்தால், அந்தப் பழக்கவழக்கங்கள் யாவும் தேக ஆரோக்கியத்தின் பொருட்டும், ஆன்ம சக்தியின் பொருட்டும் ஏற்படுத்தப்பட்டவை என்பது விளங்கும்.

தற்போது மேலைநாட்டவர்கள் காலையில் சூரிய உதயத்தின் போது, சூரிய ஒளி உடம்பில் பட்டால் நல்லது என்றும், சூரிய ஒளியில் அநேக விட்டமின்கள் இருப்பதாகவும், அவை நம் தேக ஆரோக்கியத்திற்கு உகந்தன என்றும் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். சூரிய ஒளியின் மகிமையைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு இவ்வளவு காலம் சென்றுள்ளது. ஆனால், நம்முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சூரியஒளியின் மகிமையைக் கண்டுபிடித்துத்தான், விடியற் காலையில் சூரியஒளி தம்மீது படும்படியாக கிழக்குநோக்கி நின்று கொண்டு, மந்திர உச்சாடனங்களைக் கூறி, சூரிய நமஸ்காரம் செய்து வந்துள்ளனர் என்பதை நாம் உணரவேண்டும்.

சூரிய பகவானுடைய ஜோதியைக் கிரகித்துக் கொண்டு, நமக்கு நன்மை செய்யக்கூடிய அநேக கேந்திர மையங்கள் நமது தேகத்தில் உண்டு. அந்தக் கேந்திரங்களின் மூலாதாரமான சூரியசக்கரம், நம்முடைய நாபியிலே இருக்கிறது. நாம் உண்ணும் ஆகாரத்தை எரித்து, அதில் இருந்து தேவையான சக்திகளைப் பெறும் வல்லமை அச் சூரிய சக்கரத்திற்கு உண்டு. இதைப் பரிபூரணமாய் வசப்படுத்துகிறவன் சகல வல்லமையையும் அடைகின்றான். சூரிய சக்கரத்தை பரிபூரணமாய் வசப்படுத்துவது பிராணாயாமப் பயிற்சியினால்தான் சாத்தியமாகும். பிராணாயாமத்துக்கு முதற்படி சூரியநமஸ்காரமே ஆகும். சூரியநமஸ்காரத்தால், அச் சக்கரத்தை ஓரளவு பயன்படுத்திவிட முடியும்.

சூரிய வணக்கத்தினால், நாடிகள் இழுக்கப்பட்டு, உரமும் மிருதுவும் வளைவும் பெறுவதால், இரத்த ஓட்டம் சீராக நடைபெற ஏதுவாகிறது. மந்திரங்களை உச்சரித்து சூரிய வணக்கம் செய்து வர, மந்திரங்களின் மகிமையால் மூளைமையச் செயற்பாடுகளைத் தூண்டும் நரம்புகள் ஊக்கம் பெறுகின்றன. வலிமை, சுறுசுறுப்பு, ஆரோக்கியம் போன்றவை அதிகரிக்கிறது.

நவீன உபகரணங்களின் உதவியுடன் செய்யப்படும் உடற்பயிற்சிகளால், மற்றும் கால்பந்து, பட்மின்டன், கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களால் உடலின் சில பாகங்கள் மட்டும் சமநிலையற்ற முறையில் உறுதி பெறுகின்றன. இவற்றால் முக்கிய அங்கமான வயிற்றுக்கும், ஏனைய பல அங்கங்களுக்கும் முறையான பயிற்சி கிடைப்பதில்லை. ஆனால், சூரிய வணக்கம் மூலம் கை, கால், கண், கழுத்து, மார்பு, வயிறு, இடுப்பு, மூலநாடி, மூட்டு முதலிய தேகத்தின் சகல அங்கங்களும் சமநிலையில் உறுதிபெறுகின்றன. இரத்த சுத்தியும் உண்டாகிறது.

மேலும், வயிறு கல்லுப்போல் இருப்பது, வாயுச் சிக்கல், மலச்சிக்கல் போன்ற வயிற்றுக் கோளாறுகள் அகலும். வயிற்று மந்தமும் அகன்று நல்ல பசி எடுக்கும். இடுப்பு பலமின்மை, முகத்தில் உள்ள வியாதிகள், வாய் நாற்றம், பல் நோய்கள், கழுத்துப் பிணிகள், தலைவலி, கிறுகிறுப்பு, இருமல், மூச்சு முட்டல், கண் நோய்கள் முதலிய இன்னும் அநேக வியாதிகள் அகன்றோடும். நியமம் தவறாமலும் சாத்வீக ஆகாரம் உட்கொண்டும், கிரமமாக சூரிய நமஸ்காரம் செய்து வந்தால், விளையக்கூடிய அரிய பலன்களை முழுவதுமாக பட்டியல் போடுவது என்பது சுலபமானதல்ல.

# மேலை நாகரீகத்தின் தாக்கம்

- செல்வி சீரடி தயாநிதி சுந்தரலிங்கம், செல்வி நிவேதிதா மோகன்

மனித இனம் முன்னேற வேண்டுமானால் தனி மனித வாழ்க்கை முன்னேற வேண்டும். இதற்காக விஞ்ஞானத்தின் மூலமும் மெய்ஞ்ஞானத்தின் மூலமும் மனிதன் அறியாமையை எதிர்த்து போராடி அக உலகிலும் புற உலகிலும் புதைந்து கிடக்கும் இரகசியங்களை வென்று வாழ்க்கையில் முன்னேறும் கற்பனையில் கரையற்ற ஆசைக்கடலில் தனது வாழ்க்கைப் படகைச் செலுத்தி தனது தேவைகளைப் பெருக்கி கொள்வதற்கு முயற்சிக்கின்றான். இந்த அடிப்படையில் அமைந்த உலகியல் வாழ்வு பொதுவாக மேலை நாடுகளில் தான் தோன்றியது ஆயினும் அதன் பாதிப்பை இன்று கீழை நாடுகளிலும் காணமுடிகின்றது. கீழை நாடுகளின் வாழ்க்கை முறை மாறி மேலை நாட்டு வாழ்க்கை முறையே பெரிதும் மேலோங்கி நிற்கின்றது. இந்த வாழ்க்கை முறைகளினால் விளைந்துள்ள நன்மை, தீமைகளை அறிவதற்கு நாம் மேலைநாட்டு நாகரீகத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

முதலில் மேலை நாட்டு மக்களின் வாழ்க்கை முறையின் அடிப்படையும் அதன் இயல்புகளையும் நோக்குவோம். மேலை நாட்டு மனிதர்கள் மிகவும் சுயநலமும் நாட்டுப்பற்றும் உடையவர்களாக விளங்கியமையால் சாஸ்திரங்களையும் மதக்கோட்பாடுகளையும் படித்து ஒதுக்கி விட்டு தானே வகுத்துக் கொண்ட ஒரு புதிய பாதையில் சென்று, புலன்களுக்கு எட்டாத ஆன்மீகநெறி சம்பந்தமான எதையும் நம்புவதோ ஏற்றுக்கொள்வதோ இல்லை. என்றும் அனுமானம் ஆராய்ச்சி போன்ற புலனறிவால் மட்டுமே உண்மையைக் கண்டறிய முடியும் என்றும் கருதிய மேலைநாடு, "நான்" என்ற உணர்வு கூட புலன்களின் உலகைச் சேர்ந்ததே என்ற நிலைப்பாட்டுடன் வாழ்ந்த சமுதாயமாக விளங்குகின்றது. இவ்வாறு பௌதீக விஞ்ஞானத்தில் அதிக முன்னேற்றத்தைக் கண்டபோதிலும் ஆன்மவிஞ்ஞானத்தில் மேலைநாட்டு மக்களால் அதிக முன்னேற்றத்தை அளிக்கமுடியவில்லை. புறபொருட்களில் மாத்திரமே நாட்டம் கொண்ட மேலைநாட்டினா ஆன்மீகப் பாதையில் இருந்து விலகி தங்களை உடல் என்று கருதுகின்ற உலகியல் நாளுக்கு நாள் மூழ்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் கீழைத்தேய நாட்டவர்களோ உலகியல் பற்றின்மையைத் தவிர்த்து ஆன்மீகப் பாதையில் செல்வதற்கே பெரிதும் விரும்புகின்றனர். மொத்தத்தில் மேலை நாட்டின் மோகம் காரணமாக கீழைத்தேய நாட்டவர்களின் சிறந்த ஆன்மீக நெறியிலும் பெரிய மாற்றம் நிகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது. எனவே கீழைத்தேயவர்களின் தற்போது மெய்ஞ்ஞானமின்றிய நிலையே காணப்படுகின்றது.

அடுத்து மேலைநாட்டு வாழ்க்கை, பணத்தை அடிப்படையாகக் கொண்டதும், ஆணவமிக்க தீயகுணங்களைக் கொண்டும் விளங்கியது. மேலைநாட்டு சமுதாய மக்களின் உடைகள், பழக்கவழக்கங்கள், கலாச்சாரப்பண்பாடுகள் போன்றவற்றிலும் கீழைத்தேய நாட்டு மக்கள் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். மேலைநாட்டவரின் அரைகுறை ஆடைகள் கீழைத்தேய மக்கள் மத்தியிலும் ஆதிக்கம் செலுத்துவதால் இந்துசமய மக்கள் தங்கள் கலாச்சாரப் பண்பாடுகளை மீறி நடக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. கோயிலுக்கு மேலை நாட்டவர்கள் தங்கள் பாணியிலேயே பாதணிகளை அணிந்தவண்ணம் வருவதால் இந்துசமய ஒழுக்கம் பாதிக்கப்படுகின்றது. பெரியோரை மதித்து வரும் தன்மையும் அவர்களிடத்தில் இல்லை. மாமிசம் உண்ணும் வழக்கமும் மதுபானம் அருந்தும் வழக்கமும் மேலைநாட்டவர்களிடையே அதிகம் காணப்படுகின்றமையால் கீழைத்தேய மக்களும் அவர்களின் பழக்கங்களையே பின்பற்ற முனையும்போது இந்து சமயத்திற்குப் பெரும் தீங்கு விளைவிப்பதாக அமைகின்றது. மற்றும் தூய

கலைகளை நோக்குமிடத்தும் மேலைத்தேய நாடுகளுக்கும் கீழைத்தேய நாடுகளுக்கும் இடையே பெரும் வேற்றுமை காணப்படுகின்றது. கீழைத்தேய நாடுகளில் இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலையம்சங்கள் காணப்படுகின்றன. இவையனைத்தும், இறைவனுடன் தொடர்புடைய புராணக்கதைகளையும் திருவிளையாடல்களையும் அருவம் உருவம் அற்ற இறைவனின் குணாதிசயங்களையும் எடுத்துக் கூறும் ஒரு ஆன்மீக சாதனமாகச் சிறந்து விளங்குகின்றது. ஆனால் மேலைநாட்டுக் கலைகளோ அப்படியல்ல, அவைகள் கேளிக்கை, களியாட்டம் போன்ற தன்மையுடையனவாகவும், ஆன்மீகத்தைத் தவிர்த்து உலகியல் இன்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கலைகளாகவும் விளங்குகின்றன. இதனால் மேலைத்தேய நாட்டவர்களின் உலகியல் இன்பம் சம்பந்தமான கலைகள் கீழை நாட்டவர்களிடமும் சிறிது தாக்கத்தை ஏற்படுத்தியதன் காரணமாக, கீழைநாட்டவர்களுக்கும் ஆன்மீகக் கலைகளை விடுத்து மேலைநாட்டவர்களின் மோகத்திற்கு அடிமையானவாகளாகக் காணப்படுகின்றனர். இதனால் இந்துப்பண்பாட்டுக் கலைகள் நிலைகுலைந்து வரும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றது. கீழைத்தேய கலைகள் தெய்வீக உணர்வைப் பரப்பி உள்ளத்தை உயர்த்தி நிற்கின்றன. ஆனால் மேலை நாட்டுக் கலைகள் பார்த்த உடனேயே கீழ்மையான நிலைக்கு இழுத்துச் செல்கிறது.

மேலைநாட்டவர்களின் விஞ்ஞான ஆராய்ச்சிகள் சில நன்மைகளைத் தரினும், அதன் பயனாக உருவான அழிவைத் தரும் போராயுதங்களின் உற்பத்தியும் விற்பனையும் உலகெங்கும் தொடர்ச்சியான அழிவை ஏற்படுத்தியே வந்துள்ளன. மேலும், ஆயுதங்களை விற்பனை செய்து வருமானம் ஈட்டவேண்டும் என்பதற்காகவே உலகின் பல பகுதிகளில் பிணக்குகளையும், போர்களையும் ஏற்படுத்தும் மனோநிலை மேலை நாட்டவருக்கே உரியது.

சமுதாய அடிப்படையில் மேலைத்தேய நாட்டவர்களின் உறவுகளுக்கிடையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கலப்புத் திருமணங்கள் கீழைத்தேய நாட்டவர்களிடத்து ஏற்படும் ஒரு பெரிய தாக்கம் ஆகும். அதையடுத்து பெற்றோர்களுக்கிடையே அன்பு பெரிதும் பாதிப்படைகிறது. அதாவது மேலைநாட்டில் பெற்றோர்கள் ஓயாத வேலையினால் சிறு வயதிலேயே குழந்தைகளை கவனிக்காது பராமரிப்பு விடுதிகளில் விட்டுச் செல்வதால் குழந்தைகளின் நிலை பாதிப்படைகிறது. பெற்றோர்களின் அன்பில்லாமல் ஒரு விரக்தியான எதிர்காலத்தைக் கொண்ட குழந்தையாக வளர்வதற்கு வாய்ப்பாகிறது. அதே நிலை கீழைத்தேய நாட்டவர்களிடமும் கடைப்பிடிக்கப்பட்டு பெரும் தாக்கத்தை உண்டு பண்ணுகிறது.

மேலை நாட்டு நாகரீகத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட ஓரிரு நன்மைகளும் இருக்கவே செய்கின்றன. நன்மைகள் என்று சொல்லும் போது மேலை நாடுகள் அபிவிருத்தி அடைந்த தன்மையை சிறப்பாகக் குறிப்பிடலாம். அதாவது மேலை நாட்டிலே கல்வி அறிவும் செல்வமும் ஒருங்கே காணப்படுவதனால் அங்கு ஆராய்ச்சிகளும். கண்டுபிடிப்புக்களும் மிகுந்து காணப்படுகின்றன. சிறப்பாக சொல்லப் போனால் கணினி போன்ற இயந்திர சாதனங்களும் மருத்துவ கண்டுபிடிப்புகளும் விஞ்ஞானப் புரட்சிகளுமே மேலை நாடுகளின் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைகின்றன. இவ்வாறு நமது நாடும் அபிவிருத்தி அடைந்த நாடாக வருவதற்மு மேலை நாட்டுப் பாணியில் உள்ள நல்ல விடயங்களைப் பின்பற்றலாம். நமது நாடு மீண்டும் உண்மையிலேயே ஒரு சிறந்த நாடாகத் திகழ வேண்டுமானால் வெளிநாடுகளிற்கு நாம் பயணம் செய்தாக வேண்டும். பிற நாடுகளில் சமுதாய இயந்திரம் எவ்வாறு இயங்குகின்றது என்பதைப் பார்க்க வேண்டும். பிறமக்களின் சிந்தனைப் போக்குடன் தங்கு தடையின்றி வெளிப்படையாக தொடர்பு கொள்ளவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் தனது கடிதத்தில் கூறுகிறார். மற்றும்

மேலை நாட்டவர்களின் கடுமையான உழைப்பும், குறிக்கோளை நிறைவேற்றுவதற்குரிய விடாமுயற்சியும் கீழைத்தேய நாட்டவர்களுக்கு ஒரு படிப்பினையாக அமைகிறது. இவ்வாறே மேலை நாட்டவர்களின் தாக்கம் கீழைநாட்டவர்களுக்கு சில நன்மையாகவும் விளைகின்றது.

இப்படியாக மேலைநாட்டு நாகரீகத்தின் பல்வேறு தாக்கங்களில் பெருமளவு தீங்கு விளைவிப்பனவாகவும் ஒரு சில நன்மை அளிப்பவையாகவும் விளங்குகின்றன.

ஆகவே நீரை விடுத்து பாலை உண்ணும் அன்னத்தைப் போன்று நாமும் தீமைகளை விடுத்து நன்மைகளைப் பருகுவோமானால் வாழ்க்கையில் உயர்வடையலாம்.

* *தான் கேட்பதைத் தருவார்கள் என்ற உறுதியுடன் அல்லவா ஒரு குழந்தை தன் தாய் தந்தையரிடம் கேட்கிறது, அதுபோல உங்களுக்குத் தேவையானவற்றை இறைவனிடம் கேளுங்கள்.*
* *கள்ளம் கபடமற்ற உள்ளத்துடன் இறைவனிடம் பிரார்த்தனை செய், அந்தப்பிரார்த்தனையை இறைவன் கேட்பான்.*
* *நீ எங்கிருந்து எச்செயலைச் செய்தாலும் மனதை மட்டும் சதா சர்வ காலமும் தெய்வத்தின் திருவடியில் வைத்திரு.*
* *நம்பிக்கை வை. இறைவனை நம்பியிரு. அந்த நிலையில் நீயே எதையும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. அன்னை காளி உனக்காக எல்லாம் செய்து தருவாள்.*
* *திரும்பத் திரும்ப மனமே நீ தேவி துர்கை பெயர் கூறு. கரும்பின் இனிய அப் பெயரை காலம் முழுவதும் நீ பாடு.*
* *எல்லார் உள்ளத்திலும் இறைவன் இருக்கின்றார். ஆனால், பக்தன் ஒருவன் நல்லாரோடு மட்டும் இணக்கம் கொள்ள வேண்டும்.*
* *வெறும் ஏட்டுக் கல்வியால் மனிதனுக்கு ஆவதென்ன? பிராத்தனையும் ஆத்மசாதனமும் அவனுடைய முன்னேற்றத்திற்கு அவசியமானவை.*
* *ஒருவன் எப்போதும் உண்மையையே பேசுகிறவனாக இருந்தால் அல்லாமல் உண்மையே உருவான இறைவனைக் காண முடியாது.*

**- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்**

அகில இலங்கை மட்டத்திலான கட்டுரைப் போட்டியில் (மேற்பிரிவு) முதற்பரிசினை வென்ற கட்டுரை

# சுவாமி விவேகானந்தர் காட்டிய சமுதாயக் கடமைகள்

- செல்வி ரஜிலேகா அம்பிகாவதி, இராமகிருஷ்ணா அறநெறிப்பாடசாலை, மண்டூர்.

எல்லையற்ற ஆன்மீகக் கருத்துக்களின் கருவூலமாக விளங்கிய விவேகானந்த சுவாமிகள் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனச் சமுதாயக் கடமைகளை விரிவாக வெளிப்படுத்தி நடைமுறைப்படுத்திக் காட்டியுள்ளார். சீலம் பல ஒருங்கே வாய்க்கப்பெற்ற சுவாமிகள், நல்லொழுக்கம், கல்வியறிவு, வீரம், துணிவு, அஞ்சாமை, அடக்கம், பணிவு, அன்பு, கருணை, ஜீவகாருண்யம், சமய வாழ்வு, ஆன்மீக சிந்தனை, போன்ற நல்லியல்புகளைப் பின்பற்றும் சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பத் தன் இறுதி மூச்சுவரை உழைத்த உத்தமராவார்.

"மக்கட் தொண்டே மகேசன் தொண்டு" என்னும் சித்தாந்தத்தை விளக்கிக் காட்டி- யுள்ளார். இவர் வாழ்ந்த காலம் இந்திய மண்ணை அந்நியர் அடிமைப்படுத்தி ஆட்சி செய்த காலம். சமுதாயம் பலபட்ட கோணங்களிற் சிதறிச் சின்னாபின்னமாக்கப்பட்ட காலம். மக்கள் ஆங்கில மோகத்திலும், அறியாமையிலும், அடிமைத்தனத்திலும் ஆழ்ந்த காலம். இருளில் மூழ்கிய இந்திய சமுதாயத்தை ஒளிக்குக் கொண்டுவர விடிவெள்ளியெனப் பிரகாசித்தார் சுவாமி விவேகானந்தர்.

சமயங்கள் அனைத்திற்கும் தாய்ச் சமயமாக திகழ்வது இந்து சமயம் என்பதனை உலகனைத்திற்கும் புகட்டிய பரமாசாரியர் அவர். மதக் கொள்கைகள் அனைத்தையும் தமது வாழ்வின் வாயிலாக சமரசப்படுத்தியுள்ளார். ஒவ்வொருவரும் தமக்குப் பொருந்திய மதத்தைப் பின்பற்ற வேண்டும். ஆனால் அன்பை மறைக்கும் மதவெறி என்ற நோய்க்கு இடங்கொடுக்கலாகாது. வேறுபடும் சமயங்களின் வாயிலாக விளங்குவது ஒரே பரம்பொருள். இதைச் சமுதாயம் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு சமுதாயமும் சிற்றின்பம் தரும் ஆசாபாசங்களில் இருந்து விடுபட்டு பொறாமையும் சந்தேகமுமின்றி நன்மை செய்ய முயலும் அனைவருக்கும் உதவுதல் வேண்டும்.

ஐக்கிய வாழ்வின் அவசியத்தைச் சமுதாயத்திற்கு வலியுறுத்தும் நோக்கத்தோடு கொல்கத்தாவில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தை நிறுவினார். பரமார்த்திக வாழ்வும் பரோபகாரச் சேவையும் அதன் நோக்கங்களாக அமைந்தன. இந்த உயர்ந்த நோக்கத்துடன் சுவாமிகள் தொடங்கிய சங்கமானது இன்றைக்கும் உலகெங்கும் பரவிப் பணியாற்றி வருகின்றதென்பது நாடறிந்த விடயமாகும். ஸ்ரீ இராமகிருஷ்ண மடங்களுக்கொல்லாம் தலைமை மடமாகத் திகழ்ந்து வருகின்ற இந்த இஸ்தாபனத்தைக் குறித்துச் சுவாமிகள் பின்வருமாறு பகர்ந்துள்ளார்.

"ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் தனது புனித வாழ்விலே விளக்கிக் காட்டிய சர்வமத சமரசம் எப்பொழுதும் இம்மடத்தின்கண் திகழும் மனிதனுக்குப் புத்துயிர் அளித்து, அவனை மேல்நிலைக்குக் கொண்டுவரவல்ல பரந்த எண்ணங்களே இங்கு புகட்டப்படும். சாந்தம், அன்பு, அமைதி, அனுதாபம், போன்ற சீரிய பண்புகளே மங்களகரமாக இங்கிருந்து உலகெங்கும் வியாபிக்கும்."

இதனைத் தொடர்ந்து சமுதாய நோக்கோடு சென்னையில் மயிலாப்பூரில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் நிறுவப்பெற்றது. வங்காளத்தில் மூர்ஷிதாபாத்தில் அனாதைகளுக்குக் குருகுல ஆச்சிரமமும், கொல்கத்தாவில் நிவேதிதை பெண்பாடசாலையும் நிறுவப்பட்டன. இவற்றைத் தவிர பத்திரிகைகளும் வெவ்வேறு பாஷைகளில் வெளியாகின. 'பிரபுத்த பாரதம்' என்னும் ஆங்கில மாதாந்தப் பத்திரிகை மாயாவதி ஆச்சிரமத்திலிருந்து பிரசுரிக்கப்பட்டது. 'உத்போதம்' அதாவது 'நல்லறிவு' என்ற

பத்திரிகை வங்காள பாஷையில் கொல்கத்தாவினின்றும் பிரசுரிக்கப்பட்டது. இவை வாயிலாக உயர்ந்த எண்ணங்களையும் நன்மை பயக்கும் கருத்துக்களையும் வெளியிட வேண்டுமென்பது சுவாமிகளின் கொள்கை. காசி போன்ற சேத்திரங்களில் யாத்திரிகர்களின் பிணியைப் போக்கு-வதற்காக வைத்தியசாலைகளும் சில இடங்களில் நிறுவப் பெற்றன. மருந்தளித்து, உணவளித்து, உடையளித்து, கல்வியளித்து மக்களை மெய்யன்போடு பராமரிப்பது கோயிலில் புஷ்பம் சாத்திக் கடவுளை வணங்குவதிலும் மேலானது என்பது சுவாமிகளின் கருத்து. நரரை நராயண சொரூபமாக எண்ணிப் பணிவிடை செய்வது சிறந்த கடவுள் வழிபாடாகும். எனச் சமுதாயக் கடமைகளைத் தொடர்ந்தார்.

தாய் நாட்டை உய்விக்கச் சுவாமிகள் சமுதாயத்திற்கு விடுத்த அறிவுரைகள் பின்வருமாறு அமைகின்றன.

> "தூய்மையை அணிகலனாகக் கொண்டுள்ள ஆடவர்களும் மகளிர்களும் பல்லாயிரம் பேர் தொண்டர்களாக வெளிவர வேண்டும். அவர்கள் தளர்வுறா ஊக்கம் வாய்க்கப் பெற்றிருப்பதோடு இறை விசுவாசத்தில் நம்பிக்கை கொண்டு சிங்கம் போன்று அஞ்சா நெஞ்சம் படைத்திருப்பார்களாக. எளியார் மாட்டு இரக்கமும், வலியார்களால் மிதியுண்டு வறுமை வாய்பபட்டுக் கிடப்பவர்கள்மீது அனுதாபமும் கொண்டுள்ள தொண்டர்கள் தேசமெங்கும் சென்று திருப்பணியாற்ற வேண்டும். பாமரர்களின் பரிதாப நிலையைப் போக்கி, உள வலிவும் நம்பிக்கையும் அவர்களுக்கு ஊட்டிவைத்துச் சமுதாயத்தில் உயர்ந்ததும் சமத்துவமுடைய-துமான பதவியை அவர்களுக்கு ஊட்டி வைப்பது இப்புனிதர்களது பரந்த நோக்கமாயிருக்க வேண்டும்...".
>
> "இதைத் தொடங்குகின்ற நாமே இதைப் பூர்த்தி செய்யாவிடினும், நம்மைப் பின்பற்றி வருபவர்கள் இக்கடமைகளைத் தொடரும் வகையில் உயிர் வாழ்ந்திடினும் சரி, பட்டினிகிடக்க நேரிடினும் சரி, மாண்டிடினும் சரி, கடவுளை நம்பி முழுமனதுடன் காரியத்திலே பிரவேசிப்போமாக...".
>
> "வீடு வீடாகச் சென்று கல்வியறிவைப் புகட்டுங்கள். சமூக சேவையில் பூரண திருப்தி கொள்ளுங்கள். ஏழைமக்கள் தான் நாம் வணங்கும் கடவுள். அவர்களுக்கு கல்வியில்லை; இடையறாது ஏழைமக்களைப்பற்றி எண்ணுங்கள் அவர்களுக்காக உழையுங்கள் கடவுளை வணங்குங்கள். இங்ஙனம் செய்யின் இறைவன் உங்களுக்கு வழிகாட்டி வைப்பான். ஏழைகளுக்காக யார் உள்ளம் கசிந்துருகிக் கண்ணீர் சொரிகின்றார்களோ அவர்களே மகாத்மாக்கள். ஏழைகளை வாட்டி வருத்திச் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துபவர் துரோகிகள்" என்று கூறுகின்றார்.

"நவீன இந்தியா" என்ற கட்டுரையில் உலக சமுதாயத்தை விளித்துக் கூறுகின்றார். அறிவிலிகள், வறியவர், கல்லாதவர், சக்கிலியர், பறையர்கள் எனப்படுவோர் எமது உற்றார், உறவினர், உடன்பிறந்தோர் என்பதை மறத்தலாகாது. அஞ்சுதல் அறியாத நெஞ்சம் படைத்த சமுதாயமே! ஆண்மை கொள், துணிவு கொள், உடுக்கக் கந்தையொன்றே போதுமானது. நீங்கள் வாழும் சமுதாயமே உங்கள் உயிர், உங்கள் கடவுள், உங்கள் முதுமைக்குரிய சுவர்க்க-மாயிருப்பதும் சமுதாயமே.

தாயும் தாய்நாடும், தாய்மொழியும் இவ்வுலகில் ஈடிணையற்ற செல்வங்கள். அவற்றை நேசிக்கும் பண்பு சுவாமிகளிடம் நிறைந்திருந்தது. தேசாபிமானத்தைப் பழக்கத்தில் கொண்டு வருவதற்கு தியாகமும் திருத்தொண்டும் தேவையென்பதே சுவாமிகளின் சித்தாந்தம்.

தன்னை வலியவன் என்றும் எல்லாம் வல்லவனென்றும் எவன் எண்ணுகின்றானோ அவன் அக்கணமே பேராற்றலையும் உயர்வையும் எய்துகிறான். வாழ்வானது மனம் போல மாங்கல்யமாயிருக்கின்றது. மக்கள் அகத்தே தெய்வத்தன்மை புதைந்து கிடக்கின்றது. அதை அவர்கள் உணர்ந்து, அறிந்து, ஓங்குமாறு செய்ய வேண்டும். இதற்காகவே சுவாமிகளும், சமுதாயமே! "எழுமின்! விழிமின்!! கருதிய கருமம் கைகூடும் வரை அயராது உழைமின்!!!" என்று உத்வேகம் அளிக்கின்றார். சுவாமிகள் காட்டிய வழியில் சமுதாயம் துலங்கட்டும்.

## *Few words from the Past Students of the Sunday Religious School, .......*

*....... Sunday religious school delivers religion in a unique and modern way following Swami Vivekananda's teachings. Understanding present-day needs of the student, it blends the ancient Indian culture with the modern day teachings of the holy trinity. Our Sunday school has acted as a medium to transmit these great teachings to the young minds. Saiva sidhantha, Vedanta, Vedic Slokas, Bhagawad Geeta, Teachings of great saints and rishis and many more great aspects of Hinduism are introduced to the young fertile minds. They are taught in a professional way by well-trained teachers with the guidance of the monastic members of the Ramakrishna order. We could feel the teachings of Guru parampara from Adi Shankara to Sri Ramakrishna to Swami Vivekananda flowing through the monks of the Ramakrishna Mission to the teachers and spreading in the society.*

*Sunday school introduced me Gurumaharaj, Holy Mother and Swamiji who are my guiding light and driving force. In other words Gurumaharaj chose Sunday school to reveal himself to me. There onwards he makes me realize that he is directing my life to progress in a spiritual path while living in this society.*

*Gurumaharaj's life and teaching has made me to lead a good life understanding Hinduism in a deeper way. Sunday school has made this possible. It has made me to study more and more diving deep into the philosophies of our great religion and culture.*

*Thanks to Sunday school I could understand my religion deeply and also appreciate other paths as way to the supreme god.*

*In short Sunday school has made me a true Hindu who not only practise it with a deep sense of pride but also accepts all other religions. It has made me understand the true meaning of the essence Sri Ramakrishna's teaching Truth is one sages call it by various names".*

*- VARAGUNAN MAHADEVAN*

அகில இலங்கை மட்டத்திலான கட்டுரைப் போட்டியில் (மத்திய பிரிவு) முதற்பரிசினை வென்ற கட்டுரை

# அறநெறிப் பாடசாலை வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

- செல்வி கிருத்திகா சண்முகநாதன், ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தான அறநெறிப்பாடசாலை, வவுனியா.

பாமரனை பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்துவதே மதம். நல்ல பழக்கவழக்கங்களும், சீரிய சிந்தைகளும் சிறிய வயதிலே உள்ளத்தில் விதைக்கப்பட்டுவிட்டால் சமுதாயம் அமைதியாகவும், ஆனந்தம் நிறைந்ததாகவும் விளங்க முடியும். மனித வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு அறநெறிக்கல்வி மிகவும் அவசியம். வளரும் குழந்தையின் உள்ளங்களில் ஆரம்ப காலத்திலிருந்து அன்பு, கருணை, உண்மை, பொறுமை எனும் பண்புகளை விதைத்தால் நல்ல பயன்பாடுகளை அவர்களிடமிருந்து பெறலாம்.

இலங்கையில் பாடசாலைக் கல்விக்குப் புறம்பாக, சமய நிறுவனங்கள் சமய கலாசாரக் கல்விகளை வளர்த்து வருகின்றன. 'தம்ம'ப் பாடசாலைகள் பௌத்த விகாரைகளினாலும், ஞாயிறு பாடசாலைகள் கிறிஸ்தவ தேவாலயங்களினாலும், அஹதியா பாடசாலைகள் இஸ்லாமிய பள்ளிகளினாலும், அறநெறிப் பாடசாலைகள் இந்து ஆலயங்களினாலும் இந்து நிறுவனங்களினாலும் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்து கலாசார மேம்பாட்டிற்காக 1986ம் ஆண்டு இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இதன் செயற்பாடுகளில் ஒன்றாக ஏனைய மதப் பிள்ளைகளுக்கு கிடைக்கின்ற சமய, கலாசார மேலதிகக் கல்வி வசதிகள், இந்துசமயப் பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு 1990ம் ஆண்டு அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பாடசாலையில் மாணவர்களுக்கு சமயக் கல்வி 1ம் ஆண்டு முதல் 11ம் ஆண்டு வரை கட்டாயமாகக் கற்பிக்கின்ற போதிலும், இங்கு பரீட்சையை நோக்கமாகக் கொண்டதாகவே சமயக் கல்வி அமைந்துள்ளது. இதன் காரணத்தால் பெற்றுக்கொள்ளப்படும் சமய அறிவு பிள்ளைகளின் நாளாந்த வாழ்வில் மிகக் குறைந்தளவு தாக்கத்தையே ஏற்படுத்துகின்றது. சமயக்கல்வி என்பது பிள்ளைகளின் மனப்பாங்கு, நடத்தைகள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றை ஒழுங்கமைத்து அவர்களது குணநலன்களையும், ஆளுமையையும் விருத்தி செய்வதாகும். அன்பு, நேர்மை, பொறுமை, கருணை, பெற்றோர், மூத்தோர், ஆசிரியர் என்போரைக் கனம் பண்ணுதல், பிறர்நலம் பேணும் சேவை, மனப்பாங்கு தியாக உணர்வு, பணிவு போன்ற உயரிய பண்புகளை சமயக்கல்வி, பயிற்சி என்பவற்றினூடாக பிள்ளைகள் கற்றுக்கொள்ளவும் தம்மை விருத்தி செய்து கொள்ளவும் முடியும். ஆகவே சமய ஒழுக்க போதனைகளினூடாகவும் செயற்பாடுகளினூடாகவும் பிள்ளைகளிடையே உயர்ந்த சிந்தனைகளை வளர்க்கத்தக்க ஆற்றலை அறநெறிப் பாடசாலைகள் கொண்டுள்ளன.

ஒரு சமூகத்தின் அச்சாணி போன்றவர்கள் இளந்தலைமுறையினராவர். "இன்றைய இளஞ்சிறார்கள் நாளைய தலைவர்கள்". இன்றைய இளைஞர் யுவதிகள், நாளை தலைவர்களாகி நாட்டை பரிபாலிக்கும்போது அவர்களுக்கு அங்கு விஞ்ஞான அறிவும், பொது அறிவும் இருந்தால் மட்டும் போதாது. அறநெறி சார்ந்த ஒழுக்கப்பண்புகளும் அவசியமாகின்றன.

இவ்வொழுக்கப் பண்புகளை அறநெறிப் பாடசாலைகள் இளஞ்சிறார்களுக்கு போதித்து வருகின்றது. வெறும் பேச்சில் மட்டுமின்றி, செயற்பாடுகள் மூலமாகவும் மாணவரிடம் ஒழுக்கப் பண்பைப் புகுத்தி வருகின்றன. பிரார்த்தனைகள், பஜனைகள் போன்ற வழிகளினாலும் இளஞ்சிறார்கள் உயர் பண்பைக் கற்றுக்கொள்கின்றனர். இதன் மூலம் அவர்கள் மனித விழுமியங்-

களைப் போற்றிப் பேணவும், இரவு பகல் போல் மாறிமாறி வரும் சுக துக்கங்களையும், வெற்றி தோல்விகளையும், மனோபக்குவத்துடனும் மனவுறுதியுடனும் எதிர்கொள்ளவும், சமூகத்தை நல்ல முறையில் முன்னெடுத்துச் செல்லவும் முயல்வார்கள்.

ஏழைமாணவரும் சிரமமின்றி கற்கும் வகையில் பல புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அறநெறிப் பாடசாலைகளில் வயதிற்கேற்ப பாலர் வகுப்பு, கீழ்வகுப்பு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என்ற அடிப்படையில் பரீட்சைகள், போட்டிகள் நடாத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதனால் கற்கும் ஆர்வம் பெருகும். இந்து சமயப் பண்பாட்டைப் பேணும் முகமாக அறநெறிப் பாடசாலைக்கு வரும்போது ஆண்கள் வேட்டியும், பெண்கள் முழுப்பாவாடையும் அணிந்து வரவேண்டுமென வேண்டப்படுகின்றார்கள். இப்பழக்கத்தை கோயில் உற்சவங்களின் போதும் பேணுகின்றார்கள்.

அறநெறிப் பாடசாலைகள் ஆலயங்களிலே நடைபெறுவதால் ஆலயத் தொண்டு செய்ய வாய்ப்பு கிடைக்கின்றது. அறநெறிப் பாடசாலைகளில் பூமாலை கட்டுதல், கோலமிடல் என்பன கடைப்பிடிக்கப்படுகின்றன. மேலும் ஆலயங்களில் சுத்தம் பேணுதல், அமைதி பேணுதல், ஒழுக்கம் பேணல் போன்றவை பேணப்படுகின்றன.

"இளமையில் கல்வி" என ஔவையார் கூறியுள்ளார். அப்போதுதான் அவர்கள் மனதில் அது பசுமரத்தாணிபோல் ஆழமாய்ப் பதியும். சமயக்கல்வி மாணவர்களுக்கு முறையாக ஊட்டப்படும். அவர்களைப் போன்ற பல்லின மக்கள் வாழும் நாட்டில் சமயக் கல்வி இன்றியமையாததாகும். ஒழுக்கத்தைப் போதிப்பதில் சமயக் கல்வி முன்னிற்கிறது. அறநெறிப் பாடசாலைகள் எமது நல்வாழ்விற்கு வழிகாட்டுகின்றது. அறநெறி முதுநிலைப் பரீட்சையை நடாத்துவதன் மூலம் சான்றிதழ் வழங்கப்பட்டு வேலை வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள உதவுகிறது. எனவே அறநெறிப் பாடசாலைகள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை. ஆகவே மாணவர்களாகிய நாம் அறநெறிப் பாடசாலையில் ஒழுங்காகக் கல்வி கற்று நாட்டிற்கேற்ற நற்பிரஜைகளாக வாழ்வோமாக.

* *This is a great fact: strength is life; weakness is death. Strength is felicity, life eternal, immortal; weakness is constant strain and misery; weakness is death.*
* *It is weakness, says Vedantà, which is the cause of al misery in this world. Weakness is the one cause of suffering. We become miserable because we are weak. We lie, steal, kill and commit other crimes, because we are weak. We die because we are weak. Where there is nothing to weaken us, there is no death nor sorrow. We are miserable through delusion. Give up the delusion and whole thing vanishes.*
* *Are you strong? Do you feel strength? – for I know it is truth alone that gives strength. I know that truth alone gives life, nothing but going towards reality will make us strong, and none will reach truth until he is strong.*
* *I am responsible for my fate. I am the bringer of good unto myself, I am the bringer of evil. I am Pure and Blessed One. We must reject all thoughts that assert to the contrary.*

**- Swami Vivekananda**

அகில இலங்கை மட்டத்திலான கவிதைப் போட்டியில் (மேற்பிரிவு) முதற்பரிசினை வென்ற கவிதை

# ஒன்றே குலம்

- செல்வி சத்தியா வாமதேவன், ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை,
வாழைச்சேனை.

இறைவன் படைத்தது
எல்லோர்க்கும் ஒருகுலம்
மனிதன் வகுத்ததோ,
மானிடர்க்குப் பலகுலம்
இனிவேண்டாம்! பிரிவுநிலை
ஈழத்திரு நாட்டின்,
தேசத்துப் பிள்ளைகள் நாம்!

கானக் கருங்குயிலும்
கண்விழிக்கும் சூரியனும்
ஓரம் பார்த்ததில்லை,
ஒரு பொழுதும் நின்றதில்லை!
ஈனர்களாய் நாம் வாழும்
இழிச் சொல்லும் இனிவேண்டாம்.
வேரோடு மண்டடிக்கும்
ஒற்றுமையை எடுத்துரைப்போம்!

வாழும் மதங்களை நாம்,
வாஞ்சையுடன் வரவேற்போம்.
பாழும் நினைவுகளை
மண்குழியில் தான் புதைத்து,
நேசக் கரம் நீட்டி
நேர் வழியில் கைகோர்த்து
தேசத்தின் விளக்காக
மதங்களை நாம் ஏற்றிடுவோம்!

உதிரத்தின் ஒற்றுமையாய்
உயிர்வாழும் ஜீவன் நாம்.
சாதிகளை தான் வகுத்து
சுதந்திரத்தை தான் பிரித்தோம்.
பேதைமை வேண்டாமடி - இனியும்
பிரித்து விடை கூறாதடி.

பணத்துக்கும் பாதி குணத்துக்கும்
இனத்துக்குள் ஏன் விரிசல்.
பறந்து விடும் சில நாளில்,
மறந்து விடும் சில நொடியில்

இணைத்துக் கொள்! நம் இனத்தை
இனிவேண்டாம், இடைவெளிகள்.

ஒரு கொடியில் பூத்திருந்து
ஒன்றாக திரண்டு நின்று
எறும்பூர்ந்த தடம் பதித்து
எந்நாளும் இறை பணிந்து
ஓரினமாய் நாம் வாழ்ந்து
பார்புகழ வழி செய்வோம்!

தாராண்மையோடும்,
தனியான சமத்துவமும்
பேராண்மை இல்லாத
பேசுகின்ற உரிமைகளும்
ஒரு குடையில் நாமிருந்து
உறவாடும் சுதந்திரமும்
உலகெங்கும் பரவும் வரை
ஓரே குலமாய் வாழ்ந்திடுவோம்.

* *The remedy for weakness is not brooding over weakness, but thinking of strength that is already within them. Instead of telling them they are sinners, the Vedanta takes the opposite position, and says, "You are Pure and Perfect, and what you call sin does not belong to you". Sins are low degrees of Self-manifestation; manifest your Self in high degree. That is the one thing to remember; all of us can do that. Never say, "No"; never say, "I cannot", for you are infinite. Even time and space are nothing compared with your nature. You can do anything and everything - you are almighty.*
* *What makes a man stand up and work? Strength. Strength is goodness, weakness is sin. If there is one word that you find coming out like a bomb from Upanishads, bursting like a bomb-shell upon masses of ignorance, it is the word, fearlessness. And the only religion that ought to be taught, is the religion of* fearlessness.
* *Strength, strength for us. What we need is strength, who will give us strength? There are thousands to weaken us, of stories we had enough....... Every thing that can weaken us as a race we have had for the last thousand years. It seems as if during that period the national life had this one end in view, viz how to make us weaker and weaker, till we have become real earthworms, crawling at the feet of every one who dares to put his foot on us. Therefore, my friends, as one of your blood, as one that lives and dies with you, let me tell you that we want strength, strength, and every time strength.*

- ***Swami Vivekananda***

அகில இலங்கை மட்டத்திலான கவிதைப் போட்டியில் (மத்திய பிரிவு) முதற்பரிசினை வென்ற கவிதை

# ஒருவனே தேவன்

- செல்வி தர்ஷிகா தாமோதரம், நாவலர் அறநெறிப் பாடசாலை, பாண்டிருப்பு.

ஒருவனே தேவன் என்றிடுவோம்
ஒன்றாய் வணங்கி நின்றிடுவோம்
முருகன் முகுந்தன் சக்தியெல்லாம்
முக் கண்ண னென்றே நம்பிடுவோம்!

கஞ்சன் உருவில் அவன் படைப்பான்
கமலன் வடிவில் அவன் காப்பான்
நஞ்சம் உண்ட உருத்திரனாய்
நாடக மாடும் தேவனவன்!

கல்விக்குரிய கலைமகளாய்
கவினார் செல்வத் திருமகளாய்
வில்லிக்குரிய மலை மகளாய்
விளங்கும் தேவன் ஒருவன் தான்!


ஆடும் மயிலின் அழகுமவன்
அமுத வீணை இசையுமவன்
பாடுங் குயிலின் நாதமவன்
பயிலும் நான்கு வேதமவன்!


எண்ணும் எழுத்தும் சொல்லுமவன்
இயலும் இசையும் கூத்துமவன்
பண்ணும் பாட்டும் சந்தமுமவன்
பாவம் ராகம் தாளமவன்!

முன்னைப் பொருட்கும் முன்னவனை
மூவர்க் கரிதாம் மெய்ப் பொருளை
எண்ணிப் பணிந்து வணங்கிடுவார்
இறவார் என்றும் பிறவாரே!

# பொன்விழாச் செயற்திட்டங்கள்


## பூண்டுலோயா, அவிசாவளை, கொழும்பில் மேற்கொண்ட பணிகள்





பூண்டுலோயாவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பஜனைகள், கதைகள், இந்து சமய விளக்கங்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டன. அவர்களுக்கு கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டன.





அவிசாவளையில் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பஜனைகள், கதைகள், இந்து சமய விளக்கங்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டன. அவர்களுக்கு கொப்பி, பேனைகளும் வழங்கப்பட்டன.





புற்றுநோய் மருத்துவ மனைக்கு விஜயம் செய்த மாணவர்கள், அங்கிருக்கும் சிறுவர்களுக்கு இனிப்புகள், விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றை வழங்கினார்கள்.

# பொன்விழாச் செயற்திட்டங்கள்
## இரத்தினபுரி பிரதேசத்தில் மேற்கொண்ட பணிகள்...




28.07.2002 அன்று செனஜோக்கிம் கிராமத்தில் நடத்திய தேவாரம் ஓதுதல், கோலம் போன்ற பல்வேறு போட்டிகளில் 300க்கு மேற்பட்ட கிராம மக்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.



ஆன்மிக உடைப்போட்டியில் கலந்துகொண்ட குழந்தைகளில் ஒரு பகுதியினர்.



ஓட்டம் உட்பட பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்ட கிராம மக்கள் இறுதி நிகழ்ச்சியில்...




04.08.2002 அன்று [கர்வத்தித பொருந்வல] கிராமத்தில் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் ஒன்றான விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து வயதினரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

# பொன்விழாச் செயற்திட்டங்கள்


## இரத்தினபுரி, பிரதேசங்களில் நடைபெற்ற பணிகள்





உடலாரோக்கியத்தையும் மன ஒருமைப்பாட்டையும் வளர்க்கவல்ல விளையாட்டுக்களில்
உற்சாகத்துடன் பங்குகொள்ளும் காவத்தை – பொறுநுவை கிராமத்து மாணவர்கள்





போட்டிகளில் வென்றவர்கள் சுவாமிஜியிடமிருந்து பெறுமதி மிக்க பரிசுகளைப் பெறுகின்றனர்.
யோகாசன செயன்முறை விளக்கத்தை அளிப்பவர்கள் எமது ஞாயிறு சமய பாடசாலை மாணவர்கள்.

## செல்வி வாரிஜஸ்ரீ வேணுகோபாலின் கர்நாடக இசைக்கச்சேரி





பொன்விழாச் செயற்திட்டங்களை சிறப்புற நிறைவேற்றத் தேவையான நன்கொடைகளைப் பெறும் முயற்சி.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

# பொன்விழாச் செயற்திட்டங்கள்

## வவுனியா பிரதேசத்தில் மேற்கொண்ட பணிகள்...







24.08.2002 அன்று வவுனியாவிலுள்ள வலுவிழந்தோர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டது.
சங்கத்தின் ஊழியர் ஒருவருக்கான சம்பளப் பணத்தை சுவாமிஜி கையளிக்கிறார்.





வவுனியா வலுவிழந்தோர் சங்கத்தின் 156 உறுப்பினர்களுக்கும் படுக்கை விரிப்புக்களும், துவாய்களும்,
இனிப்புக்களும் வழங்கப்பட்டன.





24.08.2002 அன்று வவுனியா கோவில்குளத்திலுள்ள ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் சிறுவர் இல்லத்திலுள்ள
48 குழந்தைகளுக்கு இனிப்புக்களும், ஆன்மிக புத்தகங்களும், பணஉதவியும் வழங்கப்பட்டது.

# பொன்விழா செயற்திட்டங்களை நிறைவேற்றவென, பொன்விழா வருடத்தில், மாணவர்கள் வீடுகளில் சிறுகச் சேமித்து, கையளித்த உண்டியற் பணம்.

**Year 1**

| Title | Name | Amount |
|---|---|---|
| Selvan | Aathithan. S | 131.00 |
| Selvan | Archuthan. T | 36.00 |
| Selvan | DharvinKumar | 170.75 |
| Selvan | Dilukshan. S | 426.50 |
| Selvan | Kishoth. K | 141.50 |
| Selvan | Krishanth. K | 89.68 |
| Selvan | Krishigan. K | 84.60 |
| Selvan | Prathap. P | 116.50 |
| Selvi | Aarabi. R | 146.20 |
| Selvi | Kalashini Viveka. V | 14.25 |
| Selvi | Monishi. M | 187.55 |
| Selvi | Navalakshana. S | 75.50 |
| Selvi | Ramya. T | 116.50 |
| Selvi | Saranya. P | 426.60 |
| Selvi | Thivyayini. E | 339.00 |

**Year 2**

| Title | Name | Amount |
|---|---|---|
| Selvan | Abineshwar. G | 34.75 |
| Selvan | Abishayan. R | 188.75 |
| Selvan | Arjun | 171.00 |
| Selvan | Kowshikan. V | 87.05 |
| Selvan | Niranjan. V | 174.00 |
| Selvan | Niroshan. M | 201.16 |
| Selvan | Prabanjan | 87.00 |
| Selvan | Prahalathan. K | 27.25 |
| Selvan | Thiruvaruran. S | 119.25 |
| Selvi | Araniya. S | 98.45 |
| Selvi | Kamsarani. S | 135.25 |
| Selvi | Keshangi. R | 211.11 |
| Selvi | Lalitha. S | 167.25 |
| Selvi | Nivethika | 94.76 |
| Selvi | Rojana. K | 167.00 |
| Selvi | Thanushka | 227.50 |
| Selvi | Tharanya. S | 706.82 |
| Selvi | Yathusha | 500.00 |

**Year 3**

| Title | Name | Amount |
|---|---|---|
| Selvan | Ainkaran. A | 67.00 |
| Selvan | Arun pirasath. P | 450.70 |
| Selvan | Arushan. J | 107.16 |
| Selvan | Diluction | 490.00 |
| Selvan | Gowthaman. G | 167.00 |
| Selvan | Hari Gajan. S | 230.00 |
| Selvan | Harshan. V | 132.00 |
| Selvan | Inthushan. S | 151.65 |
| Selvan | Krishanth. J | 51.00 |
| Selvan | Manoj. T | 147.00 |
| Selvan | Mayurabashan | 197.00 |
| Selvan | Niruthanan. S | 362.50 |
| Selvan | Nithur shan. A | 289.25 |
| Selvan | Pravin. R | 404.00 |
| Selvan | Ragulan. S | 204.50 |
| Selvan | Rajeevan. R | 289.25 |
| Selvan | Senthooran. R | 70.00 |
| Selvan | Seyon. S | 163.95 |
| Selvan | Shivatharshan. | 226.37 |
| Selvan | Sivaganesh. V | 162.25 |
| Selvan | Tharshigan. S | 450.71 |
| Selvan | Yathavan. A | 140.75 |
| Selvi | Akshana. A | 89.75 |
| Selvi | Akshatha. J | 200.00 |
| Selvi | Durka. J | 97.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Selvi | Gyathiri. V | 24.50 | Selvan | Nirshanth | 127.00 |
| Selvi | Jayashri. V | 182.00 | Selvan | Pragalathan. E | 92.25 |
| Selvi | Kosala. V | 92.25 | Selvan | Praveen. | 733.00 |
| Selvi | Kowmika. S | 599.00 | Selvan | Premashanthan | 53.50 |
| Selvi | Lakshana. V | 367.00 | Selvan | Raguram. T | 150.75 |
| Selvi | Lakshini. K | 63.05 | Selvan | Sarangan. S | 101.00 |
| Selvi | Nipajini. S | 98.25 | Selvan | Shangar. K | 308.00 |
| Selvi | Nishevitha.. | 53.60 | Selvan | Sheyon. A | 89.75 |
| Selvi | Pradeepa. L | 114.00 | Selvan | Thanushan | 51.57 |
| Selvi | Ramya. R | 186.50 | Selvan | Thanushan. B | 34.00 |
| Selvi | Rushanthini. K | 128.50 | Selvan | Tharshanan | 82.75 |
| Selvi | Sarangi. M | 611.55 | Selvan | Vipulesh | 256.75 |
| Selvi | Savini. K | 263.50 | Selvan | Vishagan. J | 102.75 |
| Selvi | Shivani. G | 77.00 | Selvan | Vivek. S | 75.00 |
| Selvi | Sivani. N | 84.00 | Selvan | Gangasuthan. N | 520.50 |
| Selvi | Sranya. A | 168.00 | Selvi | Anoja. G | 59.50 |
| Selvi | Subitha. B | 310.75 | Selvi | Elakshi. G | 318.25 |
| Selvi | Thakshiny. S | 295.60 | Selvi | Harshana. R | 257.00 |
| Selvi | Tharangini. M | 143.00 | Selvi | Keerthana. J | 369.86 |
| Selvi | Tharanya. B | 154.61 | Selvi | Kulalalini. S | 105.11 |
| Selvi | Tharinya. S | 288.50 | Selvi | Mayuoori. T | 176.75 |
| Selvi | Thayananthi. J | 67.50 | Selvi | Nivethini. N | 444.06 |
| Selvi | Thivya. B | 304.00 | Selvi | Ratnathulasi. M | 1208.05 |
| Selvi | Thulakshika. S | 155.00 | Selvi | Sharmila. K | 132.00 |
| Selvi | Vashine. H | 529.25 | Selvi | Sinthuja. Y | 36.25 |
| Selvi | Vinija. R | 102.75 | Selvi | Sutharshini | 69.50 |
| Selvi | Yathumini. Y | 85.75 | | | |

**Year 4**

| Title | Name | Amount |
|---|---|---|
| Selvan | Anuragavan. S | 34.45 |
| Selvan | Dushinthsn. A | 120.25 |
| Selvan | Gokulan. S | 268.25 |
| Selvan | Hariharan. | 139.15 |
| Selvan | Janakan | 539.75 |
| Selvan | Jeganpratheep | 463.80 |
| Selvan | Kabilan | 255.00 |
| Selvan | Kareshan. P | 113.50 |
| Selvan | Kokilan. K | 97.50 |
| Selvan | Krishanth. C | 93.00 |
| Selvan | Niroshan. S | 50.00 |

**Year 5**

| Title | Name | Amount |
|---|---|---|
| Selvan | Akilan. R | 120.75 |
| Selvan | Darvin. P | 172.00 |
| Selvan | Kukaraj. T | 213.50 |
| Selvan | Kumanan. P | 244.50 |
| Selvan | Mithushan. S | 195.00 |
| Selvan | Neshanthan. L | 176.25 |
| Selvan | Niruthan. S | 173.50 |
